

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ ஹேமாப்ஜநாயிகாஸமேத ஸ்ரீதேவநாயக பரப்ரஹ்மணே நம: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥


தேசிகநிந்தாநிராக்ருத்யநுபந்த: ॥

[தேசிகநிந்தா நிராகிருதியின் அநுபந்தம்]

திருவஹீந்த்ரபுரம்
திருமலை ஈச்சம்பாடி சடகோபாசாரியர்
எழுதியது.

ஸ்ரீநிவாஸ ப்ரஸ்
திருவையாறு

1946.



॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌹𑍇𑌮𑌾𑌬𑍍𑌜𑌨𑌾𑌯𑌿𑌕𑌾𑌸𑌮𑍇𑌤𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌨𑌾𑌯𑌕𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ।

𑌦𑍇𑌶𑌿𑌕𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌨𑌿𑌰𑌾𑌕𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌃 ॥

[தேசிகநிந்தா நிராகிருதியின் அநுபந்தம்]

திருவஹீந்த்ரபுரம்

திருமலெ ஈச்சம்பாடி சடகோபாசாரியர்

எழுதியது.

ஸ்ரீநிவாஸ ப்ரஸ்
திருவையாறு

1946.

ஸ்ரீ:


முகவுரை.

—❀—

ஸ்ரீ உபநிஷத்மாந்தமஹாதேசிகன் அருளிச் செய்த திராவிடச் செய்யுட்களை தேசிக ப்ரபந்தமென்று வகுராஸியாகச் சேர்த்து அநுஸந்திக்கப்பட்டுவரும் பெரியோர்களின் ஸம்ப்ரதாயம் எல்லோரும் அறிந்ததே. இதை அச்சிட்டு வெகுகாலமாய்விட்டபடியால் புதிதாய் ஓர் அச்சுப்ரதி பதிப்பிக்க வேணுமென்று சில மஹனீயர்கள் அபிப்பிராயப்பட்டதின்பேரில் அதற்கிணங்கி ஒப்பிலியப்பன்கோவில் வித்வான் சிரோமணி ஸ்ரீ-உ-வே- ஸ்ரீராம தேசிகாச்சார்யரால் எளியநடையில் உரையுடன் 'தேசிக ப்ரபந்தம்' என்ற பதிப்பு ஸமீபகாலத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டது. அது சென்ற 1943ஆ டிசம்பர்மீ த்தில் தஞ்சைக்கடுத்த விண்ணுற்றங் கரையில் ஸ்ரீ நீலமேகப்பெருமாள் ஸந்நிதியில் வெகு சிறப்பாய் அரங்கேற்றப் பெற்றது. இப்பதிப்பை விமர்சம் செய்வதாக 'தேசிகப்ரபந்த வுரையாராய்ச்சி' என்றோர் பத்திரிகை அமிருத லஹரீ பத்திரிகையின் அநுபந்தமாக வெளிவந்தது. அதில் ஷை உரையைப்பற்றி யாதொரு ஆராய்ச்சியும் அறிவாளர் மெச்சத் தகுந்த முறையில் காணப்படாமல் தேசிக நிந்தையே நிறைந்து நின்றதால் அவ்வித நிந்தைக்கு மறுப்பு எழுதவேண்டியதவசியமென்று நினைத்து நான் '**தேசிக நிந்தா நிராகிருதி**' என்று ஓர் கண்டனம் எழுதினேன். அதில், ஷை உரை ஆராய்ச்சியின் தலைப்பில் ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. வே. மெ. ஸுந்தரராஜாசார்யர் என்று குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் உண்மையில் அதை எழுதியவர் காஞ்சீபுரம் ஸ்ரீ உ.வே. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் என்று பலர் அபிப்பிராயப்பட்டதினால் எனக்கு ஸந்தேஹம் ஏற்பட்டு அந்த ஸந்தேஹத்தைத் தெளிவிக்கவேண்டுமென்று கேட்டிருந்தேன், உடனே ஸ்ரீ ப்ர. ப. அண்ணங்கராசார்யரே நேராக நான் எழுதிய தேசிக நிந்தா நிராகிருதிக்குக் கண்டன ரூபமாக 'ஸத்ஸம்ப்ரதாயபரித்ராணம்' என்கிற பத்திரிகை ஒன்றைப்ரசுரம் செய்தார். அதிலுள்ள விஷயங்களுக்குப் பதிலாக இந்த '**தேசிக நிந்தா நிராகிருதியின் அநுபந்தம்**' என்பது என்னால் எழுதப்

பட்டிருக்கிறது. அண்ணங்கராசார்யர் எழுதிய ஷை பரீக்ஷாணக்ரந்தத்தில் நான் எழுதியுள்ள நிராகிருதியிலிருக்கும் விஷயங்களுக்கு ந்யாயமான முறையில் ஸமாதானம் எழுதப்படாமல் வசைச்சொற்களே மிகுந்திருப்பதை உத்தேசித்து அதற்குப் பதில் எழுதவேண்டியது அனாவச்யகமென்று முதலில் எனக்குத்தோன்றியது. அவ்விதம் சில ஆப்தர்களும் அபிப்ராயப்பட்டார்கள். ஆனால் பிறகு பராமர்சித்ததில் அதில் திவ்ய தம்பதிகளின் ஸ்வரூபஸ்வபாவாதிகள் விஷயமாக சில முக்யமானவிஷயங்கள் விபரீதமாய் எழுதப்பட்டு அதற்கெல்லாம் ஸ்ரீ தேசிகனது க்ரந்தங்களிலேயே ப்ரமாணமிருப்பதாகப் பலவகையில் உத்கோஷிக்கப்பட்டிருந்தபடியால் இதைக்குறித்து தத்வார்த்தத்தை விஸ்தரேண ப்ரதிவாதநம் செய்து இம்மாதிரியான விபரீதவாதங்களுக்கு இடமுண்டாகாமல் செய்யவேண்டியதவச்யமென்று என் மனதில் பட்டது. அதைப் பல பெரியோர்களும் ஸஹ்ருதவமர்சம் செய்தார்கள். அதன்பேரில் இவ்வநுபந்தம் எழுத நேர்ந்தது. இதில் ஆங்காங்கு பூர்வபக்ஷியின் வாதங்கள் ஸங்க்ரஹமாய்க் குறிக்கப்பட்டபோதிலும் கிரந்த விஸ்தரபயத்தால் அவற்றை பூர்ணமாய் உதாஹரிக்க முடியாமற் போனபடியால் இதைப் படிக்கும்போது பூர்வபக்ஷியின் பத்திரிகைகளை வைத்துக்கொண்டு அதிலிருக்கும் அம்சங்களைப் பூர்ணமாகத் தெரிந்துகொண்டு பிறகு இதில் கூறப்பட்டிருக்கும் ஸித்தாந்தங்களைப் படித்து நிர்ணயம் செய்வது உசிதமாயிருக்குமென்று விக்ஞாபித்துக் கொள்கிறேன். யதாவத்தான வஸ்துஸ்திதியை அறிந்து கொள்ளவேண்டியது புத்திமான்களுக்கு ஸர்வாத்மநா அவச்யமும் அபேக்ஷிதமுமாகையால் அவ்விஷயத்தில் இந்த க்ரந்தம் எவ்விதம் உபகரிக்கிறதென்பதை அவர்கள் தடஸ்த புத்தியுடன் நிச்சயிக்க வேணுமென்று பிரார்த்திக்கிறேன்.

திருவஹீந்த்ரபுரம்.
9-9-46
திருமலை ஈச்சம்பாடி **சடகோபாசாரியர்.**



॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌹𑍇𑌮𑌾𑌬𑍍𑌜𑌨𑌾𑌯𑌿𑌕𑌾𑌸𑌮𑍇𑌤𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌨𑌾𑌯𑌕𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ।

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿 ॥
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍 ॥

𑌦𑍇𑌶𑌿𑌕𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌨𑌿𑌰𑌾𑌕𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌃 ॥

தேசிகப்ரபந்தவுரையாராய்ச்சி என்று அமிருதலஹரியின் அநுபந்தமாக ஸ்ரீ. மெ ஸுந்தரராஜாசாரியர் பெயரால் வெளிவந்தவோர் பத்ரிகையில் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனைப் பலவாறு தூஷித்திருந்தபடியால் அதற்குக் கண்டனரூபமாக நாம் 'தேசிக நிந்தாநிராக்ருதி'யை எழுதிப் பிரசுரம் செய்தோம். இதற்குப் பதிலாக காஞ்சீ-ஸ்ரீ. ப்ர. ப. அண்ணங்கராசாரியர் 'ஸத்ஸம்ப்ர தாயபரித்ராணம்' என்று ஓர் பத்ரிகை வெளியிட்டுள்ளார். நமது 'நிராக்ருதி' வெளிவருவதற்கு முன்பே மதுரை ஸ்ரீ. நாராயணய்யங்காரால் 'தேசிகப்ரபந்தம்' என்று ஒரு கண்டனம் ஆராய்ச்சிக்கு எழுதப்பட்டது. அதற்குப் பதிலாக ஸ்ரீ ஸுந்தரராஜாசாரியர் பெயரை வைத்தே 'நற்பொருள் விளக்கம்' என்கிற பத்ரிகை வெளிவந்தது. அதைத் தொடர்ந்தே ஸ்ரீ அண்ணங்கராச்சாரிய

ரால் 'ஐகமத்யரஸம்' என்கிற பத்ரிகை வெளியிடப்பட்டது. இப் பத்ரிகைகளையெல்லாம் இங்கு குறிக்கவேண்டிய ப்ரஸக்தியிருப்பதால் ஸங்க்ரஹார்த்தமாக 'தேசிகப்ரபந்தவுரையாராய்ச்சி' என்பது ஆராய்ச்சி என்றும், 'நற்பொருள் விளக்கம்' என்பது 'விளக்கம்' என்றும், 'ஐகமத்யரஸம்' என்பது ரஸம் என்றும், 'தேசிக நிந்தாநிராக்ருதி' என்பது 'நிராக்ருதி என்றும், 'ஸத்ஸம்ப்ரதாய பரித்ராணம்' என்பது 'பரித்ராணம்' என்றும், முறையே நிர்தேசிக்கப்படும். ஆராய்ச்சியின் க்ரந்தகர்த்தா அதில் குறிக்கப்பட்ட ஸுந்தரராஜாசாரியரா அல்லது அண்ணங்கராசார்யரே அதை எழுதி மாறுபெயரால் வெளியிட்டிருக்கிறாரா வென்பதைப்பற்றி ஸந்தேஹமேற்பட்டதை நிராக்ருதியில் நாம் ப்ரஸ்தாவித்துப் பல ஹேதுக்களைக்கொண்டு அண்ணங்கராசாரியர் இவ்விதமாக மறைவிடமான வியாபாரத்தைச் செய்திருக்கமாட்டாரென்று எழுதினோம். நாராயணய்யங்கார் ஆராய்ச்சியை அண்ணங்கராச்சாரியரே மாறுபெயர்பூண்டு வெளியிட்டிருக்கிறாரென்று எழுதியதை விளக்கம் 21வது பக்கத்தில் கண்டித்து 'அந்த ஸ்வாமி (அண்ணங்கராச்சாரியர்) தம் திருநாமத்தால் பல பல நூல்களை வெளியிட்டே யுள்ளார். மாறுபெயர் பூண அவசியமென்னோ விவேகிகளின் வார்த்தையா இது', என்று வரையப்பட்டிருக்கிறது. பிறகு அண்ணங்கராச்சாரியர் தன் பெயராலேயே வெளியிட்ட ரஸத்தில் ஆராய்ச்சியை வேறொருவர் எழுதியதாகவே பாவித்து 13வது பக்கத்தில் அதில்(ஆராய்ச்சியில்)தேசிகபக்தர்களின் மனம் நோகும்படியான சில வாசகங்கள் புகுந்திருப்பது பற்றி தன் மனமனுங்குவதாகவும் அவை விசால ஹ்ருதயர்களுக்கு வெறுப்பை விளைவிப்பதாகவும் மணவாளமாமுநிகளின் பொன்னடியைப்போற்றுமவர்களுக்கு இந்த நடை தகாதென்றும் கூறப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்த்து ஆராய்ச்சியின் கர்த்தா அண்ணங்காசாரியரல்ல வென்று நான் கொண்டவபிப்ராயமே ஸரியானதென்றும் இதற்கு மாறாக என் மித்ரர்கள் அவர்பேரில் பழி சுமத்தியது தவறென்றும் நான் ஸந்தோஷித்துக்கொண்டிருக்கையில்

பரித்ராணம் வெளிவந்ததின்மேல் என் மித்ரர்கள் கரகோஷத்துடன் என்னைப் பரிஹஸிக்க நேர்ந்தது. ஏனென்றால் ஆராய்ச்சியை அண்ணங்கராசாரியரெழுதியிருக்கமாட்டாரென்றும் அப்படி எழுதியிருப்பதாக வைத்துக்கொண்டால் அவர் வெகு நீசமான மித்ரத்ரோகம், குருத்ரோகம், நன்றி கேடு முதலிய பாபங்களைச் செய்தவராவார் என்றும், நிராக்ருதியில் பல காரணங்களால் நான் நிரூபித்திருக்க அதையெல்லாம் புறம் தள்ளி நான் ஆராய்ச்சிகர்த்தாவின் வசநநடையைக் குறித்துக் கண்டனம் செய்திதைத் தன்மேலேறிட்டுக்கொண்டு என்னைப் பல ப்ரகாரத்தில் வசை கூறியிருப்பது முதலிய பல ஹேதுக்களைக் கொண்டு இவர்தான் ஆராய்ச்சியை வரைந்துள்ளாரென்பது ஸ்பஷ்டமாவதுபற்றி நாம் இவரை லோகநிந்தையிலிருந்து ரக்ஷிக்க யத்தனித்தது வாஸ்தவமறியாமல் செய்தவுபக்ருதிபாகையால் அது விபரீதமாக விளைந்தது யுக்தமேயென்று எமது மித்ரர்கள் என்னையுபஹாஸம் செய்ய இடமுண்டாயிற்று. உண்மையில் இவர் ஆராய்ச்சி கர்த்தாவாக இல்லாமலிருந்தால் இவர், நிராக்ருதிக்குப் பதிலெழுத வேண்டிய அவசியமேயில்லை என்னை வசை கூறச்சிறிதும் ப்ரஸக்தியில்லை. [illegible] தன்னை விலக்கியதற்காக உபகாரஸ்மரணம் செய்யவேண்டியதே ந்யாய்யமாகும். ரஸத்தில் இவர் எழுதியவை மேற்பூச்சில்லாமல் இவர் உண்மையாய் உணர்ந்தவையாகில் ஆராய்ச்சியிலுள்ள தேசிகநிந்தாவசநங்களைப் பற்றி நான் கண்டனம் செய்ததை இவர் அபிநந்தநம் செய்யவேண்டியது யுக்தமாகுமே தவிர அதற்காக இவர் என்னை நிந்திக்கப் புகுந்தது சிறிதும் உபபந்நமாகாது. வசைமொழிகளை என்னுடன் நிறுத்திக்கொள்ளாமல் லோகப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த [illegible]வாகிய எனது [illegible] மஹாவித்வான் ஸ்ரீ ஸதாவதாநம் ஸ்வாமியின் திருநாமத்தை [illegible]மாய் இழுத்து வைத்து ஒரு பொய்க்கதையைக் கட்டித்தானே அதற்கு ஸாக்ஷியென்று சொல்லியிருக்கிறதைப் பார்க்க இன்னது தான் இவர் சொல்லவாவது செய்யவாவது

துணியமாட்டாரென்பது ஒருவராலும் நினைக்கக் கூடாமலிருக்கிறது. ஸஜ்ஜநரான எவரும் வெறுக்கத்தகுந்த மார்க்கத்தில் இவர் ஸத்ருஶஹாஸ்யதாபஸர்ஜியுடன் உலாவுவது ஸோநயநர்களான விவேகிகளுக்கு மிகவும் ஶோசநீயமாயிருக்கிறது. 'பீடாகரமமித்ராணாம் யத்ஸ்யாத் கர்த்தவ்யமேவ தத்' என்ற இந்த்ரஜித்தின் வாக்யத்தையே இவர் ஶரணமாகக்கொண்டு இடைவிடாது ஆதரித்து வருவதாகப் புலப்படுகிறபடியால் இந்த ப்ரமாணத்தை ப்ரவர்த்திப்பித்தவனையே இவர் பின்செல்லட்டுமென்று விடுவதே யுக்தமாகும். ஸ்ரீபரகாலஸிம்ஹாஸநத்தை முன்னலங்கரித்த மஹாநுபாவர்களைப்பற்றி ஆராய்ச்சியில் தூஷித்திருப்பதால் இவரதை எழுதியிருக்கமாட்டாரென்று நிராக்ருதியில் எழுதப்பட்டது. இதற்கு மாறாக பரித்ராணத்தில் அப்படி ஆராய்ச்சியில் தூஷிக்கவில்லையென்று ப்ரதிவாதம் செய்து யார் என்ன சொன்னபோதிலும் தன் விஷயத்தில் 'பரகாலயதீந்த்ராணாம் விக்ரயேத ந ஜாதஸஹ்யஸ்' என்று ஶபதமிட்டுக்கொண்டு இவர் தானே முன் வந்து நிற்பதால் ஆராய்ச்சியை எழுதியவர் இவரே என்பது விளக்குகிறது. இன்னும் ஶோகா என்ற பாடத்தை நீலா என்று மாற்றத் தான் துணிந்ததாகப் பெருமைபேசுவது முதலிய பூர்வமான லிங்கங்களைக் கொண்டும் இவரே ஆராய்ச்சி கர்த்தாவென்று நிஸ்ஸம்ஶயமாய் ஏற்படுவதுபற்றி ஆராய்ச்சி விளக்கம் ரஸம் பரித்ராணம் இவை நான்கும் ஏககர்த்ருகமென்று தேறுவதால் இது விஷயமாக ப்ராமாணிகர்கள் பராமர்சிக்க வேண்டியதவசியமாகிறது. நேரான மார்க்கத்தை விட்டுப் பிறர் பெயரால் நிந்திப்பதும் பிறகு ஏதோ ஸௌஹ்ருதஸாஹஸியுடன் அதைத் தான் ஏற்றுக்கொள்ளவில்லை போல் நடிப்பதும் ஒரே வ்யக்தியின் வியாபாரமானல் அவ் வ்யக்தியின் பேச்சுக்களையும் நடத்தைகளையும் ஸத்ப்ராஜ்ஞோத்தமர்கள் எவ்வகையில மதிப்பார்கள் என்பதை யோசிக்கவேண்டும். ஆராய்ச்சியில் தான் மாறுவேஷம் பூண்டு தேசிகனை நிந்தித்ததற்கு ஸ்ரீராமன் வாலியை மறைந்திருந்தடித்ததை ப்ரமாணமாக இவர் சொல்லிக்கொண்டாராம். இது எவ்

விதம் பொருந்துமென்பதை விசாரிக்கவேண்டும். இவரை ராம னுகவும் ஸ்ரீதேசிகனை வாலியாகவும் சித்தஸ்வாதீநமுள்ள எவனும் ஒப்புக்கொள்ள முன்வரமாட்டான். ஆனால் ஸ்ரீராமசரித்ரத்திலிருந்தே இதற்குப்பொருத்தமான திருஷ்டாந்தமெடுத்துக்காட்டுகிறோம். அதன் ஔசித்யம் எல்லோருக்கும் நன்கு புலப்படும். மான்வேஷம் பூண்டு வஞ்சித்த மாரீசன்பேரில் ராமபாணம் விழுந்தபோது 'ஶரீரம் ம்ருகரூபஸ்ய விநிர்பித்ய ஶரோத்தம: | மாரீசஸ்யைவ ஹ்ருதயம் பிபேதாஶநிஸந்நிப: || தாலமாத்ரமதோத்பத்ய ந்யபதத் ஸ ஶராதுர: | விநதந் பைரவம் நாதம் தரண்யாமல்பஜீவித: || ம்ரியமாணஸ்து மாரீசோ ஜஹௌ தாம் க்ருத்ரிமாம் தநும் ||' என்றபடி அவன் ம்ருகரூபத்தை விட்டு நிஜரூபத்தையடைந்தமாதிரி நிஶிதாக்ரமான நமது நிராக்ருதி அண்ணங்கராசாரியர் ஹ்ருதயத்தில் தைத்தவுடனே அவர் அவசமாய் கபடஸௌஶீல்யாவரிக்ரஹத்தைத்தவிர்த்து தானுகவே குதித்துக்கிளம்பி வெளியில் வந்துவிழ நேரிட்டது. மேலும் இவர் பரித்ராணத்தில் வாச்யாவாச்யவிவேகமில்லாமல் விகர்ஹிதமாகவும் நீசமாகவும் அநார்யஜுஷ்டமான நடையில் கூக்குரலிட்டிருப்பதும் இதற்கு பரித்ராணம் என்று பெயர் வைத்திருப்பதும் 'விகர்ஹிதம் ச நீசம் ச கதமார்யோऽபிபாஷ்யதி | த்ராஹீதி வசநம் ஸீதே யஸ்த்ராயேத் த்ரிதஶாநபி ||' என்றதையும் ஞாபகம் மூட்டுகிறது. இதெல்லாம் தடஸ்தமநஸ்ஸுடன் கவனிக்கும் புத்திமான்களுக்கு நன்கு விளங்கும். உரையாராய்ச்சியின் கர்த்தாவை நிஷ்கர்ஷிக்கவேண்டுமென்பதற்காக ஸுந்தரராஜாசாரியரை ஸதஸ்ஸுக்கு வரும்படி நாம் கூப்பிட்டது காரணமாக அவர் தன் பெயரை இனி உபயோகிக்க ஸம்மதப்படாததே இப்போலியைத்துலைத்ததற்குக்காரணமாகவுமிருக்கலாம். காரணமெதுவாயிருந்தாலும் கர்த்ருநிஶ்சயமேற்பட்டுவிட்டபடியால் நிஸ்ஸம்ஶயமாய் பதிலுரைப்பதற்கு அவகாசம் நேர்ந்ததைப் பற்றியும் இக்கர்த்தாவின் ஸ்வரூபஸ்வபாவாதிகள் எல்லோருக்கும் வெளிப்படையாய் புலப்படும் தருணம் வாய்த்ததைப்பற்றியும் மிகவும் ஸந்தோஷி

க்கிறோம். இங்கு இவ்வளவுடன் இக்கர்த்தாவைப்பற்றிய பேச்சை நிறுத்திக்கொண்டு இனி இவர் கூறும்விஷயங்களைப்பரீக்ஷிப்போம்.

நிராக்ருதி 26, 27 பக்கங்களில் மும்மணிக்கோவை முதலடியில் 'அருடருமடியவர்பால்' என்பதில் 'ரு' காரத்தை 'கு' காரமாக ஆராய்ச்சியில் மாறுபாடுசெய்திருப்பது தவறென்றும் 'அருள் தரும்' என்பது மஹாவாக்யத்தின் க்ரியாவசமென்றும் அதற்கு ஷஷ்டிபாசுரத்தின் இறுதியிலுள்ள 'திருவே' என்பது கர்த்தாவென்றும், அவ்விதமந்வயிக்கத் தெரியாமையே மாறுபாடு செய்ததற்குக் காரணம் என்றும், ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்மாசாரியர் வியாக்யானத்தில் அவ்விதம் அந்வயிக்கப்பட்டிருப்பதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இதற்குப்பரித்ராணம் 40, 41 பக்கங்களில் பதிலுரைக்கும் தறுவாயில் அண்ணங்கராசாரியர் 'பெருந்தமிழ்ப் புலவரானவிவர்' என்று நம்மைப்பரிஹஸித்துப்பேசி சேட்லூர் ஸ்வாமியையும் பலவாறாக இகழ்ந்து கூறி நாம் காட்டியபடி முதலடியிலுள்ள 'அருள் தரும்' என்கிற பதத்தைப் பனிரண்டாமடியிலுள்ள 'திருவே' என்கிற பதத்துடன் அந்வயிப்பதை 'தமிழர்கள் கண்டாலும் கேட்டாலும் சிரிப்பர்கள்' என்று அதி லகுவாகப்பரிஹாஸம் செய்துள்ளார். இதைப்பற்றி நாம் தமிழ் வித்வான்கள் அநேகரைக்கேட்டதற்கு நாம் கூறிய அந்வயமே ஸரியானதென்றும் அது 'விற்பூட்டு' என்கிற வாக்யாலங்காரமாக இலக்கண நூற்களில் கொண்டாடப்பெற்றதென்றும் நன்னூல் பொதுவியல் 415 வது ஸூத்ரத்தில் 'எழுவாயிறுதிநிலை மொழிதம்முட்பொருளைக்குடையது பூட்டுவில்லாகும்' என்றும், மாறனலங்காரம் என்கிற க்ரந்தத்தில 'செய்யுளினிறுவாய் எழுவாய் புணர்ந்து மெய்யுறப் பொருள் நிலைவிளக்கல் விற்பூட்டே' என்றும் லக்ஷணம் கூறப்பட்டுப்பலவுதாஹரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் இது சிறந்த செய்யுட்களில் நடைபெறும் ப்ரௌடப்ரயோகமென்றும் விளக்கினார்கள். மேலும் 'அருடரும்' என்றிருந்தால்தான் 'தெருடரும்' என்கிற 2வது அடியுடன் ப்ராஸம் இசைந்து நிற்கும். இதுவும் 'தகும்' என்பது அபபாடமென்பதற்கு ஹேது

வாகக்கொள்ளத்தகும். இந்த அதிஸூக்ஷ்மமான விஷயத்தில் தமிழர்களின் நோக்கு இவ்வாறிருக்க இவர் வெகு எளிதாக 'தமிழர்கள் கண்டாலும் கேட்டாலும் சிரிப்பர்கள்' என்று பேசி என்னையும் ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமியையும் சேர்த்து குத்ஸிதமாக தூஷித்திருப்பதின் தார்ஷ்ட்யத்தை விவேகிகள் கவனிக்கவேண்டும். இவருடைய தூஷணத்தைப்பற்றி நானாவது வேறு எந்த விவேகியாவது கவலைப்பட ப்ரஸக்தியில்லை. நான் ஏற்கனவே நிராக்ருதியில் நிரூபித்தபடி ரஜஸ்தமோமயமான தௌர்ஜந்யஸ்வபாவப்ரயுக்தமாக இவருக்கேற்பட்டிருக்கும் வைநாசிகௌத்தத்யமடியாக ஒவ்வொன்றையும் விபரீதமாய் க்ரஹித்து தப்பர்த்தமான அதிகுத்ஸித நடையில் வெளியிடுவது ஸாமாந்யநிரூபாவிஸாரதரான விவருக்கு ஸ்வபாவமாயமைந்திருப்பதால் இவருடைய அபிநந்தநம் 'நாஹ்யநந்த தமாக்யாஸோ தாஸ்விஜி தாநந:' என்கிறகணக்கிலே ஸாதுக்களுக்கு ஜகத்ஸாவஹமாயிருக்குமே தவிர இவருடைய அதிக்ஷேபோக்திகள் ஸஜ்ஜனங்களுக்கு உபேக்ஷாஸ்பதமேயாகும். அவைகள் யாவும் 'அவஜ்ஞா விநஸ்யதி' என்கிற ஸூத்ரந்யாஸாரேண இவரையே தாக்குமென்பதில் ஸம்சயமே கிடையாது. ஆனால் 'ப்ராப்தம் யதேஷ்டம் தாவத்ஸ ஹவதா நாத்ர ஸம்சய: । ஸமஸ்தாவஸ்யயேஷ்ட்யஸ்ய க்ஷிப்ரமேவ ப்ரவர்த்ஸ்யதே ॥' என்கிற திருவடிவாக்யத்தின்படி விஜயோ ஜாத்ருமே யென்பது ஸ்பஷ்டம்! க்ஷுத்ர ஜனங்கள் தங்களுக்கு வேண்டாதவர்கள்பேரில் வாக்ப்ரக்ஷேபம் (mud-slinging)செய்யும் ரீதியை இவர் அப்ராக்ருதவிஷயலேகங்களில் ஸ்வரஸமாய்க் கையாடுவது ஆச்சர்யமே. இவ்விதமான ப்ரஹரணப்ரயோகத்தால் ஏற்படும் ஜயத்தை இவர் நிஸ்ஸந்தமாக அநுபவிப்பதிலும் அத்தால் தனது ப்ரதிவாதிஸ்யஜாஸ்கம் அதமோமாவதைப் பற்றித்தாமே ஸஹர்ஷப்ரகாரமாகப்பறை சாற்றிக்கொள்வதிலும் ஜோயநர்களெவரும் பொறுமைகொள்ளமாட்டார்களென்பதை நாமுறுதி கூறுகிறோம். அதத்வத்தைப் பலமுறை ப்ரகடமாகவும் ப்ரச்சந்நமாகவும் வற்புறுத்துவதினாலேயே அதை வஸுந்தரான்கள் அஸத்யவசனம் செய்வார்களென்று நினைப்பது

ஸ்வாத்மவஞ்சனையாகவே பர்யவஸிக்குமென்பதை இவரறிய வேண்டியதவசியமாகும். ஆனால் இவர் லக்ஷ்யஜ்ஞர்களுடைய ஸஹ்ருதயமதத்தை எதிர்பார்த்து ஒன்றும் எழுதவில்லையாகையால் தனக்கு அதைப் பற்றிக்கவலையில்லையென்று பதிலுரைக்கக் கூடும். அப்படியானால் நமக்கும் இவர்பேசுவதைப்பற்றி எவ்விதக்கவலையு மில்லையென்பதை மறுபடியும் வற்புறுத்துகிறோம்.

பரித்ராணம் 44 வது பக்கத்தில் நான் எதையும் நேராகத் தெரிந்துகொள்ளாதவன் என்பதை ஒரு சிறிய உதாஹரணத்தால் ஸ்தாபிப்பதாக இவர் பிரதிஜ்ஞை செய்து மும்மணிக்கோவை முதலடியை நான் 'அருடருமடியவர் பால்' என்றெடுத்திருப்பதைக் குறித்துள்ளார். இதை நான் ஏதோ அச்சுப்பிழையென்று சொல்லித்தப்பிக்க வழிதேடவேணுமென்று சங்கித்து இது அச்சுப்பிழையாக இருக்க நியாயமில்லையென்று நிரூபித்திருக்கிறார். அப்படியெல்லாம் வீண்சாக்குப்போக்குகளைச்சொல்லித்தப்பிக்க வழிதேடும் ஸ்வபாவம் எனக்கில்லையென்பதையும் அதையெல்லாம் இவரே ஏகபோகமாய் கைக்கொள்வதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லையென்றும் தெரிவித்துக்கொள்கிறேன், 'அடியவர்' என்பதே ஸரியான பாடமென்றும் இவர் ஸரியென்று சொல்லும் 'அடியர்' என்பது ஸாதுவாமென்றும், 'அடியவர் பால்' என்றிருந்தால் தோஷாவஹமன்றோ' என்றிவர் பழிப்பது அஜ்ஞாநவ்யஞ்ஜகமென்பதையும் நிரூபிக்கிறேன். இங்கு வ்ருத்தம் 'நிலமண்டில வாசிரியப்பா' என்பது. இவ்விருத்தத்தில் 'கூவிளங்கனி' 'கருவிளங்கனி' என்கிற ஸம்க்ஞைகளால் குறிக்கப்பட்ட 'நேர் நிரை நிரை', 'நிரை நிரை நிரை' என்கிற இரண்டு சீர்கள் மட்டில் லக்ஷணசாஸ்த்ரப்படி பொருந்தாதே தவிர மற்ற சீர் எதுவும் நிஷித்தமல்ல. இப்படிப் பார்த்தால் 'அடியவர்' என்பது 'நிரை நிரை' என்கிற சீராவதால் தோஷாவஹமல்ல. இவ்வடியிலுள்ள மற்ற முன் பின் பதங்களின் சீர்களும் இதனால் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. மேலும் 'அடியர்' என்பதை விட 'அடியவர்' என்கிற பதம் ஏற்கனவே திருமங்கையாழ்வாரால் ஸ்ரீதேவநாதன்

விஷயத்தில் உவாத்தமாயிருப்பதால் ஶிஷ்வஸிம்ஹமென்கிற உத்கர்ஷமிதற்குண்டு. 'முன்னோர் மொழி பொருளேயன்றி யவர் மொழியும் பொன்னே போற்றுவம்' என்கிற நன்னூல் ஸூத்ர மும் இந்த ப்ரயோகத்தின் ஔசித்யத்தை ஸ்திரப்படுத்துகிறது. மேலும் இவர் பதிப்பித்த ஸ்ரீதேசிகக்ரந்தமாலையில் 'அடியவர்' என்றே பாடமிருக்கிறது. வஸ்துஸ்திதி இவ்வாறிருக்க பரித்ரா ணத்தில் அடியவர் என்று நான் எழுதியதைப்பற்றி 'இதனல் ஸஹ்ருதயரன்றோ. ஒன்றையும் ஒழுங்காக அப்யஸிக்காமலும் ஸ்வாவாகப் பாராமலும் தப்புந்தவறுமாக எதையேனுமெழுதி ஏடு களைப் பூரிப்பவரிவர் என்பதே இதனல் நன்கு நிலைபெற்றது,' என் றாரம்பித்து எழுதப்பட்டிருக்கும் தூஷணத்தொடருக்கு யார் ஸரியான பாத்ரம் என்பதைத் தமிழிலக்கணமறிந்த மத்யஸ்தர்கள் கவனிக்கவேண்டும்.

ஆராய்ச்சி 11வது பாராவில் 'வ்யதிஷக்தவிதவேஷாஙக:' உதா ஹ்ரியான ஶ்லோகம் அம்மாளுடைய வாக்கு அன்று, தேசிகருடைய சொந்த வாக்கு என்பது ஸங்கல்பஸூர்யோதயத்தில் ஸ்பஷ்டம்' என்று எழுதப்பட்டிருப்பதைக் குறித்து நான் நிராக்ருதியில் இந்த சுலோகத்தை தேசிகன் ஸ்வயமாகக் கல்பித்ததென்று ஆரா ய்ச்சியில் எழுதப்பட்டிருப்பது, ப்ராமாணிகமென்று 'ஆராய்ச்சி யிலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட சேட்லூர் நரஸிம்மாசாரியர் எழுதியுள்ள தேசிக சரித்ரத்தில் கூறப்பட்டிருப்பதற்கு மாருக இருப்பதால் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல' வென்று எழுதியிருக்கி றேன். இதில் 'தேசிகனுடைய சொந்தவாக்கு' என்று ஆராய்ச்சி யிலிருப்பதை அப்படியே நான் அநுவதிக்காமல் தேசிகன் ஸ்வய மாக கல்பித்ததென்றெழுதியிருப்பது களஹ்யமென்று சொல்லி பரித்ராணத்தில் இவர் மிகவும் கோபிக்கிருர். கவி இந்த ஶ்லோகத் தைக்கல்பித்தாரென்பது எவ்விதம் களஹ்யமாகுமோ தெரியவில் லை. இவ்வளவு சிறிய சப்தமாறுதலைக்கூடத் தன்விஷயத்தில் ஸஹி க்காதவிவர் இதரர்கள் விஷயத்தில் எவ்விதமாக நடந்துகொள்ளு கிருர் •என்பது கவனிக்கத்தக்கது. பிறர் விஷயத்தில் உவஹைவ

மாக ஸ்வாபதேசவ்யபதேசயோகம் செய்வது தன்னுடைய ஸ்வாசார்யாநுவ்ருத்தியென்று இவர் பாத்யம் கொண்டாடும் விஷயத்தில் நாம் போட்டிக்கு வரவில்லையென்பதை இவர் நன்றாகத்தெரிந்துகொள்ளட்டும். ஆனால் இந்த விஷயத்தில் ஒன்று இப்போது சொல்லவேண்டியதாகிறது. ஸங்கல்பஸூர்யோதயத்தில் இந்த ச்லோகத்தை தேசிகன் ஸாதித்திருப்பதே. இது அம்மாள் வாக்கல்ல. தேசிகனுடைய வாக்குத்தான் என்பதற்கு ப்ரபல ப்ரமாணமென்று ஆராய்ச்சியில் கூறப்பட்டு பரித்ராணத்தில் உறுதி செய்யப்பட்டிருப்பது எப்படி பொருந்துமென்று ஏற்படவில்லை. ஏற்கனவே அம்மாள் ஸாதித்த ஸ்வநாம ஸ்தவநத்தையே ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் உசிதஸ்தலத்தில் தேசிகன் அநுவதித்தார் என்பதற்கு என்ன ஆக்ஷேபமிருக்கக்கூடும்? ஸ்வாபதேசம்வஸூ முதலிய சில க்ரந்தங்களில் இல்லையென்பதைக்கொண்டு குருபரம்பரை முதலிய க்ரந்தங்களில் காணப்படுவதும் ஐதிஹ்யபரம்பரையில் வந்திருப்பதுமானவிதை மறுப்பது யுக்தமாகாது. மேலும் வேதாந்ததேசிகமங்களத்துக்கு இவரே எழுதியுள்ள தமிழ் வ்யாக்யானத்தில் 'யோ பால்யே வரதார்யஸ்ய' இத்யாதிச்லோகத்துக்குப் பொருள் எழுதும்போது 20வது பக்கத்தில் 'ஸ்வாமி (தேசிகன்) இளம்பிராயத்திலே ஒருநாள் மாதுலரான அப்புள்ளாரோடுகூட அம்மாளுடைய ஸ்ரீபாஷ்யவ்யாக்யாநகோஷ்டியிலே செல்ல இவருடைய தேஜஸ்விதாதிசயத்தைக் கடாக்ஷித்த அம்மாள் 'தீவ்ரதீப்தி: ஹார: க ஏஷ கஸ்ய' என்று அப்புள்ளாரைக்கேட்க 'ஸ்வாமிநோ பாகிநேயோऽஸௌ' என்று அவர் விடையளிக்க, ஆ முதல்வன் இவனென்று ஸஸ்நேஹம் மநஸா த்யாநம்செய்தருளி 'ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத: । பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம் ॥' என்று ஆசாஸித்தருளினர் என்கிற ஐதிஹ்யம் காண்க. ஸ்வாமி தானும் அதிகரணஸாராவளியின் உபக்ரமத்திலே 'ஸ்ரீமத்ப்யாம் ஸ்வாத்ரேயஸ்வாதித்யந்வயி வரதாசார்யாத் ராமாநுஜாஹ்வாத் ஸம்ப்ராப்தோ யேந ஸர்வம் ஸஹநிஶிததியா வேங்கடேஶேந' என்று இதனை ஸூசிப்பித்தருளினர்'' என்று

வ்யக்தமாக எழுதியுள்ளார். இதற்கு நேர விருத்தமாக இவரே ஆராய்ச்சியிலும் பரித்ராணத்திலும் இந்த ச்லோகம் அம்மாளுடையதென்பவர்கள்மேல் படையெடுத்துச்செல்வது எவ்வளவு [illegible]த்வத்தைக் காண்பிக்கிறதென்பதையெல்லோருமறியவேண்டும். ஆனுல் [illegible] போல் [illegible]மும் தன க்கேயமைந்துள்ள தனிச்சிறப்பு என்றிவர் உரிமைகொண்டாடத் தகும். அதிலும் நமக்கு யாதொரு ஆக்ஷேபமாவது பொருமையாவது கிடையாதென்பதை இவர் பூர்ணமாக நம்பலாம்.

நிராக்ருதி 27வது பக்கத்தில் ஸ்ரீராமதேசிகர் தேசிகப்ரபந்த பதிப்பில் நவமணிமாலை இரண்டாவது பாசுரத்தில் 'தசமுகன்' என்றிருப்பது தவறென்று ஆராய்ச்சி 81வது பாராவில் கண்டனம் செய்திருப்பதைப்பற்றி பிரஸ்தாவம் செய்யும்போது அண்ணங்கராசாரியர் அச்சிட்ட தெலுங்குப் பதிப்பில் '[illegible]' என்றிருப்பதால் இக்கண்டனத்துக்கு அண்ணங்கராசார்யரே பதிலுரைக்கத்தகும் என்று நான் எழுதியிருக்கிறேன். இதற்கு பரித்ராணம் 39வது பக்கத்தில் பதில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது. 'அண்ணங்கராசாரியருடைய பதிப்பு' என்று சொல்லும் படியாக அடியேனுடைய பதிப்பு தேசிகப்ரபந்தங்களுக்கு இல்லை. ஸ்ரீமத்வேதாந்ததேசிக க்ரந்தமாலை அடியேன் அச்சிட்டபோது அதில் தேசிகப்ரபந்தங்களுள்ளிட்ட ஸம்ப்ரதாயவிபாகமானது என்னுடைய உரிமையில் சேராமல் மைஸூர் ஸ்ரீமத்வேதாந்த தேசிக க்ரந்தப்ரசாரிணீ ஸபையாருக்கு அதீனமாக நேர்ந்தபடியாலும், வழங்கி வருகிற பாடங்களை அப்படியே பதிப்பிக்க நேர்ந்தபடியாலும் அடியேனுக்கு அபிமதமான பாடங்களை அப்பதிப்பில் சேர்க்கவிரும்பவில்லையென்று ஸ்பஷ்டமாக அதில் வெளியிட்டிருக்கிறபடியாலும் அந்தப் பதிப்பை இவர் எடுத்துக்காட்ட நியாயமில்லை' என்று. இது முழுமையும் உண்மைக்கு விருத்தமென்பது ஷ்டிக்ரந்தமாலை முதலில் இவர் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதியுள்ள முகவுரையால் ஸ்பஷ்டமாகும். அங்கு '[illegible]

[illegible]' என்று பாடங்களையெல்லாம் நன்குசோதித்துத் தப்பைத்தள்ளி ஸரியானதையே பதிப்பித்திருப்பதாக தானே உரிமைகொண்டாடியிருக்கிறார். இத்தோடு நிற்காமல் மேலே எழுதும்போது மைஸூர் ஸபையார் ஸம்ப்ரதாயவிபாகத்தை அச்சிடும் பொறுப்பைமட்டும் வஹித்தார்கள் என்பதை '[illegible]' என்று குறிப்பிட்டுப் பிறகு ஸரியான பாடங்களை ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமி, ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர், ஸ்ரீ மதாண்டவன் முதலிய மஹான்களுடைய ஸ்ரீகோசங்களிலிருந்து சேகரித்துக் காஞ்சீபுரம் தாயார் ஸந்நிதி ஸ்ரீவரதாசாரியர் ஸ்வாமி முதலிய [illegible]களின் ஸஹாயத்தைக்கொண்டு தானே ஶோத்யத்தை தயாரித்ததாக எழுதியிருக்கிறார். மேலும் தான் தென்னசார்ய ஸம்ப்ரதாயத்தில் மிக ஊக்கமுடையவராதலால் பாடங்களைத் தவறாக மாற்றிவிடக்கூடுமென்று சிலர் ஸந்தேஹப்பட்டது தமக்குத் தெரியவந்ததாகவும் அப்படி ஸந்தேஹிப்பது யுக்தமென்றும் ஆனால் வஸ்துஸ்திதியில் தான் அப்படிக்கொன்றும் தப்பான மாறுதல்களைச் செய்யவில்லையென்றும் '[illegible]' என்று தேசிகஸம்ப்ரதாயமறிந்த பெரியோர்கள் உகந்த பாடங்களைத் தானே வெகு சிரமப்பட்டு ஸம்பாதித்து அச்சிட்டதாகக் கூறியிருக்கிறார். இதற்கிசைந்தே மைஸூர் ஸபை கார்யதர்சியாகிய வித்வான் ஸ்ரீ-உ-வே கஸ்தூரி ஸ்ரீநிவாஸரங்காசாரிய ஸ்வாமி எழுதியுள்ள பூமிகையிலும் அந்யஸம்ப்ரதாயஸ்தராயிருந்தபோதிலும் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனுடைய திருவம்சத்தில் பிறந்தவிவர் தான் ஏந்துகொண்ட பொறுப்பை ஸரியாக நிர்வஹித்தாரென்று வரையப்பட்டிருக்கிறது. இதற்கு நேர் விரோதமாகத் தன் பொறுப்பை இப்போதிவர் மறுதளிப்பது

எனக்கு ஆச்சர்யமாகத் தோன்றியபடியால் இதுவிஷயம் நான் விசாரித்துத் தெரிந்துகொண்டதில் க்ரந்தமாலை முகவுரையில் இவர் எழுதியிருப்பதுதான் உண்மையென்றும் இப்போது பரித்ராணத்தில் சொல்வது உண்மையல்லவென்றும் நிச்சயப்பட்டது இவ்விதம் ஸ்வாதந்த்ர்யாவலம்பம் எதற்காகச் செய்வதென்பது விளங்கவில்லை. தவிரவும் முன் உதாஹரிக்கப்பட்ட பரித்ராணவாக்யத்தில் 'வழங்கிவருகிற பாடங்களை அப்படியே பதிப்பிக்க நேர்ந்தபடியாலும்' என்றெழுதப்பட்டிருக்கிறது. மேலே சொன்ன 'தசமுகன்' என்கிற பாடம் வழங்கிவரும் பாடமல்ல. 'திசைமுகன்' என்பதுதான் பழையபுஸ்தகங்களிலும் பூர்வஸம்ப்ரதாயஸித்தமுள்ள பாடம். இவ்விஷயம் ஆராய்ச்சியிலும் ஸ்ரீராமதேசிகாசாரியர் உரையின் முகவுரையிலும் காணப்படுகிறது. ஆகையால் இப்பழையபாடத்தை அண்ணங்கராசாரியர் பதிப்பில் மாற்றியது இவருடைய ஸ்வாதந்த்ர்யத்தையே வெளியிடுகிறது. இதையெல்லாம் யோசிக்குமிடத்து அடைக்கலப்பத்தில் 'மிக வெள்கும்' என்கிற தன்னுடைய பாடம் மைஸூர் ஸபையாரின் கோரிக்கையின் பேரில் போடப்பட்டதாகச் சொல்வதின் உண்மையும் விசாரித்து தெரிந்துகொள்ளவேண்டியதாகும்.

ஆராய்ச்சி 34, 35 பாராக்களில் 'நன்றுசெய்தாரென்பர் போலும்' என்கிற பெரியாழ்வார் பாசுரத்துக்கு தேசிகன் உரைத்துள்ள தாத்பர்யம் தவறென்று தூஷித்திருப்பதற்குப் பதில் ப்ராக்ருதி 17ம் பக்கம் முதல் எழுதப்பட்டிருப்பதைக் குறித்து பரித்ராணம் 25முதல் 29 பக்கம் வரை விரிவாக தூஷிக்கப்பட்டிருக்கிறது. நாமெழுதியுள்ளதையும் இவரெழுதியிருப்பதையும் படித்துப்பார்த்தாலே எது ஸாமஞ்ஜஸம் எது வ்யாஜநமென்பது புத்திமான்களுக்கு நன்கு புலப்படுமாகையால் இதைக்குறித்து நாம் மறுபடியும் எழுதவேண்டிய அவசியமில்லை. ஆகிலுமிவரெழுதியதில் தானேதோ ஸாஹஸத்தை வெளியிடுவதாகச்சொல்வதால் அதைச் சற்று பராமர்சிக்க வேண்டியதவசியமாகிறது. கேசவன் தோஷஹோமஜ்ஞன் என்பதே ஸாஹஸமென்றும் அது

வே உபநிஷத்துக்களிலும் ஸூத்ரங்கள் முதலியவைகளிலும் ஸ்ரீதேசிகதிவ்யஸூக்திகளிலும் ஜயபேரி முழங்கப்பெற்ற தத்வமென்றும் இதுவிஷயத்தில் தானே பல நூல்களில் விரிவாக எழுதிப் பிறர் துர்வாதங்களையெல்லாம் தலையெடுக்கவொட்டாதபடி செய்திருப்பதாகவும் ஸமர்த்திக்கிறார். ஸமர்த்தநம் எப்படியிருந்தபோதிலும் வஸ்துஸ்திதியைப் பராமர்சிப்பவர்களுக்கு இவர் சொல்வதிலிருந்து என்ன தேறுகிறதென்றால் பகவானுக்கு நாம் செய்யும் பாபங்களே அக்ருத்யகரணக்ருத்யாகரணங்கள், அவைகளையே அவன் தனக்கு அதிபோக்யங்களாகக் கொண்டாடுகிறான், ஆகையால் பாபங்கள் செய்பவர்கள் மீதே அவனுக்கு அளவிறந்த காதல் என்பதே. இத்தால் நற்செய்கையுடையவர்களை பகவான் வெறுக்கிறானென்பது இவர் சொல்லாமலே ஸ்வாரஸ்யமாக ஏற்படுவதால் பகவானின் ப்ரீதியைப் பெறுவதற்குப் பாபம் செய்வதே உபாயமென்றும் புண்யம் செய்பவர் அவரது அப்ரீதிக்குப் பாத்ரமாவார் என்பதும் தேறுவதால் இம்மாதிரியான ஸாஸ்த்ரார்த்தத்தை ஸ்தாபிப்பதின் பெருமையைப்பற்றி இவரொருவரே பறை சாற்றத் தகுமென்பதை நாம் விஸ்தரிக்கவேண்டியதில்லை, ஆனால் இங்கு ப்ரஸ்தாவிக்கப்படும் முக்ய விஷயம்: பெரியாழ்வார் பாசுரத்தில 'போலும்' என்கிற பதத்துக்கு தேசிகனுரைத்த தாத்பர்யம். இந்த பதத்துக்கு இவரே கொண்ட தாத்பர்யத்தை நாம் நிராக்ருதியில் எடுத்துக்காட்டியிருந்தும் அதை ஒரு புறம் தள்ளிவிட்டு 'நன்னெறி' 'நல்வழி' படித்த மாணுக்கர்களைக்கேட்டு என்னை அர்த்தம் தெரிந்துகொள்ளும்படி சொல்லி முடித்திட்டார். அம்மாணுக்கரைக் கேளாமலே நான் ஸ்வயமாக வறிந்த அர்த்தத்தை ஏற்கனவே நிராக்ருதியில் ஸ்பஷ்டமாக எழுதியுள்ளேன். அங்கு அந்த பாசுரத்துக்குப் பொருந்தியவர்த்தமும் விவரமாய் வரையப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் தகுந்த ஸமாதானம் ஒன்றும் பரித்ராணத்தில் காணவில்லை. என்மீது நிந்தாவசநங்கள்தான் நிறைந்து நிற்கின்றன. இவ்வசைச் சொற்களைப்பற்றி நம்போலியர்க்கு இவர்பேரில் எவ்வித மனஸ்தாபமுமிருக்க நியாயமில்லை. விளக்கம்

19வது பக்கத்தில் முதல் பாரா முடிவில் 'லீலாவிபூதியில் இது வொரு லீலை போலும்' என்றும் 20வது பக்கத்தில் 3வது பாரா வில் 'இவர்கள் எழுதுவது தான் அப்ரதிமதேசிகதிவ்யவைபவ பூஷணம் போலும்' என்றும் இந்தப் பதத்தை ப்ரயோகித்திருப்ப தற்குத் தாத்பர்யம் நாம் கூறிய எதிர்மறை தவிர வேறென்னவெ ன்பதை யிவரே விமர்சிக்கத்தகும். இவர் ஆராய்ச்சியில் உதா· ஹரித்த இதர பாசுரங்களிலுள்ள இந்தப் பதத்துக்கு [illegible] கிருஷ்ணவதாரத்தில் செய்த [illegible] தங்கள் '[illegible]' என்றபடியும் '[illegible]' என்றபடியும் '[illegible]' என்றபடியும் [illegible] என்பதில் தாத் பர்யம் என்று முன்பே ஸூசிப்பிக்கப்பட்டது. அத்தாலேயே [illegible] விசிக்க வேண்டியத வசியம். ஆனால் இவர் எதற்கும் [illegible] பதிலெழுது வதை வ்ரதமாகக்கொண்டவராகத் தெரிவதால் நாம் கூறிய அர்த் தத்திலிருந்து 'காளியமர்த்தனம், கபித்தாஸுரபஞ்ஜனம், கன்று களை மேய்த்தது ஆகிய இவைகளைக்கண்ணன் செய்யவில்லையென்றே ஸித்திப்பதாக பரித்ராணம் 29வது பக்கம் முதல் பாராவில் அறு தியிடுகிறார். இதுவும் [illegible] வக்ஷஸ்ஷான்களுக்கு [illegible]மேயாகும். இந்த ஸந்தர்ப்பத்தில் இவர் கபித்தாஸுரபஞ்ஜனம்' என்று ஒரு புதுக் கதையைப் புகுர விட்டிருப்பதும் கண்ணுடையோர் நோக்கத்தகும். ஸ்ரீ[illegible] த்திலேயாவது அதையநுஸரித்த பெரியாழ்வார் திருமொழியிலா வது கபித்தாஸுரன் என்றொருவன் இருந்ததாகவும் அவனைக் கண்ணன் [illegible] பண்ணதாகவும் [illegible] புலப்படவி ல்லை. [illegible]னைத் தூக்கி [illegible]த்தை நோக்கி கிருஷ்ணன் எறிந்ததின்மேல் அம்மரத்திலிருந்து [illegible] களுடன் [illegible]னுடைய [illegible] கீழே விழுந்ததென் பதே காணப்படுகிறது. இவரிந்த கபித்தாஸுரன் என்று புதிதாக

வோர் அஸுரனைக் கல்பித்திருப்பதற்கு ப்ரமாணமென்னவென்று தெரியவில்லை. ஆனால் விஜயஶ்ரீ என்று மாளவிகை ஸ்ருஷ்டிக்கப் பட்டதுபோல் கவிஸமாஸஸ்ருஷ்டியும் உபபந்நமே என்றிவர் மேற்கோள்காட்டினால் நாம் ஆக்ஷேபிக்க விரகில்லை. 'மாஹாத்ம்யப்ரமாணவிசேஷ்' என்பதை ஸஹியாதவர் 'கவிஸமாஸ ஸஞ்சயவ்யாஸம்' செய்ய நேர்ந்ததே தேசிகநிந்தைக்கு மெய்யாக ஸூசித்ததென்பதற்கோர் நிதர்சநமாக ஸஹ்ருதயர்கள் அறிவர்கள்.

'மாஹாத்ம்யப்ரமாணவிசேஷ்' என்பதைக்குறித்து நிராக்ருதியில் நாம் எழுதியிருந்ததற்கு ஸரியான பதிலொன்றுமுரைக்காமல் தனக்கஸாதாரணமான திட்டுத்தொடரை வரைந்திட்டுக் கடைசியில் ஏதோ தான் ஏற்கனவே எழுதியிருப்பதாகவும் அதைப்பின்னே சேர்த்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். இந்த ப்ரகரணத்தில் பரித்ராணம் 24வது பக்கத்தில் நாம் நிராக்ருதியில் 'நீளா' என்று பட்டர் முதலியோர் குறிப்பிடும் வ்யக்திவிசேஷத்தை ஸ்ரீபாகவதத்தில் ஸத்யா என்றும் பாத்மத்தில் ப்ரூவிந்தா என்றும் குறிப்பிட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது 'மிகவும் சோசநீயமான ப்ரமஸம்ப்ரமம்' என்றிவர் சொல்லி அதோடு நிற்காமல் அவர்கள் வேறு, ஜாதியே வேறு என்றும் தான் இப்படி தைர்யமாகப் பேசுவதற்கு ஸ்ரீதேசிகனுடைய யாதவாப்யுதயமே ஆதாரமென்றும் அறுதியிடுகிறார். யாதவாப்யுதயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் ஏழெருதுகளையடக்கி நீளையைப் பரிணயம் செய்து கொண்டதாகமட்டில் கூறப்பட்டிருக்கிறதே தவிர நீளை இன்னாரென்கிற விவரம் காணப்படவில்லை. அப்பய்யதீக்ஷிதர் வ்யாக்யானத்தில் நீளையென்பவள் யசோதையின் ப்ராதாவான கும்பருடைய புத்ரியென்று ஹரிவம்சகதை யென்றெழுதப்பட்டிருக்கிறது. ஆனாலிப்போது நமக்குக்கிடைக்கும் ஹரிவம்சப்பதிப்பில் இக்கதையைக் காணோம். மேலும் நீளைக்கு கோதையென்று நாமாந்தரம் இருக்கலாமென்று நாம் சொன்னதற்கு இதெல்லாம் விரோதிக்காது. ஸ்வாமி தேசிகன் தாமே நீளையென்று காவ்யத்தில் குறி

த்த வ்யக்தியை இப்பெயரை மறந்து தவறுதலாக தாத்பர்யரத்நாவளியில் மோஹா என்று கூறிவிட்டாரென்று குறை கூறுவது பரித்ராணக்காரருக்குப் பொருந்துமே தவிர மற்றோருக்குப் பொருந்தாது. இவர் 'நீலா' என்று தன் பதிப்பில் பாடாந்தரமாகப் போட்டிருப்பதால் இப்பழிப்பு ஆதாரமற்றதென்று நாம் எழுதியதற்கு இவர் பதில் எழுதியிருப்பதும் விசித்திரமே. தேசிகன் வாக்குக்கு தெலுங்கு ஸம்ஸ்கிருதம் என்கிற தோஷமேற்படக்கூடாதென்கிற அபிநிவேசத்தால் துணிந்து தான் பாடத்தைத்திருத்தியதாகவும் அப்பாடத்தைப்பிறர் ஒப்புக்கொள்ளாததால் தேசிகனை தெலுங்கு ஸம்ஸ்க்ருதம் எழுதியதாகப் பரிஹஸிப்பதாகவும் சொல்லுகிறார். இதில் இவருடைய [illegible] எவ்விதமாக ப்ரகாசிக்கிறதென்பதை கவனிக்கவேண்டும். முதலில் இவர் க்ரந்தத்தைப்பதிப்பிக்கும்போது தான் ஸ்வயமாய் ஏதாவது திருத்துவதாயிருந்தால் அதைத்தன் திருத்தல் என்று காட்டும்படியாகக் கேள்விக்குறி முதலிய அடையாளங்களால் குறிக்கவேண்டியது கடமை. அப்படிச்செய்யாமல் 'நீலா' என்கிற பதத்தை மற்ற விடங்களில் பாடாந்தரங்கள் போடுவதுபோல் (brackets)க்குள் போட்டிருப்பதால் அதுவும் சில ப்ரதிகளிலுள்ள பாடமென்றே படிப்பவர்கள் நினைக்கவேண்டியதாகிறது. இப்படி படிப்பவர்களுக்கு ப்ரமம் உண்டாக்குவது ப்ராமாணிகமுறையாகாது. அல்லது அப்படியொரு பாடம் எந்த ப்ரதியிலாவது இருந்தால் அதை இப்போது இவர் மறைத்துத் தான் திருத்தியதாக பெருமையடித்தால் அது உண்மைக்கு விரோதமென்பதற்கு ஸந்தேஹமில்லை. இத்தோடு நிற்காமல் இன்னுஞ்சிலவிடங்களிலும் தான் பாடத்தைத்திருத்தியதாகவும் சொல்லிக்கொள்ளுகிறார். அடைக்கலப்பத்து 7 வது பாசுரத்தில் 'மிகவிளங்கும்' என்கிற பழையபாடத்தைத் திருத்தி 'மிகவெள்கும்' என்று தான் போட்டிருப்பதாகவும் யதிராஜஸப்ததி 44வது ஶ்லோகத்தில் '[illegible]' என்கிற பழைய பாடம் ஸரியல்ல, '[illegible]' என்றே இருக்கவேணும், அதுவே தேசிகன் திருவாக்கிலிருந்து வந்தது என்பதை உலகமறிய தான்

ஸ்தாபித்திருப்பதாகவும் சொல்லுகிறார். தன் ப்ரதமப்பதிப்பில் அடைக்கலப்பத்தில் பழைய பாடத்தைப் பாடாந்தரமாகக் கூடக் காட்டாமல் தன் பாடமொன்றையே போட்டிருக்கிறார். யதிராஜஸப்ததியில் மட்டும் தன்பாடத்தை முக்யபாடமாகவும்பழைய பாடத்தை Bracketsக்குள் பாடாந்தரமாகவும் போட்டிருக்கிறார். இந்த ந்யாயத்தை இங்குமநுஸரித்தால் 'மோக்ஷாய ச' என்கிற பாடம் ஸரியல்லவென்றும் அது தேசிகன் ஸாதித்ததல்லவென்றும் 'நீசாய ச' என்பதே ஸரியான பாடமென்றும் இவருக்கு நிச்சயம் ஏற்பட்டபிறகு அடைக்கலப்பத்தில் போல் 'நீசா' என்கிற தன் பாடமொன்றையே போட்டிருக்கவேண்டும்; அல்லது அதை முக்ய பாடமாகவாவது போட்டிருக்கவேண்டும்; பாடாந்தரமாக போட்டபோதிலும் 'மோக்ஷாய ச' என்ற பாடம் பிழையென்றேற்பட்டபிறகு அதை ஸ்வப்ரோக்தமாக வ்யவஹரிக்கவேண்டுமே தவிர. ப்ரந்தகர்த்தாவின் தவறுதலாக வ்யவஹரிக்க ந்யாயமில்லை. ஆகையால் ஆராய்ச்சியில் இவர் தேசிகன் ஸம்ஸ்க்ருதம் தெரியாதவர் என்பதற்கு இதையுதாஹரணமாகக் காட்டி அதை நான் இவருடைய பாடத்தைக்கொண்டே கண்டனம் செய்ததற்கு பரித்ராணத்தில் என்மேல் ப்ரத்யவஸ்தாநம் செய்வதன் நேர்மையை இவர்தான் கொண்டாடலாம். எவ்விதத்திலும் ஸ்ரீதேசிகதூஷணத்தை செய்ததாகவேண்டுமென்கிற ஒரே அபிநிவேசம் தவிர வேறு எதுவும் இம்மாதிரியான நடவடிக்கைக்குக் காரணமாகாது. ஸஹஜமாய் தேசிகன் விஷயத்தில் இவ்வளவு அஸூயையுடையவிவர் பரித்ராணத்தில் முதலில் எழுதியுள்ள தமிழ் பாட்டில் தேசிகபக்தர்கள் திருவடிகளைப் பணியும்படி தன்னெஞ்சை ஸம்போதிப்பதும் அடுத்தாப்போலுள்ள ஸம்ஸ்க்ருதஶ்லோகத்தில் தேசிகன் உபயவேதாந்தங்களைக் காத்து விரோதிநிரஸநம் பண்ணியதாக மங்களாசாஸனம் செய்வதும் கடைசியில் ஒரு ஶ்லோகத்தில் ஸ்ரீதேசிகதிவ்யஸூக்திரஸத்தை ஸர்வகாலமும் தான் ஆஸ்வாதநம் பண்ணி ஆனந்தாநுபவத்தில் மூழ்குவதாக எழுதியிருப்பதும் எவ்வளவு ஆர்ஜவத்தைத்தெரிவிக்கிறதென்று எல்லோருமறி

வர்கள். இப்படி மேற்பூச்சான தேசிகஸூக்திஸந்தோஹாவலியை உபஸ்தரணமாகவும் அபிதானமாகவும் வைத்து இந்த ஸம்புடத்துக்குள் நாநாவிதோபத்ரவதேசிகதீயதூஷணரூபமான விஷபூரத்தை நிரம்ப வைத்து பரித்ராணம் செய்து இதற்கு ஸத்ஸம்ப்ரதாயபரித்ராணம் என்று பெயரிட்டு எனக்கு தபாலில் அனுப்பி நானிதை பக்திச்ரத்தையுடன் ஆராதிக்கவேணுமென்று இவர் எனக்கு ஆதேசம் பண்ணியிருப்பது எவ்வளவு இவருடைய கௌரவத்தையும் ஔசித்யஜ்ஞாநத்தையும் வெளியிடுகிறதென்பதை புத்தியுள்ளவர்கள் கவனிக்கவேண்டும். இவரது புத்திவைபரீத்யம் ஒருபுறமிருக்க. இவர் தற்பெருமை பாராட்டும் பாடத்திருத்தங்களில் இரண்டொன்றை பூர்வபக்ஷபூர்வகமாய் இங்கு விமர்சித்துப் பிறகு 'வம்பவிழ்கோதை' என்பதில் ஸ்வாரஸ்யத்தைத் தெரிவிப்போம். பரித்ராணம் 45, 46 பக்கங்களில் யதிராஜஸப்ததி 44 வது ச்லோகத்தில் 'கலுஷோத்பவம்' என்றிவர் காட்டிய முக்யபாடத்தைப்பற்றி நான் நிராக்ருதியில் எழுதியதை இவர் தூஷிக்கிறார். இது விஷயத்தில் தூஷணாசயமாக நான் ஏதுவும் எழுதியிருப்பதாக ஸதுக்த்த பாஷிக்குத்தோன்ற ந்யாயமில்லை. இவரே 'கலுஷோத்பவம்' என்கிற பாடமே ஸரியானதென்று தான் உலகமறிய ஸ்தாபித்திருப்பதாகப்பரித்ராணத்தில் பறைசாற்றுகிறார். இதையே நான் காரணமாகக்கொண்டு ஆராய்ச்சியில் 19வது பாராவில் 'கலுஷமாவஹம்' என்கிற பாடத்தை அநுவதித்து 'பிறகு உப்பு வியாபாரிக்குக் கற்பூரத்தின் மதிப்புத் தெரியாதன்றோ?' என்று வாக்யமிருப்பதால் இவரபபாடமென்றபிப்ராயப்பட்டதை இவரே கைக்கொள்ள ப்ரஸக்தியில்லாததுபற்றி ஆராய்ச்சியை இவர் எழுதியிருக்கமாட்டார் என்று நிராக்ருதியில் சொன்னேன். இதை இவர் பரித்ராணத்தில் ஆக்ஷேபிப்பது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. இத்தால் ஆராய்ச்சியை இவர் எழுதவில்லையென்று நான் சொன்னதே இவருக்கு ஸஹிக்கவில்லைபோல் தோன்றுகிறது. அதிலிருக்கும் தேசிகநிந்தைகளைக் கூச்சமின்றிக் கூறத் தன்னைவிட வேறு யாருக்கும்

துணிவு பிறக்காதாகையால் இவ்வஸாதாரணமான சக்தி வேறு யாருக்காவதிருப்பதாக ஸந்தேஹம் ஏற்பட்டுவிடுமோவென்று பயப்படுவதே இந்த ஸம்ரம்பத்துக்குக் காரணமென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் அதிஸூக்ஷ்மபுத்தியானவாராய்ச்சி இவர் வாயிலிருந்து வந்ததல்லவென்று நான் விலக்கமுயன்றதை இவர் நிராகரித்து தைவத்தில் ஃபலம் வலுவில் வந்து விழுவதுபோல் தானே ஆராய்ச்சிகர்த்தாவென்று காட்டிக் கொள்வதற்கென்னகாரணமிருக்கக்கூடும்? இது நிற்க, இவர் கவபுஷ்பாவபும் என்ற பழைய பாடத்தை கவபுஷ்பொரூம் என்று திருத்தியதாகச் சொல்லிக்கொள்கிறார். இதன் ஸ்வாரஸ்யத்தை நமக்குப்புலப்பட வில்லை. கவபுஸ்வத்துக்கு உத்ஸ்யம் என்று அர்த்தத்தை வைத்துக்கொண்டு அதுடன் ரஸவர்ஷிணீம்ஸ்ரவாவொ ஷஸ்பாடதுபாட ஹெஉநழ என்ற விசேஷணம் அந்வயிக்கவில்லை யென்கிற காரணத்தினல் இப்பாடத்தை மாற்றியிருக்கவேணுமென்றேற்படுகிறது. கவபுஸ்வம் இங்கு உத்ஸ்யவாசியல்ல. வஸ்ஜாதீயவாசியென்று தெளிந்தால் இம்மாறுபாடு நிரவகாசமாகும். இதுவும் ‘அருடரும்’ என்ற பாடத்தை ‘அருடகும்’ என்று திருத்தியதற்கொப்பாகவே கொள்ள த்தக்கது! கவபுஸ்வத்துக்கு வஸ்ஜாதீயவாசிகவம் கொள்வதால் ஸாரஸ்வதஃ வஸ்துஸ்வஷபும் கஸாமஞஸ்யமும் ஸித்திக்கிறது. ‘கவபுஸ்ராஸ்யம்’ என்றும் ‘கவபுஸ்ராவபும்’ என்றும் பாடபேதங்களும் ஏற்கனவே உண்டு. இவைகளைவிட்டு ‘உஉவ’ என்றிங்கு ஸகவொமகஷ நம கநாவஸ்யகமே. இவர் பரித்ராணத்துக்கு கநாவஸமாகப்போட்டிருக்கும் ‘வம்பவிழ்கோதை தத்துவம்’ என்கிறதில் கடைசியில் ‘பாஷையின் நரம்பை யறிவதென்பது எளிதான காரியமன்று என்று பெருமை பாராட்டுகிறார். ஸம்ஸ்க்ருதம் அல்லது தமிழ் இவைகளின் ஸ்வரஸமான நடையைத் தானே நன்குணர்ந்தவர், பிறர் அறியாதவரென்பதே இதன் கருத்து. அறிவது என்பதை ஒரு காரியமாக இவ்விடத்தில் இவர் சொல்லியிருப்பதே இவர் பாஷையின் நரம்பை எவ்விதம் அறிந்திருக்கிறார் என்பதற்கு ஓர்

நிதர்சனமாகும். மற்றும் இரண்டொரு உதாஹரணங்களும் ஸ்வாமீ ஸம்பாதகந்யாயேந இங்குரைப்போம். இவருடைய ஸ்ரீதேசிக ப்ரபந்தஸாரத்தில் ஹயக்ரீவ ஸ்தோத்ரம் 18வது ச்லோகத்தில் ஸேவமாநாஸ்வா என்கிற ஸம்போதநத்தைத்தள்ளி ஸேவமாநாஸ்வா: என்கிற பாடத்தையவலம்பித்திருப்பதும் ஸமாச்ரயணீயதாம் என்கிற பாடத்தை ஆதரியாமல் ஸமாச்ரயணீயதா: என்று போட்டிருப்பதும் இவர் ஸம்ஸ்க்ருத பாஷையின் நரம்பை எப்படி அறிந்திருக்கிறார் என்பதையறிவிக்கிறது. தவிர முகுந்தமாலை கடைசி ச்லோகத்தில் 'யஸ்ய ப்ரிய ச்ருதிதரா கவிலோகவீரா மித்ரே த்விஜந்மவரபத்மசராவபூதாம்' என்றிருக்க அதில் ப்ரிய என்பதை மித்ரே என்பதுடன் அந்வயிக்கத்தெரியாமல் இவர் பதிப்பில் ப்ரியா என்று போட்டிருப்பதும், ந்யாஸவிம்சதி முதல் ச்லோகவ்யாக்யாநத்தில் ஜ்ஞாநாயுக்தயா என்பதற்குப் பதிலாக ஜ்ஞாநாயுக்தயா என்றும் 7வது ச்லோகவ்யாக்யாநத்தில் ஸம்வாத்ய என்பதற்கு ஸம்வாத்யோநஃ என்றும் 22வது ச்லோகவ்யாக்யாநத்தில் ஸக்ருத்கர்தவ்ய என்பதற்கு பதிலாக ஸ்வதிகர்தவ்ய என்றும் போட்டிருப்பதும் இங்குதாஹரிக்கப் பொருந்தும். இன்னும் இவ்விதமாகப் பல விருந்தாலும் இங்கவைகளை விஸ்தரிப்பது அநாவச்யகமென்று நிறுத்திக்கொள்ளுகிறோம். ப்ரக்ருதத்தில் 'சோதாயத்' சப்தத்தைக்குறித்து இவர் இவ்வளவு ப்ரயாஸம் செய்தது தேசிகனை தூஷிக்கவேணுமென்பதற்கே தவிர வேறல்லவென்று நாம் ஏற்கனவே கூறியுள்ளதால் நன்கு புலப்படும். வஸித்ராணம் கநகவல்லம் 29வது பக்கத்தில் ஸ்ரீமத் ரங்கராமாநுஜ ஸ்வாமி ஒன்பதினாயிரப்படியில் சோதாயத் என்பது தேசிகன் ஸாதித்தது என்பதை மனதுக்குள் ஸங்கோசத்துடன் ஏதோ வாதப்ரமாகக் காட்டியிருப்பதாகச்சொல்வது ஸரியல்ல. அங்கு புதிதாக யாதொரு வாதப்ரமும் புலப்படவில்லை. ப்ரத்யுத அதற்கு முன் பாசுரங்களில் கலாநிரஸநக்ருத்யாநா ஸாயாநேந நிவ்ருத்யாநாமிதி, சோகாத்ராணக்ருத்யாநா ஸாயாநேநாவிக்ருதாநிதி என்றபடியே இப்பாசுரத்தில்

கோதாயை ஶ்ரீக்ஷாவக்ஷ ஸ்தலீதாநம் ஸ்வாதேநாவிஷ்க்ருதாஞ்ஜலி என்று ஸாதித்திருப்பதால் கோதாசப்தத்தைத் தன் வாக்யத்திலேயே சேர்த்துக் கோர்த்திருப்பது வ்யக்தமாகிறது. இதனால் அந்த ஸ்வாமி இதைப் பூர்ணமாய் ஒப்பினரென்பது ஸ்பஷ்டம். கோதா என்பது ஸ்ரக்வாசகம் என்று நிர்ணயித்தபிறகு அப்பாடத்தை ஸரியென்று பிடிவாதம் பிடிப்பவர்கள்மீது கோபம் கொள்ளாமல் இத்தேசிகபக்தர் தேசிகனைப் பரிஹஸிப்பது விசித்ரமே. மேலும் இவர் தெய்விகஸூக்தமாலை பதிப்பித்த பிறகு யாருமதிலுள்ள 'நீளா' என்ற பாடாந்தரத்தை ஆக்ஷேபித்ததாகத் தெரியவில்லை. கோதாஸ்துதியே ஸ்வாமியின் பாடமென்றிவர் அபிப்ராயப்பட்டால் யாதவாப்யுதயத்தில் 'நீளா' என்று கூறி இங்கு 'கோதா' என்று சொன்னதற்குத் தகுந்த ஸமாதானமேதாவது தேடுவது பூர்வாசார்யஸூக்திமேதவிர ஸ்வாமியை ஹேளநம் பண்ணுவதற்கு இதை ஒரு வ்யாஜமாகக் கைகொள்வது எப்படி உசிதமாகும். அப்படி ஸமாதானம் தேடினால் நீளைக்கு 'கோதா' என்று நாமாந்தரமிருக்கலாம் அதையுத்தேசித்தே ஆழ்வார் அதை ப்ரயோகித்தாரென்று ஊஹிக்க இடமுண்டாகிறது. ஸத்ர, விதா, நீளா என்றிப்பெயர்கள் வெவ்வேறு வ்யக்திகளைக் குறிப்பதாக இவர் சொல்வதால் ஆழ்வார் கோதையென்றது பூமாலையைக் குறிக்குமானால் எந்த வ்யக்தியை உத்தேசித்து இப்பொதுவான விசேஷணம் ப்ரயோகிக்கப்பட்டதென்கிற ஸம்சயம் அவச்யமாய் ஏற்படக்கூடுமாகையால் நாம் ஏற்கனவே ஊஹித்தபடி ஆழ்வார் இங்கு கோதையென்றது ஓர் பிராட்டியின் திருநாமமேயென்பது ஊஹ்யப்படுகிறது. இல்லாவிடில் ஆழ்வார் திருவாக்கில் விசேஷ்யநிர்தேசமில்லாமல் விசேஷணப்ரயோகம் நேர்ந்ததென்கிற குறையை ஒப்புக்கொள்ளவேண்டியதாகும். இதைப் பரிஹரிப்பதற்காகத் தான் நிராக்ருதியில் கோதை என்பது சிறப்புப்பெயர் என்று சொன்னது. இது ஒரே வ்யக்திவிஷயமாயிருந்தாலும் இருக்கலாம். வ்யக்திஸமூஹத்தைக் குறிப்பதாக வைத்துக்கொண்டாலும் நமக்கு ஆக்ஷேப

மில்லை. ஆனால் இவர் சொல்லுகிறபடி ஏழெருதடக்கின வ்ருத்தாந்தம் ஈடுநகவ்ருக்திவிஷயமென்று கொண்டால் வ்ருக்திவிசேஷ நிர்ணயம் செய்யவேண்டியதவச்யமானதால் நாம் சொல்லும் வழியே நல் வழியென்று கொள்வது உசிதமாகுமென்பது கடஸ்யர்கள் ஒப்புக் கொள்ளத் தட்டிராது. அல்லது சௌடீர ஶப்தத்துக்கு 'சௌடீதே' 'ஶாம்டீக்தி', 'சௌஹீர்யதே', 'ஶவாய்ம்ஹீயதே' என்றிப்புடைகளில் வ்ருத்தத்திகூறுவதும் ப்ராமாணிகவழியாகும். இவ்வாறு தடஸ்த ஸஸஜதமான ராமத்தைத இவர் மநஸ் ஒப்பாததற்குக் காரணம் தேசிகநிந்தைக்கு அவகாசம் ஏற்படாமற்போகிறதே யென்பது தவிர வேறில்லையென்று நாம் சொல்லாமலே ஆராய்ச்சியில் 36 முதலுள்ள பாராக்களின் வவநவ்ருக்தியைக்கொண்டு எல்லோரும் நிஸ்ஸந்தேஹமாய் அறியலாம். "இது பண்டிதர்களுக்கு இயற்றினதா, பாமரர்களுக்கு இயற்றினதா என்று ஒருவராலும் நிர்ணயிக்கமுடியாமலிருக்கிற த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்னவளியோடு நிற்காமல் 'நன்றுசெய்தாரென்பர்போலும்' இத்யாதியான சில பாசுரங்களைக் கைப்பற்றி ஈஸந்ஹவுரைகளையும் எழுதிவைத்திருப்பவரை திவ்யப்ரபந்தங்களிலும் தெளிவான ஞானத்துடன் திகழ்ந்தவராகப் புகழவேண்டியது மிக அவசியமே," என்று ஸ்ரீ தேசிகனைக் குறித்து 39 வது பாராவில் நிகமனம் செய்திருக்கிறார். இது முதலான ஆராய்ச்சிநூலில் கண்டிருக்கும் விஷயங்களனைத்தையும் குறித்து பரித்ராணம் 9வது பக்கத்தில் "ஆராய்ச்சி நூலில் எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயமும் ப்ரமாணஷ்வி நீயதே என்னும்படியானது. அதில் ஒன்றுக்கும் விடையிறுக்க இவராலுமாகாது. இவரையொத்தாரும் மிக்காரும் பல்லாயிரவர் திரண்டாலுமாகாது" என்று "ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் ஸத்யம் ஹோஜமாவ்யதே' என்கிற கணக்கிலே கூறிவிட்டு மேல் விஷயவிவாரத்திலிறங்குகிறேன்," என்றிவர் சொல்லியிருப்பதே நம் நிர்ணயத்தை உறுதிசெய்கிறது. ஆனால் இந்த ஶபதம் மற்றொருவரின் ஆக்ஷேபத்தை எதிர்பாராமலே இவராலேயே பொய்யாக்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. ஐகமத்யரஸம் 13வது

பக்கத்தில் ஆராய்ச்சியில் தேசிகனைப்பற்றி தஜ்ஞர்கள் மனம் நோகும்படியான சில வாசகங்கள் இருப்பதாக இவரே சொல்லியிருக்கிறார். பரித்ராணம் 3வது பக்கத்தில் தேசிகனை நிந்திக்க ஒருவராலுமாகாது, நிந்திக்கிறவர் மநுஷ்யகோடியிற் சேர்ந்தவர்களுமல்லர் என்று அறுதியிடுகிறார். நிராக்ருதியில் நாம் எடுத்துக்காட்டிய ஸமேத்யாதிகளில் சிலவற்றை அதாவது 'உக்த்யா தநஞ்ஜயவிபீஷணலக்ஷ்யயா' இத்யாதியான ந்யாஸதிலகச்லோகத்துக்கு இவர் உதாஹரித்த வ்யாக்யாநத்தை குமாரவரதாசார்யருடையதாகச்சொன்னது, ஸச்சரித்ர ரக்ஷையில் ஈசசப்தமும் சிவசப்தமும் வ்யஸ்தமாய் ப்ரயோகிக்கப்பட்டால் ஒருகாலும் ருத்ரனைக் குறிக்காதென்று தேசிகன் ப்ரளயமாடினரென்பது முதலியதை மறுக்கவழியிராமல் பரித்ராணத்திலிவர் அவ்விதமே ஸ்வீகாரம் பண்ணவேண்டியதாயிற்று. ஆகையால் ஆராய்ச்சியில்கண்ட விஷயங்கள் க்ஷயமடைய ப்ரளயம் வரையில் காக்க வேண்டிய அவச்யமில்லையென்பது ஸ்பஷ்டமாகிறது. அதிலகண்ட அபவாதவிஷயங்கள் இம்மாதிரி அதிநச்வரமாயிருந்த போதிலும் அவ்வஸத்யநிந்தைகளால் ஏற்பட்ட பாபமோமானது ப்ரளயேऽபி ந க்ஷீயதே என்று எல்லோரும் கை தூக்கி மூன்று தரம் சபதம் செய்வதற்குப் பொருத்தமான விஷயமாகும். இவ்வாறிவர் த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலீ பண்டிதர்களுக்கியற்றியதா, பாமரர்களுக்கியற்றினதாவென்று ஒருவராலும் நிர்ணயிக்க முடியாமலிருக்கிறதென்று சங்கைப்படுவதால் அந்த சங்கையை இங்கு தெளிவிக்கிறோம். யதிராஜரென்று பொருளுள்ள வாக்யசப்தத்துக்கு வ்யாக்யாதாக்களாயிருப்போர் தேசிகதர்சனமொன்றுக்கும் அதிகாரியல்லவென்றும் அந்த சப்த்தால் வ்யபதேசிக்கத்தக்கவர் கேசவனின் தோஷதோஷகதோஷத்வத்தை ஸ்தாபிக்க முன்வரும் இவருடைய நூல்களுக்கே அதிகாரியாவார்களென்றும் இவரறிந்துகொள்ளட்டும். ஸ்ரீதேசிகர த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலியை இயற்றியது ஸ்ரீபாஷ்யாதிகளில் நன்கு பரிசயமுள்ள சிறந்த பண்டிதர்களுக்கே யென்பது

நிர்வாஹம், ஸம்ஸ்க்ருதவித்வான்கள் தமிழ் பாஷையில் அவஜ்ஞை காண்பித்து தந்நிமித்தமாக ஆழ்வாருடைய திவ்யஸூக்தியில் அவஶ்யமான ஆதரம் செலுத்தாததுபற்றி அவர்கள் அதன் மஹிமையை யதாவத்தாக உணரவேண்டுமென்றே த்ரமிடோபநிஷத்ஸாரமும் தாத்பர்யரத்நாவளியும் ஸ்வாமி அருளிச்செய்தது. அபிகரணஸாராவளி எவ்விதம் ஸ்ரீபாஷ்யத்துக்கு உபகரிக்கிறதோ அதற்குப் பதின்மடங்கு அதிகமாக த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி திருவாராயிரப்படிக்கு உபகரிக்கிறதென்பது ஸத்யாபிமானிகளான அபிஜ்ஞர்கள் அறிவார்கள்.

இதுநிற்க, ஆராய்ச்சியிலெழுதிய சில விஷயங்கள் அஸத்யமானவையென்று நாம் ப்ரமாணபுரஸ்ஸரமாக ருஜு செய்ததை நேராக மறுக்கமுடியாமல் இவர் அதிப்ரஸித்தமான த்ருணாவலம்பந்யாயமும் நக்ஷத்ராரோஹணம் செய்ததாகச் சொல்வது போல் பரித்ராணத்தில் அத்யந்தோபஹாஸ்யமான வழியில் பதில் சொல்ல யத்தனிப்பது மிகவும் உபேக்ஷணீயமாகும். உக்த்யா யந ஜயவிஶேஷணைக்யா இத்யாதிஶ்லோகத்துக்கு இவர் உதாஹரித்த வ்யாக்யாநம் அபூர்வாசார்யருடையதென்று சொன்னது பொய்யென்று நாம் நிராக்ருதியில் காட்டினோம். இதற்கு பரித்ராணம் 30-வது பக்கத்தில் இவர் 'அந்த வ்யாக்யாநம் யாருடையதாகவாவது இருக்கட்டும். ஸம்ப்ரதாயஜ்ஞரும் உங்களுக்கு உபாஸ்யருமான ஒரு மஹநீயர் எழுதிவைத்தது அது என்பதில் ஆக்ஷேபமில்லை' என்பது முதலாக அஸம்பத்தமான வாக்யங்கள் எழுதியிருப்பதே இவருடைய ஆர்ஜவத்தை ப்ரகாஶிக்கிறது. ஒரு வ்யவஹிதரான வித்வான் என்னிடம் இவ்வாறு சொல்ல நேர்ந்தது— 'ஆராய்ச்சியில் மாத்திரமல்ல; இதற்குமுன் இவர் எழுதியுள்ள பல பத்ரிகைகளிலும் இந்த வ்யாக்யாநம் அபூர்வாசார்யருடையதென்றே அறுதியிட்டுவந்திருக்கிறார். இதில் அஸம்பாவம் இராதென்று எல்லோரும் அதை நம்பியிருந்தோம். இப்போது தேவரீர் இதைப் பரிசோதித்துப் பொய்யென்று காட்டியதன்மேல் இதற்கு அவர் பதிலுரைக்க வகையற்றுக் காடுபாய்வ

தால்தான் இதன் தத்வம் விசதமாச்சுது' என்று. இதுமாத்திரமல்ல. இவர் அட்டஹாஸத்துடன் பறையடிக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் நாம் ருஜுவாகப் பரிசோதித்தால் அதெல்லாம் நிஸ்ஸாரமான விபீஷிகை யென்றே தேறுகிறதென்பது ப்ரத்யக்ஷ ஸித்தம். இதே விஷயத்தைக் குறித்து இவர் பரித்ராணம் 32 வது பக்கத்தில் எழுதும்போது நான் நிராக்ருதியில் சொன்ன விஷயம், அதாவது சரணாகதி கத்யத்திலிருக்கும் ஸம்வாத வசனங்களைத்தான் இங்கு ஸாரம் என்கிறது என்பது 'மிகவும் அபஹாஸ்யம் ; அப்போது 'ஜ்ஞாத்வா' என்றிருக்கவேணும் ; 'ச்ருத்வா' என்பது பொருந்தவே மாட்டாது. 'ஸாரம்' என்கிற சொல்லும் பொருந்தாது. தச்ருத்வைவ ஸ்வயம் த்ராணீ அடியோடு பொருந்தாது. ஆகவே இவர்களுடைய தூரார்த்தங்கள் ஈஷத்தும் விலை செல்ல மாட்டா' என்கிறார். நாம் கூறியவர்த்தங்களை இவருடைய கடையில் நாம் விலைகூற வரவில்லை ; இவர் வாங்கவும் வேண்டாம். அவைகளை யறியக்கூடிய ப்ராமாணிகர்களிருக்கிறார்களென்கிற நம்பிக்கை நமக்குண்டு. ஆனால் இம்மூன்று பதங்களும் எப்படிப் பொருந்ாதென்பதைமட்டில் பாஷையின் நரம்பையறிந்த விவரை கேட்கிறோம். இவர் 'ஜ்ஞாத்வா' என்று குறிப்பிடும் ஜ்ஞாநம் ச்ரவணஜந்யஜ்ஞாநமா வேறுவிதமாய் ஏற்பட்டதா வென்பதை இவர் தெளிவிக்கவேண்டும். ஸ்ரீபாஷ்யகாரர் தாம் பெரியபெருமாள் ஸாதித்தருளக்கேட்டு அதை கத்யரூபமாக வெளியிட்டதை ஸ்ரீவாயுஸாரம்ஸாரரூபமாக கத்யம் ஸேவிக்கும்போது ச்ரவணம் பண்ணி அறிந்துகொண்டவிஷயமிதுவென்பது தவிர வேறெப்படி இதற்குப் பொருள்கூறுவதென்பது தெரியவில்லை. ஆகையால் இது ஸாரம்ஸாரயா கத்யகாலக்ஷேபரூபமாகக் கேட்கப்பட்டதாகையால் ச்ருத்வா என்பது எப்படி அஸம்பந்தமாகும் ? இவர் கூறும் ஓர் கதைதான் எப்படி ச்ரவணவிஷயமாயிற்று ? அதற்குமட்டில் ச்ருத்வா என்பது யுக்தம் மற்றொன்றுக்கில்லையென்பது உந்மத்தர் தவிர வேறுயாராவது ஒப்புக்கொள்ளமுடியுமாவென்பதை அறிவுடையோர் யோசிக்கவேண்டும். கத்யத்தில் கூறப்பட்ட

ஸ்வப்நார்த்தத்தை ஏன் 'வரம்' என்று கூறமுடியாது. அவ்வரம் பெற்ற பாஷ்யகாரருடைய ஸம்பந்தத்தையிட்டு 'தந்நாம்பஸ்த்வாவித்வே' என்று ஏன்சொல்லக்கூடாதோ வென்பதும் விளங்கவில்லை. நாம் எழுதுவது ஸமூலத்தாயிருக்கவேண்டுமென்று பொறுப்புள்ளவர்களிப்படி இவர்போல் எழுதமாட்டார்களென்பதை நாம்சொல்லாமலே ஸகலரும் அறிவார்கள். இந்த ப்ரகரணத்தில் இவர் பரித்ராணத்தில் 30வது பக்கத்தில் 'ஸ்ரீமத்ராமாநுஜாசார்யாய ஶ்ரீஸூக்திவ்யாக்யாநஸமிதி வைதிகம்' இத்யாதிகளை அவர் தவறாகவுமஸம்ப்ரதாயமாகவும் எழுதிவிட்டாரென்றாவது எழுதி முடித்துவிடலாமே' என்றெழுதுகிறார். இதையே நாம் நிராக்ருதியில் 22வது பக்கத்தில் 'இதிலுள்ள அத்யுக்திகள் உபேக்ஷார்ஹமாகும்' என்று கூறியிருக்க அதைமறந்து இவர் இவ்வாறு எழுதியுள்ளார். அந்த வ்யாக்யானத்தை நாமாவது மற்ற ஸ்ரீ தேசிகஸம்ப்ரதாயத்தை நன்குணர்ந்தவர்களாவது ஒப்புக்கொள்ள ப்ரஸக்தியில்லை. அது ஸ்ரீதேசிகனுடைய நிர்ணயங்களுக்கு விரோதமென்பது இவர் குறிப்பிடும் திருக்குடந்தையில் போடப்பட்ட பதிப்பில் ஸ்ரீ குரிச்சி கோபாலாசாரியர் ஸ்வாமி யென்பவருடைய த்ராவிட வ்யாக்யானத்திலேயே விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்ரீநிவாஸாசார்யர் என்கிற ஷட் வ்யாக்யாதா நம்பிள்ளை முதலியோர் பரம்பரையைச் சார்ந்திருந்து பிறகு ஸ்ரீ தேசிகஸம்ப்ரதாயத்தின் சீர்மையை யறிந்து அதில் ப்ரவணரானதாகத் தெரிவதால் ஸாயிதாநவ்ருத்தியாக முன்னேற்பட்ட வாஸநாபலத்தால் இவர் இத்தகைய கதையை இங்கு புகுரவிட்டிருக்கக்கூடும். இதையும் நிராக்ருதியில் நாம் ஸூசிப்பித்திருக்கிறோம். வ்யங்க்யமாகக் குறித்த மட்டிலே ஸாவதாநர்கள் அறிந்துகொள்வார்களென்று நினைத்து அங்கு இதை விவரிக்கவில்லை. பாஷையின் நரம்புகளை யறிந்தவிவருக்கு வ்யங்க்யார்த்தம் புலப்படவில்லையென்று பரித்ராணவசனவ்யக்தியால் தெரியவருவதால் இங்கு இவ்வாறு வ்யக்தமாகக் கூறியுள்ளோம். தவிரவும் உக்த்யாயநஜபவிஶேஷணகக்ஷ்யா ப்ரத்யாய்ய என்பது முக்யவ்யாக்யாநத்தில் ஏதேஶத்ருஷ்டம் ஸம்ஶய:' என்றது

முதலாகப் பெருமாள் ஸ்ரீபாஷ்யகாரருக்கு விஶ்வாஸஜநநார்த்தம் கூறியுள்ளதை விவக்ஷிக்கிறபடியால் 'பவதா விதீர்ணம் வரம்' என்பது அதற்கு முன் 'நித்யகிங்கரோ பவ' என்பது முடிவாகக் கூறியவனுக்ரஹத்தையே குறிக்கும். கத்யபாஷ்யத்தில் 'நித்யகிங்கரோ பவாநி' இத்யேவ ப்ரார்த்திதம் ப்ரயச்சதி என்றதாலும் பிறகு 'நித்யகிங்கரோ பவ' இதி தத்வரஸ்வீகாரம் ஶ்ரேயஸ்ஸ்த்ரார்த்த ஸித்த்யர்த்தம்' என்றதாலும் இது நிஸ்ஸம்ஶயீக்ருதம்।

இன்னுமிவர் இவ்விஷயத்தில் நாம் கூறியதை தூஷித்து எழுதியிருப்பதனைத்தும் ஸ்ரீ ந்யாஸதிலகத்திலுள்ள முன்பின் ச்லோகங்களுக்கும் ஸ்ரீகூரநாராயணாசார்யர் வ்யாக்யாநத்துக்கும் முரண்பாடுள்ளவை என்பது அவைகளைப் படிப்பவர்களுக்கு ஸ்பஷ்டமாகும். 20 வது ஶ்லோகத்தில் 'ஶேஷ்யம் வபு: ... ... கருணயா ஸ்வீக்ருத்ய கடாக்ஷநிபாதநேந' என்று தன்னைக் கருணையுடன் கடாக்ஷித்த ஸ்வாமியைக் குறித்து, அடுத்த ச்லோகத்தில் 'ஸ்வஸ்வாதந்த்ர்ய ப்ரபத்தி தயா ஶேஷிணோ ஶேஷயாஸே:' என்று அந்த ஸர்வஸ்வாமியையே தான் பகவானை அடைவதற்கு ஸஹாயராகிறார் என்று ஶோகத்ருஷ்டாந்தபூர்வக ப்ரதிபாதித்து கௌதமம் உக்த்யா யஜ்ஞப இத்யாதி ஶ்லோகத்தில் தன்னுடைய ஆசார்யஸம்பந்தமே ஸ்ரீபாஷ்யகாரஸம்பந்தமுள்ளதென்கிற உத்கர்ஷத்தைத் தெறிவிக்கிறார். இதையே கூரநாராயணாசார்யர் வ்யாக்யாநத்தில் 'ந கேவலமஸ்மதாசார்யாபிமாநமாத்ரேண த்வ வ்யாஜ: கவிதார்க்கிகஶ்ரேஷ்ட: பகவத்ராமாநுஜாசார்யஸ்ய பகவதா த்த்தம் வரமேவ ஶ்ரீகாந்தஸ்ஸம்பந்தாதவி வயம் பகவத: ப்ரஸாதபாத்ரமிதி பாவ:' என்று விஶதீகரித்தருளினர். வஸ்துஸ்திதி இவ்வாறிருக்க இதில் தேசிகன் ஸ்ரீபாஷ்யகாரர் ஸம்பந்தம் பெற்றதாலேயே பகவானுடைய நிக்ரஹாநுக்ரஹங்கள் தனக்கு அவசியமில்லையென்று ஸாதித்திருப்பதாக அழுதியிடுவது சிறிதும் ஸமஞ்ஜஸமல்லவென்பது தத்ஸ்வபாவிக்கு ஸ்பஷ்டமாய் விளங்கும். இவ்விஷயத்தைக் குறித்து இவர் எழுதியிருக்கும் மற்ற அம்சங்களையும் ப்ராமாணிகர்களான புத்திமான்கள் கூடுகள

வும் அங்கீகரிக்கத் தகாதென்பது அவைகளைப் படித்தாலே தெளி வாகும். ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸம்பந்தம் பெற்றது மாத்திரமே தனக்குப்போதுமாகையால் ஸமஸ்தஸாத்யத்தைக்குறித்துத்தனக்கு எவ்வித அபேக்ஷையாவது அவசியமாவது கிடையாதென்று ஸ்ரீ தேசிகன் அபிப்ராயமென்று இவர் எழுதுவது ஸர்வஸ்வாபஹாரமா யும் ஸத்ஸம்ப்ரதாயத்துக்கு விருத்தமென்பது தத்வம்ப்ரபத்யேவி வயம் ஸம வத: ப்ரஸாதவாத் ரக்ஷிதி ஸாவ: என்கிற குமாரருடைய வ்யா க்யாநத்திலேயே நிரஸ்தம். மேலும் ‘முன் சுலோகத்திலு ள்ள ‘ஸ்ரேஷ்ட ஹோமாநவிஹிதஸ்வ: ஸேவகஸ்யாஹ்லகாதி:’ என்பதை யிவரிங்கு உதாஹரிப்பதும் அதற்கு விபரீதமான அர்த் தமுரைப்பதும் அந்த சுலோகத்தில் கடைசி பாதத்தில் ‘ஸத்வம் ப்ராபௌ ப்ரபவதி ததா தேஸிகோ மே தயாளு:’ என்று தனது ஸம்ப்ரவஹிதாவாயர்னே தன்னை பகவானிடம் சேர்ப்பிக்க வல்லர் என்றறுதியிட்டிருப்பதை மறைப்பதும், இந்த க்ரந்தத்தி லும் மற்றுமுள்ள எல்லா க்ரந்தங்களிலும் ஸ்வாமி தேசிகன் ப்ரப த்தி ஸ்வநிஷ்டையாகவாவது ஆசார்யநிஷ்டையாகவாவது உக்தி நிஷ்டையாகவாவது அநுஷ்டிக்கவேண்டிய யதிர்விசேஷமென்று ஸ்பஷ்டம்ஸ்வ்யமாய் ஸ்திரப்படுத்தியிருப்பதற்கு நேர் எதிராக ந்யாய நிர்தேவணமின்றிப்பிடிவாதமாகப் பேசுவதும், ஸம்ஜிவதேவர்ர ஸாம்விப்ரயாஸ்தமென்றே தகவுஸீகள் நிரூபிக்கத்தகும். மேலும் ஸ்ரீபாஷ்யகாரர் பெரியபெருமாள் திருவடிகளில் ஸர ஸர்வேச்வரான்விதமான ப்ரபத்தி செய்தாரென்றும் அவரப்படிச் செய்த ஸந்யாஸத்தைப் பெருமாள் அங்கீகரித்துவிட்டபடியால் தத்ஸம்பந்திகள் தனிப்படத் தம் தமக்காக உபாயாநுஷ்டானம் செய்யவேண்டிய அவசியமில்லையென்றும் ப்ரதிபாத அப்படிச் செய்வது ஸகர்த்ருத்வத்தை விதிக்கும் ஸாஸ்த்ரத்துக்கு விருத்தமென்றும் இவரபிப்ராயமாவென்று தெரியவேண்டும். அப்படியானால் ஸ்ரீபாஷ்யகாரருக்கு முன் ஆளவந்தார், நாதமுநி கள், நம்மாழ்வார் முதலிய மஹான்கள் ப்ரபத்தியை யநுஷ்டித்த படியால் ஸ்ரீபாஷ்யகாரர் அதையநுஷ்டித்ததே ஸாஸ்த்ரவிருத்தமாய்

முடியும். அதே கணக்கில் அவருக்கு முன்னுள்ள பூர்வாசார்யர்கள் ஒவ்வொருவரும் தவறாகவே நடந்ததாக ஒப்புக்கொள்ளவேண்டியதாகும். மேலும் ஸ்ரீபாஷ்யகார ஸித்தாந்தத்தில் சேர்ந்தவரெவரும் ஸ்வோஜ்ஜீவநார்த்தமாக யாதொரு ப்ரயத்நமும் செய்யவேண்டாம் தத்த்வஜ்ஞாநமாத்ரமே போதும் என்பவர்கள், இதர ஞாநஸ்தர்கள் தங்கள் மதத்தில் சேருவதாலேயே மோக்ஷம் கிடைக்கிறதென்று சொல்லும் ஸம்ப்ரதாயத்தை ஆக்ஷேபிக்க வாய் கிடையாதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஶாஸ்த்ரீய யஜ்ஞவ்யவஸ்தைகளில் அவஜ்ஞையும் அநாஸ்தியும் யதேஷ்டவிஹாரத்திலேயே நோக்கமும் விஞ்சியிருக்கும் இக்கலிகாலத்தில் தத்த்வாநபிஜ்ஞர்களான பெரும்பான்மையோருடைய மநஸ்ஸை ஸ்வைரவ்ருத்தில் ஆவர்ஜநம்பண்ணி தந்த்ரமாய் அயத்நஸாத்யமோக்ஷத்தைப் பெறுவதற்காக இந்த்ரியங்களுக்கு எவ்வித நியமமுமில்லாமல் எப்படி வர்த்தித்தபோதிலும் பசு முதலியவற்றை ரக்ஷித்து வீடு சேர்க்கவேண்டியது சொந்தக்காரன் பொறுப்பாவதுபோல் நம்மை ரக்ஷிக்கவேண்டிய பொறுப்பு நம் ஸ்வாமியாகிய பகவானதேயல்லது நமக்கு அதில் எவ்விதஸம்பந்தமுமில்லை, நாம் யதேஷ்ட ஆஹார நித்ராதிஷு யதேச்சாஸஞ்சாரிகளாகத் திரிய வடுக்கும் என்றிப்புடைகளில் உபதேசம் செய்பவர்கள் ஆராய்ச்சி 71வது பாராவில் காணப்படுகிறபடி ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயஸ்தர்களாயிருக்கும் ஆசார்யர்கள் நடத்திவரும் ஆசாராநுஷ்டாநக்ரமங்கள் தேசிகன் திவ்யஸூக்திகளுக்கு நேர் விருத்தமென்றும் கேவலம் த்ரவ்யார்ஜநத்துக்காகச் செய்யப்படுபவையென்றும் நிந்திப்பது ஸர்வமும் விபரீதமாய் நிற்கும் இக்காலத்துக்கு அத்யந்த ஸமுசிதமே.

இனி பிராட்டியின் உபாயத்வ விஷயமாய் பரித்ராணம் 32, 33, 34 பக்கங்களில் இவர் சொல்வதைப் பராமர்சிப்போம். ஆராய்ச்சியில் 75, 76 பாராக்களில் புருஷகாரத்வமும் உபாயத்வமும் பரஸ்பர விருத்தங்களென்றும் அது உலகத்திலும் காணலாமென்றும் எழுதியிருந்தபடியால் அதற்கு ஸமாதாநமாக நாம் நிரா

க்ருதி 23ம் பக்கத்தில் ஸாத்ருஶ்யத்தைக்கொண்டும் இரண்டும் பிராட்டி விஷயத்தில் பொருந்துமென்று ஸ்பஷ்டமாய் நிரூபித்தோம். இதற்கு ஹேதுபுரஸ்ஸரமாக மறுப்பு ஒன்றும் கூற முடியாதாகையால் பரித்ராணத்தில் இவர் ஏற்கனவே இது விஷயமாகப் பிறரை ஜயித்ததாகப் பெருமை கூறிக்கொண்டு பெருமாளுக்கும் புருஷகாரத்வம் ஏற்படுமென்று நிஷ்கர்ஷம் செய்கிறார். இதற்கு நாம் பதிலுரைக்கவேண்டிய அவசியமிருப்பதாகத் தோன்றவில்லை. இவர் எழுதியுள்ளதைப் பார்த்தாலே இன்னது சொல்வதென்கிற நிச்சயமில்லாமல் முன்பின் விரோதமாய் ஏதாவது பதில் எழுதவேணுமென்று எழுதியிருப்பதாகப் புலப்படும். உபாயத்வம் உபயநிஷ்டமாகவும் புருஷகாரத்வம் ஏகநிஷ்டமாகவும் இருப்பதால் இவர் சொல்லும் விஷயத்துக்கு ப்ரஸக்தியில்லையென்று நாம் ஸ்பஷ்டமாகக் கூறியதற்கு முதலில் ஸாவஶ்யகமாக ஶங்காஸமாதாநங்களும் வ்யாக்யாநங்களும் செய்து கடைசியாக விதியில்லாமல் நாம் சொன்னதை அப்படியே ஒப்புக்கொள்வதாகவும் மேல்கேள்வி ஒன்று கேட்பதாகவும் ஆரம்பித்து பிராட்டியைப்போல் பெருமாளும் தனக்கு வேண்டியவர்களுக்காக பிராட்டியிடம் சிபார்சு செய்ய நேரிட்டால் என்ன செய்வது? அப்போது ஶாஸ்த்ரங்களில் வழி சொல்லப்படவில்லையே யென்று சொல்லி நாம் சொன்னது அசட்டுவாதமென்று த்ருஷ்டமாய் தூஷிக்கிறார். இவருக்கு ஸரியானவற்றை தூஷிப்பதே இயற்கையென்பது முன்பே நன்கு விளக்கப்பட்டிருப்பதால் இங்கும் இவர் அதை வெளியிடுவது ஓர் ஆச்சர்யமில்லை. ஆனாலும் இவரது யுக்திகள் நிராதாரமானவையென்பதை மறுபடியும் நிரூபிக்கிறோம். பெருமாள் நிரங்குஶஸ்வதந்த்ரராகையால் குற்றம் செய்தவர் திறத்தில் அவருக்கு உபாயத்வமே அமைந்துள்ளதென்றும் பிராட்டிக்கு மாத்ருத்வப்ரயுக்தமான புருஷகாரத்வம் இயல்பென்றும் ஸம்பந்தமாகிற விஶேஷோபாயத்வம் உபயநிஷ்டமாகையால் தனக்கு ஸாதாரணமான புருஷகாரத்வாகாரத்தையிட்டு பிராட்டி உபாயனான பெருமாளிடம் ஸ்வாமிகள்

திறத்தில் காருண்யத்தையவலம்பிக்கும்படி சிபார்சு செய்ததின் மேல் அதற்குப் பெருமாளிசைந்து இருவரும் சேர்ந்து ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் செய்வது ஸகலஶாஸ்த்ரங்களுக்கும் யுக்திக்கும் லோகாநுபவத்துக்கும் நன்றாகப் பொருந்தியதே யென்பதும் நாம் சொன்னதின் கருத்து. இதற்கு இவர் சொல்லியிருப்பதைக் கொண்டு எவ்விதமான மறுப்பு ஏற்பட்டதென்பது தெரியவில்லை. இவர் சொல்வது யுக்தமாயிருந்தால் நாம் சொல்வது அசட்டுவார்த்தையாகும். ஆனால் இவர் சொல்வது இவருக்கே விளங்கிற்றுவென்கிற கேள்விக்கு பதிலுரைக்க இவருக்கு வழியிராது. இந்த ஸந்தர்ப்பத்தில் இவர் பின் வருமாறு பேசுகிறார்—"இந்த அசட்டு வாதத்தைகுமாரதேசிகனே வெகுநிபுணமாகக் கண்டித்திருக்கிறார். ஸ்வஸ்தி கர்தாபஹர்தா ச பத்யுர்ய: க்ருத்யத்வயம் ஶ்ரிய: । நிக்ரஹாரணம் காலே ஸாபேக்ஷணே நுக்ரஹே ॥ என்கிற அவருடைய திவ்யஶ்ரீஸூக்தி பலகால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறதே. 'பலனளிக்கும் கார்யம் எம்பெருமானுடையதுதான். சிபார்சு செய்யும் கார்யம் பிராட்டியினுடையது' என்று இதில் சிலாசாஸனமன்றோ செய்திருக்கிறார்" என்று. இதில் குமாரதேசிகன் என்கிற நிர்தேஶம் ஸ்ரீநைனாசார்யரைக் குறிக்கிறதென்று நினைக்கிறோம். இந்த ஶ்லோகம் அவருடையதன்றென்றும் ஸ்வாமி தேசிகனே சதுஶ்லோகீபாஷ்யத்திலருளிச்செய்திருக்கும் காரிகையென்றும் இவருக்குத் தெரிவிக்கிறோம். மேலும் இந்த ச்லோகத்தில் பதியின் நிக்ரஹபர்யாஸியை ஶமிப்பது அநுக்ரஹத்தைத்தூண்டுவது என்று வாராஷகாரகத்வத்தின் ப்ரகாரத்வயம் பேசப்பட்டிருக்கிறதே தவிர லக்ஷ்மியின் உபாயத்வம் இந்த பக்ஷத்தைச் சேர்ந்ததல்லவாதலால அது இங்கு ப்ரஸ்தாவிக்கப்படவில்லை. உண்மையிபபடியிருக்க இந்த சுலோகத்தில் சிபார்சு செய்யும் கார்யம் தான் பிராட்டியினுடையதென்று சிலாசாஸனமன்றோ செய்திருக்கிறார் என்று இவர் சொல்வது எவ்வளவு யுக்தமென்பதை கவனிக்க வேண்டும். அடுத்த பக்ஷமாகிய சதுஶ்லோகீ மூன்றாவது ச்லோக வ்யாக்யானத்தில் பிராட்டியின் ஸமர்த்வம் ப்ரஸ்தாவிக்கப்படு

வதால் அதன் பாஷ்யத்தில் ஸ்ரீதேசிகன் உபாயத்வத்தை நிர்ணயி த்திருக்கிறார். அங்கு ஆரம்பத்திலேயே 'ஸர்வம் ... ஸ்வாமித்வஸ்வ ஸம்பந்தம் ஸ்ருதிவாக்ய ப்ரஸாதகம் ஸகலபுருஷார்த்த ப்ரார்த்தனீய த்வாய ஸ்வஸம்பந்தானுஷங்கேண தத்த்வம் ... உபபாதயதி- ஸம்க்ஷிப்தி' என்று எல்லா புருஷார்த்தங்களையும் அளிக்கக்கூடிய ஸித்தோபாயத்வத்தைக் கூறிப் பிறகு சிலர் இதை ஆக்ஷேபிப்பதை "நநு மோக்ஷப்ரதத்வம் பகவத ஸர்வேதி ஸம்ப்ரதிப்ய ஸ்தாபிதம். ... தத்ர 'ஸம்ஸ்ருதிக்ஷரவேஷவாயவி' த்யவிசேஷவசனம் ப்ரசம்ஸாமாத்ரபரம் ஸ்யாத்" என்று பேசி ஸமாதானம் ஸாதிப்பதை யருளிச்செய்கிறார். "ஏவம் | ஸ்ரீமாத்வத ஸர்வ ... ஸாமான்யேன ப்ரஸ்துதம் ஹி பரமோபாயம் | நிஸ்தரத்வவிசே ஷேண வ்யக்தயா நவராயணா:' || இதி பரஹைதம் கதம் பரமோபாய நிஸ்தரணகாரணத்வேந லக்ஷ்மீஸம்ஸ்ரயணஸ்ய ப்ரதி வாதநாத் ...ஸர்வம் ஸ்பூதே பத்ராரம்பலோகே ந்யாயேந மோக்ஷா பாய தயிகாரயோஸ்தவதே தத்ரைவம் உபவஹ்நவம்" என்று பிராட்டியின் உபாயாங்கத்தை ஸ்தாபித்து அடுத்தாப்போல் புருஷகாரத்வத்தைப்பற்றித் தனிப்படக் கூறுகிறார்—'மோக்ஷ ப்ரதே பகவதி ஸம்ஸ்ரக்ஷிணாம் பட்டகதயேஷா திஷ்டதீதி ப ஸம்ப்ரஸநதி |' என்று. அத்ர பரமபத் தத்பராயணக: | உபா யத்வத்தைக் குறித்து சிலருக்கிருக்கும் ஆக்ஷேபத்தையெடுத்து ஸமாதானமுரைத்தோம். புருஷகாரத்வவிஷயத்தில் அவ்வித ஆக்ஷேபம் ஒருவருக்குமில்லாமல் எல்லோருமதை ஸர்வஸம்மதமாய் ஒப்புக்கொண்டிருப்பதால் அதைக்குறித்து விஸ்தரிப்பது அவசிய மில்லையென்று தாத்பர்யம். இக்கிவர் கடைசி வாக்யத்தை மட்டும் எடுத்து அதில் ஸம்ஸ்ரக்ஷிணாம் என்பதை முதலில் போட்டு •வகாரத்தைத்தள்ளி மாறுபாடு செய்து 'ஸம்ஸ்ரக்ஷிணாம் மோக்ஷ ப்ரதே பகவதி ஸ்வயம் பட்டகதயா திஷ்டதீதி ஸம்ப்ரஸநதி |' என்று உதாஹரித்திருப்பதும், இதைத் தன் பக்ஷத்துக்கு அநு கூலமான ப்ரமாணமாக 'காண்மின்' என்று பறையடிப்ப தும்• ஸங்கோசமற்ற அநுஜாதீமத்தை நன்கு விளக்குகிறது.

'அஹோ பத மஹத்கஷ்டம் விபரீதமிதம் ஜகத்। யேநாபத்ரபதே ஸாதுரஸாதுஸ்தேந துஷ்யதி ॥' என்ற ஶ்லோகவசநம் இங்கு நன்கு பொருந்தும். இவ்வாறு விப்ரலம்பகமானவற்றை யெழுதியதோடு நிற்காமல் 'இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளின் பொருளை யறிவதற்கே சக்தியற்றவர்கள் இவற்றை விமர்சித்து ஸமந்வயம் காட்ட ப்ரஸக்தியேது? சக்தர்களே கிளர்ந்து கைகூப்பி நின்றபோது இவர் எவ்வளவு' என்று நம்மை நிந்தித்து வீரவாதம் பேசுகிறார். இதுவும் உந்நித்ரதார்ஷ்ட்யஸ்ய பராகாஷ்டையாகும். குமாரதேசிகன் நம் நிர்ணயத்துக்கு விருத்தமாக ஸாதித்ததாகச் சொல்லி இவர் தவறுதலாய் சது:ஶ்லோகீபாஷ்யத்திலிருந்து உதாஹரித்ததைப் பற்றி முன்பே கூறியிருக்கிறோம். பிராட்டியின் உபாயத்வபுருஷகாரத்வவிஷயமாய் குமாரர் எப்படி நிர்ணயித்திருக்கிறாரென்பதைக்காட்ட நாம் ஒரு உதாஹரணம் கூறுவோம். இவரே முன்னொரு ப்ரகரணத்தில் ப்ரஸ்தாவம் செய்திருக்கும் ந்யாஸதிலகவ்யாக்யானத்தின் ப்ரதமஶ்லோகவ்யாக்யானத்தில் இவ்வாறு குமாரரருளிச்செய்திருக்கிறார்—"யதா பரம் ப்ரஹ்மேந்த்ரயாஜிநாம்... ஸமஸ்தஹவிர்போக்த்ருவிஶிஷ்டஸ்ய நாராயணஸ்ய ஶரணத்வம் ... ஸர்வம் ஶ்ரியோ விஶேஷணதயா'ந்வயே'பி நோபாயைகத்வஹாநி:। யதா சோத்தரவாக்யே தஸ்யா: ப்ராப்யவிஶேஷணத்வே'பி ப்ராப்யபஹுத்வம் ந ப்ரஸஜ்யதே, ஸர்வம் பூர்வவாக்யே'பி உபாயகதவிஶேஷணத்வஸ்வீகாரே ந ப்ராபகத்வமிதி ந கஶ்சித்விரோத: ஸந்த்யாஹிநிவேஶாத்... ஶ்ரிதாநாம் தோஷம் ஹித்வா தாம்ஶ்ச ஜ்ஞாநாதிபிர்குணை: பரிவர்த்தயதி। ஸா ச பரமேஶ்வரம் புருஷகாரதயா ப்ரஸாதயதே। ஸ்வயம் ச தேஷாம் ரக்ஷணாய ச ஸர்வஶரண்யம் ஸம்ப்ரேரயதி। த்ருஶ்யதே ச—'லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேஶோ தேவ்யா காருண்யரூபயா। ரக்ஷகஸ் ஸர்வஸித்தாந்தே வேதாந்தே'பி ச கீயதே' இதி। ததஶ்ச ஸர்வஶேஷீ ஶ்ரிய:பதிரேவ ரக்ஷக: இதி ஸித்தம்।" என்று. இப்படி திவ்யதம்பதிகளிருவரும்சேர்ந்தே ரக்ஷகராவார் என்று ஸ்பஷ்டமாய்ச் செய்துள்ள நிர்ணயம்

ஶிக்ஷாஶாஸநமா, அல்லது இவர் இங்குமங்குமுள்ள வாக்யங்களை அவைகளின் பூர்வோத்தரஸந்தர்ப்பத்தை மறைத்து மாற்றிப் புணைத்துப் பொய்யாகக் கல்பநம் செய்திருப்பது ஶிக்ஷாஶாஸநமா, என்பதை புத்திமான்கள் கவனிக்கவேண்டும். இப்படி குமாரர் வ்யாக்யாநம் செய்த ந்யாஸதிலகஶ்லோகத்தில் 'ப்ரபத்த்யா தத்த்வஸ்திணிதவைஶிஷ்ட்யவிஷயாம்' என்றும் ஶ்ரீஸூக்தியில் 'உபேஶ்யத்வம் ஜநநி ஸஜதோர்ஜிதோபாயமாஹா: ப்ரத்யர்பூவே ஸவிஷி யாவயோமோகஶேஷித்வயோமாஸ' என்றுமிருப்பதால் ஶ்ருதிஸவிஸ்தவேபூணமாகிற இந்த உபாயஜ்ஞத்தில் ஸம்ப்ராப்யமாய் நிற்பவர்கள் திவ்யதம்பதிகளிருவருமேயென்று தேறி நிற்பது ஸர்வஸ்பஷ்டம். தவிரவும் 'ஶ்ரீணாதி நிகிலாந் தோஷாந்' என்கிற நிர்வசநத்தால்ஸர்வாபராதஶமநீயென்று ஸித்திப்பதால் 'ஸர்வாபவேஷ்யா மோக்ஷயிஷ்யாமி' என்று ப்ரதிஜ்ஞை செய்தவனுக்கு ஸமாநயோக்யதையாவதால் உபாயத்தில் ஐக்யம் ஸ்பஷ்டமிதி! இப்படிக் கொள்ளாதவர் பிராட்டியை ஶ்ரீஶப்தத்தைவிட்டு வ்யவஹரிக்க உரிமையில்லாதவராவார்.

மேலும் ஶ்ரீபராஶரபட்டர் அருளிச்செய்த ஶ்ரீகுணரத்நகோஶத்தில் 32வது சுலோகத்தில் 'தவ பகவதஶ்ச ஏக ஸாதாரணா குணகணாராஶய:' என்று இருவருக்கும் பொதுவான குணங்களை கணநம் செய்கையில் ப்ரணதவரணவ்ருத்திக்ஷேத்ரஜ்ஞதவ பாரவஶ்யா: என்றவிடத்தில் ஶ்ருதியில் 'யதீதெவேஷ ப்ரணதே' என்று ஶக்தியை விபிக்கும் வாக்யத்தை ப்ரணதவரணவசத்தால் ஸூசித்ததே உபாயஸம்ப்ரதத்தில் பகவானுக்குப் போல் லக்ஷ்மிக்கும் ஐக்யமுண்டென்பதை ஸாதிக்கிறது. க்ஷேத்ரஜ்ஞ ஶப்தமும் இதை அங்கீகரிக்கிறது. மேலும் 28வது சுலோகத்தில் 'தத்த்வஶப்தாஸ் த்வாம் ந வ்யுதஸ்யதே ஶ்ருதிரபி' என்றதால் பகவானைச்சொல்லுமிடங்களிலெல்லாம் பிராட்டியையும் சேர்ந்தநுஸந்திக்கவேணுமென்கிற நியமம் ஏற்படுவதால் இருவருமே ஸித்தோபாயமாகிறார்கள் என்பது நிஶ்சிதம்! இவ்விதமே பட்டருடைய ஶிஷ்யரான நஞ்ஜீயரும் தமது ஶ்ரீஸூக்தபாஷ்ய

த்தில் 'ஸம்ஶ்ரீம் ஸர்வஸாதாரணம்' என்பதை வ்யாக்யாநம் செய்யும்போது "உபப்ரும்ஹணாந்யபி த்ருஶ்யந்தே: பதிதஸ்யைவ ஶ்ரயம் ப்ரதிபாதநேந தயோ: ஸர்வஸாதாரணத்வஸாம்யம் ப்ரதீயதே। யதா பகவத்கீதாஸு — 'ஸமோஹம் ஸர்வபூதேஷு ... வேதா நித்யம் தத்ப்ரயதிஷ்யதி।' இதி। வ்யாக்யாதம்— ஸர்வஸ்வாமித்வவிஶிஷ்டா, நித்யம் ஸர்வகாமேஷு தத்ப்ரயதிஷ்யதி தத்வேந பகவாநாஶ்ரயதே। தத்ப்ராப்தி: ஶரீரகாயாயாவதக்ஷயவிவக்ஷிதகாரணகாவாவாய்யக்லேஶவாயக்லேவாபாயகஸர்வாஜ்ஞயஸர்வஶ்ரீரீகாதயோ யஸ்யா: த்ருஶ்யா கவி யஸ்யா இதி தத்ப்ரயதிஷ்யதி இத்யர்த்த:" என்று ஸம்சயவிபர்யயங்களுக்குச் சிறிதும் இடமில்லாமல் விஶதீகரித்திருக்கிறார். ஆகையால் ஸ்ரீபட்டர் தச்சிஷ்யர் முதலிய ஸர்வஸத்ஸம்ப்ரதாயாசார்யர்களுக்கும் இவ்விஷயத்தில் மற்றுமுள்ளவெல்லா க்ரந்தங்களில் போல் ஸ்ரீதேஶிகனுடைய திருவுள்ளமே ப்ரமாணமென்பது ஸ்பஷ்டமாகிறது. இதற்கு மாறாக அவரவர் மனம் போனபடி கல்பனங்கள் செய்வது தத்த்வஜ்ஞர்கள் மநஸ்ஸுக்கு ஒருகாலுமிசையாது. இவ்விஷயத்தில் வக்தவ்யாம்ஶவிஸ்தாரம் ஸ்ரீந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஸம்ஸாரவிமோக்ஷாவஸாநத்திலும் அதற்கு ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமி அருளிச்செய்த வ்யாக்யாநத்திலும் கண்டு கொள்வது.

மேலும் ஓர் முக்யமான கேள்விக்கு இவர் பதில் சொல்ல வேண்டியவராகிறார். பரித்ராணம் 26, 27, 28 பக்கங்களில் இவர் கேஶவஸ்ய தோஷபோக்யத்வம் என்பதை வெகு ஊக்கத்துடன் ஸாதிக்கிறார். இவ்விஷயம் உபநிஷத்துக்களிலும் தேசிகதிவ்யஸூக்திகளிலும் பேரி முழங்கப்பெற்ற விஷயம் என்றும் சொல்லுகிறார். இவர் ஆராய்ச்சி 34வது பாராவில் அபராதிகள் பேரில் பிராட்டி குற்றம் சாட்டியும் பெருமாள் அதைப்புறக்கணித்துத் தாம் அவர்களுடைய குற்றங்களையெல்லாம் தனக்கு உகப்பாக அங்கீகரித்து ஆநந்தமடைவதாகச்சொல்லி, குற்றத்தை 'நன்றன்று' என்று ஸ்ரீ தேசிகன் ஸாதித்திருப்பதைக் கண்டிக்கிறார். இவையெல்லாவற்றி

விருந்தும் என்னதேறுகிறதென்றால் பிராட்டி குற்றம் செய்தவர்கள்பேரில் குற்றம் சாட்டும் அதிகாரத்தை வஹிப்பவள் என்றும் பெருமாள் அதை கவனியாமல் குற்றங்களை பரமபோக்யமாகவநுபவித்தாநந்தித்துக் குற்றவாளிகளைத் தனக்கு மஹோபகாரிகளாகக்கொண்டாடுபவரென்றும் ஸித்திக்கிறது. இத்தாலிவர் மதத்தில் புருஷகாரத்வஶக்தியே இல்லாததுபற்றிப் பிராட்டிக்கு போலீஸ்காரத்வமே ஸித்திப்பதால் இவர் ஏன் பிராட்டிக்கு புருஷகாரத்வமே உண்டு என்று ஸாதிக்கப்ரயாஸம் கொள்ளுகிறாரோ தெரியவில்லை. மற்றுமோர் முக்கியமான விஷயம் இங்கு சொல்லவேண்டியிருக்கிறது. விஷ்ணுபத்நீ என்றும் ஸர்வபத்நீ (ஸர்வஸ்ய ஸர்வேஶ்வரஸ்ய பத்நீ) என்றும் பிராட்டிக்கு ஸாதாரண வ்யபதேஶங்கள் ஶ்ருதிஸித்தங்களானவை. பத்நீ என்கிற ஶப்தம் 'பத்யுர்நோ யஜ்ஞஸம்யோகே' என்கிற பாணிநிஸூத்ரப்படி யஜ்ஞத்தில் பதியுடன் ஸஹாயிநியாயிருப்பதைக் குறிக்கிறது. 'பதிஶப்தஸ்ய நகாராதேஶ: ஸ்யாத் யஜ்ஞஸம்பந்தே। தம்பத்யோ: ஸஹாதிகாராத்' என்பது இதன் விவரணம். 'ஶ்ரிதஸம்ரக்ஷணயஜ்ஞ ஸஹதர்மசாரிணீ' என்பது நஞ்சீயரின் ஸ்ரீஸூக்தபாஷ்யம்। ஶ்ருதிஸித்தமான பத்நீத்வம் 'ஸஹதர்மசரீ தவ' என்கிற ஜநகவாக்யத்தால் உபப்ரும்ஹிதம்। விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷிதநு பத்நீஸஹாயமில்லாமல் தாத்ருஶதீக்ஷைக்கு ஸந்நத்தனேயாவனாகையால் ஶ்ரிதரக்ஷாவ்ரதாநரூபமஹாயஜ்ஞத்தில் லக்ஷ்மிக்கு அந்வயமில்லையென்றால் இந்த யஜ்ஞத்துக்கு ஸ்வரூபமே ஸித்திக்காது, பகவானுக்கு தததிகாரமும் வாய்க்காது. ஆகவே இங்கு நம்மால் விவரிக்கப்படும் இவருடைய க்ரந்தமாகிய ஸத்ஸம்ப்ரதாயபரித்ராணத்தால் பகவானுபாயதசையில் பத்நீவிரஹிதனாவதுபற்றி திவ்யதம்பதிகளால் ப்ரதிக்ரஹிக்கவேண்டிய ஶூத்ரஹவிஸ்ஸை ஸ்வீகரிக்கவாவது திவ்யதம்பதிகள் சேர்ந்து நிர்வஹிக்கவேண்டிய மோக்ஷப்ரதாநயஜ்ஞத்தில் ஸ்வீகரிக்கவாவது பகவானுக்கு இயல்பு இல்லாமற்போவதால் மோக்ஷம் என்கிற பரமபுருஷார்த்தமே உத்ஸந்நமாய்

விஹிதவ்ரதங்களும் ஸம்ஸாரத்திலேயே உழன்றொழிவதே ப்ராப்தமென்கிற ஸம்ப்ரதாயமே ஸர்வஸம்மதமாகிறதென்பது நிஸ்ஸம்சயம் ।

மேலும் 'உபாயோபேயபாவாத் ஏகம் சேஷிணம்' இத்யாதிகளிற்படி பரசேஷித்வமும் 'அனன்யசரணா ஜகத இதி தேவ்யாஸ்ஸஹ யாம் ஸ்ரேயஸம்' இத்யாதிகளிற்படி பரசேஷத்வமும் உபய நிஷ்டமென்று தேறியபிறகு பரரக்ஷகத்வமும் உபயநிஷ்டமாயிருப்பது அவஸ்யம்பாவியாகிறது. அந்யதா சேஷராஜ்யம் ப்ரஸங்கிக்கும். ஆகையால் இம்மூன்று ஆகாரங்களில் எதை ஒப்புக்கொண்டபோதிலும் மற்ற இரண்டும் அயத்நஸித்தமென்பது நிஸ்ஸம்சயம். இதைக்கொண்டே ஸ்ரீஸூக்தியில் 'உபேத்ய ஜநநீ ஸஹ தோரணீதோபாயிநம் ப்ரத்யுத்தவே ஹவிஷி யாகயோர்விசேஷிணயோர்மாஸ' என்று ஏகசேஷிணயோர்ம் நிரூபாயிஆரக்ஷகைக்யத்துக்கு ஹேதுவாகக்கூறப்பட்டது. தவிர முமுக்ஷுகள் போலும் ப்ராப்தார்த்தவான்கள் போலும் திவ்யதம்பதிகளின் ஸாரூப்யங்கள் வ்யக்திவ்யத்யஸ்தமாக பரஸ்பரவ்யாப்தமாயிருப்பதுபற்றி ஸகலாவஸ்தைகளிலும் நித்யாநபாயினியாயிருக்கும் பிராட்டிக்கு உபாயத்தில் அந்வயம் அவர்ஜநீயமென்பது ஸுஸ்தஸித்தம். இது விஷயத்தில் விபவத்தில் பகவானும் ஸகலவதிகத்திருமகனாக அவதரித்து ராவணவதானந்தரம் திருவயோத்தியில் ஜகத்பிராமாநவத்தத்தை பரிகரிக்கும்போது 'ராமே ராஜ்யே ஸீதே ஸஹ ஸீதம் ந்யவேஸயத்' என்றபடி ஸீதா தேவியுடன் பட்டாபிஷேகம் கண்டருளியதே நிதர்சனமாகும். ஆகையால் உபாயதசையில் பிராட்டிக்கு அந்வயமில்லையென்று கூறுவது பட்டாபிஷேகபீடத்திலிருந்து ஸீதாதேவியை யப்புறப்படுத்துவதோடொக்குமாதலால் இது ஸநவதவனாயஸாபமெனியிருந்தவளைத் தூக்கிப்போனதைவிடப் பல மடங்கதிகமான பாதகமேயாகும். ஆனால் தோஷஹோத்ருனுக்கிதுவும் ஸ்ரீத்ராவகமே யென்றிவர் பெருமை பேசினுல் நமக்கு வாய்திறக்க வழியில்லை.

இனி ப்ரதிவஸ்துபவர்ணநக்ரமம் என்கிற விஷயத்தைப் பார

மர்சிப்போம். இதிலும் இவர் மற்றவைகளிற்போலவே ஏற்கனவே க்ரந்தங்களெழுதி எல்லோரையும் வாயடக்கிவிட்டதாகப் பெருமை பேசுகிறார். அதைப்பற்றிப் பிறகு விசாரிப்போம். இப்போது ப்ரஸ்தாவத்திலுள்ள பத்ரிகைகளில் இவரெழுதியிருப்பது எவ்வாறிருக்கிறதென்பதை முதலில் பரீக்ஷிப்போம்.

ஆராய்ச்சியில் 27, 28, 29 பாராக்களில் இவ்விஷயம் ஸ்ரீபாஷ்யத்தின் ஸாராம்சத்தை தேசிகன் அறியவில்லையென்பதை நிரூபிப்பதற்காக உபந்யஸிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுபந்யாஸத்தின் முடிவில் தேசிகனுடைய ஸ்ரீபாஷ்யஜ்ஞாநத்தைப்பற்றி தண்டாமரையினுடன்பிறந்தே தண்டேனுகராமண்டூகம்' என்றாற்போலஸ்ரீபாஷ்யத்தை இரவும்பகலும் உருப்போட்டும் அதிலுள்ள ஸாரத்தையுட்கொள்ள உரிமையில்லையாயிற்றே மற்றையோர்க்கு' என்று ஆக்ஷேபம் செய்திருக்கிறார் இந்த ச்ருதிசிரஸிவிதீப்தெ ஸ்ரீஸூக்திரஹோவஹோமநீஷா தர். இப்படி ஆராய்ச்சியில் தேசிகனுடைய ஸ்ரீபாஷ்யஜ்ஞாநத்தை ஸாதிப்பதாக ப்ரதிஜ்ஞை செய்து விரிவான உபந்யாஸமெழுதினவர் அடுத்தாப்போல் விளக்கத்தில் 7வது பக்கத்திலும் ரஸத்தில் 16வது பக்கத்திலும், பரித்ராணத்தில் 17, 18, 19 பக்கங்களிலும் ஸ்ரீதேசிகன் ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் இவ்விஷயத்தைப்பற்றி ஸரியான ஸரணியில் அதாவது இவருடையவபிப்ராயத்துக்கிணங்கவே ஸ்பஷ்டமாயும் விஸ்தாரமாயும் ப்ரமாணபுரஸ்ஸரமாயும் உபபாதநம் செய்து நிஷ்கர்ஷித்திருப்பதாகவும் அதற்கு மாறாக ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்தில் யாதொரு ப்ரமாணமும் காண்பிக்காமல் கேவலம் தர்க்கபாண்டித்யத்தைக்கொண்டு வேறுவிதமாகச் சொல்லிவிட்டதாகவும் எழுதியிருக்கிறார். இதனால் தேசிகனுடைய ஜ்ஞாநத்தை ஸ்தாபிப்பதாகச் செய்த ப்ரதிஜ்ஞையைத் தானே நிரஸித்ததாயிற்று. ஆராய்ச்சியில் இவ்விஷயம் ப்ரஸக்தமானதற்குக் காரணம் ராமஸ்வாமி அய்யங்கார் தேசிகனுக்கு ஸ்ரீபாஷ்யத்தில் அதிகமான தேர்ச்சியென்றும் அவருக்கு ஸமகாலத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்த மற்றவாசார்யர்களுக்கு அவ்வளவு தேர்ச்சியில்லையென்றும் சொல்

லியிருப்பதாகவும் அது உண்மைக்குவிரோதமென்றும் தேசிகனுக்குத்தான் ஸ்ரீபாஷ்யத்தில் ஞானமில்லையென்றும் மற்றவாசார்யர்கள் அதில் சிறந்த ஞானம் வாய்ந்தவர்களென்றும் ஸ்தாபிக்கவேண்டுமென்பதே. இப்படி ஆராய்ச்சியில் செய்த ப்ரதிக்ஞைக்கு விரோதமாக இவ்விஷயத்தில் தேசிகன் ஸரியான வழியிலேயே ந்யாயஸிதாஞ்ஜநத்தில் எழுதியுள்ளாரென்றதால் தேசிகனுக்கு அஜ்ஞானத்தை ஆரோபிக்க முன்வந்த யத்நம் கௌரவமாய்விட்டது. இத்தால் ஆராய்ச்சியில் இந்த ப்ரஸ்தாவமே நிராஸ்பதமென்று தேறுகிறது. இனி இவர் என்ன சொல்லக்கூடுமென்றால் தேசிகன் அஜ்ஞானத்தாலோ விப்ரலம்பலிப்ஸையாலோ தான் நிர்ணயித்ததற்கு விருத்தமாகவே ரஹஸ்யத்ரயஸாரத்தில் கூறியிருக்கிறார் என்று. இதையும் தகுந்தவழித்தைக்கொண்டு தேசிகன் சொல்லியிருப்பதாகச் சொன்னதிலேயே ஸூசிப்பித்திருக்கிறார். தான் சொல்லும் விஷயங்கள் பரஸ்பரவிருத்தமாயிருப்பது தெரிந்தே பிறகு தப்பித்துக்கொள்வதற்காகச் சில விகல்பங்களை கல்பித்து வைப்பது இவருடைய வசனநடையில் பலவிடங்களில் புலப்படுகிறது. அது எப்படியிருந்தபோதிலும் ஸ்ரீதேசிகன் அஜ்ஞானவிப்ரலம்பவர்ஜிதரென்பதை இவர் தவிர வேறு எவரும் ஆக்ஷேபிக்க முன் வரார். மேலும் ஸ்வாமி தேசிகன் தானே ந்யாயஸிதாஞ்ஜநத்தில் விரிவாக ஸ்தாபித்த விஷயத்துக்கு மாறாக ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸாதிப்பதற்கு என்ன காரணமென்றும் இவர் சொல்லவேண்டும். இவர் சொல்லுகிறபடி இவ்விஷயம் ப்ரஹ்மஸூத்ரத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும் ஸாக்ஷாத்விஷிதமாயிருப்பதுடன் தேசிகனும் ந்யாயஸிதாஞ்ஜநத்தில் இதை விவரமாக நிரூபித்திருந்தால் அவர் பக்ஷியில் இது நிஸ்ஸம்ஶயமாக நிஷ்க்ருஷ்டமான விஷயமென்பதற்கு ஆக்ஷேபமில்லை. இப்படியிருக்க இந்நிஷ்கர்ஷத்துக்கு எதிர்நடையாக ரஹஸ்யத்ரயஸாரத்தில் அவரே வேறுவிதமாய் ஸாதித்தாரென்பது எப்படிப் பொருந்துமோ தெரியவில்லை. ஆகையால் இவர் ந்யாயஸிதாஞ்ஜநவசநங்களையும் ஸ்ரீபாஷ்யத்தையும் ஸரியாக அறியவில்லையென்றே நிஶ்சயிக்கவேண்டி வருகிறது.

இதையே இனி நிரூபிப்போம். இவர் எழுதியுள்ளதில் மற்றொரு முரண்பாடும் காணப்படுகிறது. விளக்கம் 7 வது பக்கத்தில் எம்பெருமானுக்கு வஸ்துதோறும் ஸர்வஸ்வரூபாநுப்ரவேசரூபமான வ்யாப்தியானது அந்தர்யாமி ப்ராம்மணாதிகளிலே அசைக்க முடியாதபடி தேறியிருப்பது என்று அறுதியிட்டு இவரே பரித்ராணம் 21, 22 பக்கங்களில் ஸர்வவஸ்துஸ்வரூபப்ரவேசம் ஶ்ருதிவசநங்களில் இருப்பதாக நான் ப்ரமித்ததாகவும் ச்ருதியில் இந்த ப்ரஸ்தாவமில்லையென்றும் ஸர்வத்ர வ்யாபித்து நிற்கிறான் என்பதுமட்டில்தான் உபநிஷத்வாக்யங்களில் இருப்பதாகவும் ஸர்வவஸ்துஸ்வரூபப்ரவேச: என்பது ஆசார்யர்களின் க்ரந்தங்களில்தான் இருப்பதாகவும் இவ்விரண்டின் ஸமீசீநதையை நிர்வஹிக்க ஆலோசிப்பதே நிஷ்ப்ரயோஜநமென்றும் உத்கோஷிக்கிறார். இதன் ஸாமஞ்ஜஸ்யம் நமக்குப் புலப்படவில்லை. முதலில் ஶ்ருதிஸித்தமென்று சொல்லிப் பிறகு இவ்விஷயம் ஶ்ருதிவாக்யங்களிலில்லையென்கிற விரோதம் ஒருபுறமிருக்க ஆசார்யர்களின் நிர்வாஹம் ஶ்ருதிவாக்யத்துக்குப் பொருந்தியதா இல்லையாவென்கிற ஆலோசனையே ப்ரஸக்தியில்லாததென்று இவர் கூறுவதும் இவரே பரித்ராணம் 10 வது பக்கத்தில் அவர்களுடைய உக்திகளில் அஸம்பந்தமாகத் தோன்றுபவற்றை எடுத்துரைக்கவும் ப்ராப்தம், என்றதற்கு விரோதிக்கிறது. மேலும் ஶ்ருதிவசநம் இவ்விஷயத்திலில்லையென்றபிறகு 'ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத்' என்கிற ஸூத்ரமே இங்கு நிரவகாசமென்று ஸித்திப்பதால் இந்த ஸூத்ரத்தையும் இதின் பாஷ்யத்தையும் கொண்டு இவ்விஷயத்தில் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் தேசிகன் ஸாதித்ததை ஆக்ஷேபிப்பது எவ்வாறு பொருந்தும் என்பது தெரியவில்லை.

இனி ந்யாயஸித்தாஞ்ஜநத்துக்கும் ரஹஸ்யத்ரயஸாரத்துக்கும் எவ்விதவிரோதமுமில்லையென்பதை நிரூபிக்கிறோம். இவர் தனக்கு ஸாதகமான ப்ரமாணமாகக்கொள்ளும் ந்யாயஸித்தாஞ்ஜநவாக்யாநந்தரம் பின்வருமாறு—விஸ்ருஷ்டேஷு ச ப்ரவிஷ்டேஷு ஸர்வ ஸம்ஸ்ரவ: । ப்ரஜாபதிவசஸ்ய திஷ்டேத்யா

ந்த³ஸ்ய பூர்ணத்வயோ: ஜீவவ்யாவ்ருத்த இதி விஶேஷ: । ஸ ஏவ ஸர்வத்ராபி ப்ரதிபாத்ய ஏவ । அந்யத்ர விப்ரதிபந்நஸ்ய அந்யத்ர ப்ரதிபாத்யத்வம் ந ஸ்யாதிதி சேத்; கிமிதம் ப்ரதிபாத்யத்வம் நிஷித்யதே ? கிமத்ரைவ விப்ரதிபந்நத்வம் ? கிமத்ர ப்ரதிபாத்யமாநவஸ்து விஷயத்வம் ? கிம் வாऽத்ர ப்ரதிபாத்யப்ரயோஜநஸாமர்த்ய்யம் ? கிம் வாऽத்ர ஸத்³கு³ணவிஶிஷ்டத்வம் ? நாத்³ய: ; தஸ்யாஸ்மிந் ப்ரஸங்கா³த், ந த்³விதீய: ... ... ந ச த்ருதீய: ; ஸர்வஶ்ரேஷ்ட ஸர்வாத்ம நிஷேத்யஸ்ய ஸுஷ்டத்வாத் । ஸர்வாந்தராத்மத்வ ஸத்தாவிருத்தவிரோதாபாவாத்...; தாவி பதார்த்தா: ப்ரதி ப்ரஸங்காதீநாம் ஸாம்ப்ரதாயிகாநாம் த்ரிமூர்த்யைஶ்வர்யாதிகஸ்ய அபவிவரணாதிஷ்டே தேஷாம் ஸ்வரூபவத்³ஸ்து । ஸ தத்ர த்ரிமூர்த்திஷு ப்ரதாநத்வம் ஸ்வரூபதோ வா இதி பரிபோதா ஶ்ருதேஸ்ம்ருத்யாதிபி: பரிஹாரஸ் ஸூத்ரகார ஏவ ப்ரதிபாதயாமாஸ । அத²தோ ப்³ரஹ்மஜிஜ்ஞாஸா ஸர்வத்ர ப்ரதிபாத்ய ஏவ பரமாத்மா ।

இங்கு (ஸாம்ப்ரதாயிகவிஶேஷத்தில்) பகவானுடைய அஸாதாரண லக்ஷணங்களை விசாரிக்கையில் த்ரிமூர்த்திஸாம்யைக்யோத்தீர்ண வ்யக்த்யுபாதிவக்ஷங்கள் தவறென்றும் விஷ்ணுவே பரமாத்மா வென்றும் கூறிப் பிறகு மூன்று மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவே பரமாத்மாவாகில் மற்றவிரண்டு மூர்த்திகளாகிய ப்ரஹ்மருத்ரர்களுக்கும் விஷ்ணுவுக்கும் எவ்விதமான ஸம்பந்தம், ஜந்மாத்³யஸ்ய யத: என்ற ப்ரஹ்மலக்ஷணத்தில் யத: என்றதில் பஞ்சமீ வ்ருத்யத்தால் யேப்⁴ய: என்று பஹுவசநம் விவக்ஷிக்கப்பட்டதாகக்கொண்டால் ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரரூபமான தனித்தனி கார்யத்தை வஹிக்குமிம்மூவர்களும் சேர்ந்து ப்ரஹ்மமென்று தோற்றுவதால் இம்மூவரில் விஷ்ணுமாத்ரம் எப்படி பரமாத்மா வாகுவார், என்பது முதலான சங்கைகளைத் தீர்க்க இந்த விசாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் முதலெடுப்பில் த்ரயாணாம் த்ரிமூர்த்தீநாம் பரிபூர்ண ஸர்வேஶ்வர: என்று கூறியதால் மும்மூர்த்திகளும் சேர்ந்தே பகவத்ஸ்வரூபம் என்கிற சங்கை தீர்க்கப்பட்டது. அதாவது—இத்தால் தனித்தனியே ஒவ்வொரு

மூர்த்தியிலும் பகவான் பூர்ணமாகவே இருக்கிறார் என்று தேறுவதால் பகவான் இம்மூர்த்திகள் மூன்றிலும் சேர்ந்தே இருக்கிறார் என்பது நிராகரிக்கப்பட்டது. இதுதான் ஸ்ரீஸுதர்ஶநாசார்ய ஸ்வாமி 'ஸர்வத்ர ஸாகல்யேந இதி ப்ரத்யேகபர்யாப்த இத்யர்த:। ந த்வித்வாதிவத் வ்யாஸஜ்ய வ்ருத்திர் பாவ:' என்றும் ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியும் இதையொட்டியே 'ஸர்வத்ர இதி ப்ரத்யேகம் பர்யாப்தே, ந த்வித்வாதிவத் வ்யாஸஜ்யேத்யர்த:' என்றும் வ்யாக்யாநம் செய்தருளியிருப்பதின் தாத்பர்யம். ஒரு தர்மம் பலவற்றில் ஸம்பந்தமுடையதாயிருந்தால் அந்த ஸம்பந்தத்தை வ்யாஸஜ்யவ்ருத்தி யென்றும் அவ்யாஸஜ்யவ்ருத்தி அல்லது ப்ரத்யேகவ்ருத்தி யல்லது ஸாகல்யவ்ருத்தி யென்றும் இருவகையாகப் பிரித்து வ்யவஹரிப்பது நையாயிகஸரணீ. ஒன்றுக்குமேற்பட்ட த்வித்வாதிஸங்க்யைகளைக்கொண்டு வஸ்துக்களை வ்யவஹரிக்கவேண்டுமானால் அந்தந்த ஸங்க்யைகளுக்கனுகுணமாக வஸ்துக்களைச்சேர்த்து வ்யவஹரிக்கவேண்டிய அவசியம் ஏற்படுவதால் த்வித்வாதிகள் வ்யாஸஜ்யவ்ருத்தியென்று நையாயிகர் கூறுவர். அப்படியன்றி ஒரே பதார்த்தம் பலவஸ்துக்களில் ஸம்பந்தப்பட்டிருந்தபோதிலும் அதை வ்யவஹரிப்பதற்காக இது ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களெல்லாவற்றையும் சேர்த்து விவக்ஷிக்கவேண்டிய அவசியமில்லாமல் ஒவ்வொரு வஸ்துவைக்கொண்டே அதைப் பூர்ணமாக வ்யவஹரிக்கக்கூடுமானால் அதை அவ்யாஸஜ்யவ்ருத்தி அல்லது ப்ரத்யேகவ்ருத்தி அல்லது ஸாகல்யவ்ருத்தி யென்று கூறுவர்கள். ஜாதி யென்பது இவ்வகுப்பில் சேர்ந்தது. கோத்வம் என்கிற ஜாதியானது எல்லா கோக்களிலும் அதாவது இப்போதுள்ளவை முன்னிருந்தவை இனி உண்டாகக்கூடியவை ஆகிய ஸமஸ்த கோவ்யக்திகளிலும் ஸம்பந்தப்பட்டிருந்தபோதிலும் தத்க்ருத வ்யவஹாரத்தை ஒரு கோவ்யக்தியைக் குறிப்பிட்டே இது கோ வென்று வ்யக்த்யந்தரநிரபேக்ஷமாகச் செய்யக்கூடுமாகையால் இந்த ஜாதி என்ற பதார்த்தம் அவ்யாஸஜ்யவ்ருத்தி அல்லது ப்ரத்யேகவ்ருத்தி அல்லது ஸாகல்யவ்ருத்தி யெனப்படும். இதனால்

ஜாதி என்பது தான் ஸம்பந்தித்த ஒவ்வொரு வ்ருத்தியிலும் வ்யக்த்யந்தரநிரபேக்ஷமாக ஸர்வவ்யவஹாரயோக்யமாயிருக்கிறதென்பதே தவிர வ்யக்திதோறும் ஸ்வரூபஸமாப்தியை அடைந்திருக்கிறதென்பதல்ல. இங்கு ஸர்வ, ஸமஸ்த, அகில, முதலிய பதங்கள் அந்யாபேக்ஷையின்றியே வ்யவஹாரயோக்யதைக்கு வேண்டிய பூர்த்தியைக்குறிக்கிறதே தவிர ஸ்வரூபஸமாப்தியைக் குறிக்கமாட்டாது. ந்யாயசாஸ்த்ரமறிந்தவர் அப்படி ஒருக்காலும் கொள்ளமாட்டார்கள். மேலும் அப்படிக்கொள்வது ப்ரத்யக்ஷவிருத்தமுமாகும். ஏனென்றால் முன்சொன்னபடி கோத்வம் என்பது முக்காலத்திலுமுள்ள ஸமஸ்த கோக்களிலும் ஸம்பந்தமுடையதாகையால் அதின் ஸ்வரூபம் அவைகள் எல்லாவற்றிலும் இருக்க அது ஒன்றிலேயே ஸமாப்தம் அதாவது முடிந்துவிட்டது என்று சொல்வது சிறிதும் ஒவ்வாது. ஆகையால் இங்கு ப்ரயோகிக்கப்பட்ட ஸமஸ்த அகில முதலிய பூர்த்திவாசகமான பதங்கள் முன்கூறியபடி ப்ரத்யேகம் வ்யவஹாரார்ஹதாபாதநஸாமர்த்யத்தையே விவக்ஷிக்கின்றனவென்பது நிஸ்ஸம்சயம். இவ்விதமான [illegible] சப்தப்ரயோகத்தின் தாத்பர்யத்தை அறியாமையே இப்போது ப்ரஸக்தமாயிருக்கும் ப்ரதிவஸ்து ஸர்வத்வசங்கைக்கு மூலமென்று நிர்ணயிப்பது மிகவும் உசிதம். இவ்வித சங்கைகளை நிவர்த்திப்பதற்காகவே ந்யாயஸித்தாஞ்ஜநவ்யாக்யாநத்தில் அகிலஸர்வ ஸகல என்றதற்கு ஸமஸ்தஸந்தே என்றதோடு நிறுத்திக்கொள்ளாமல் ந து வ்யாஸஜ்யவ்ருத்தய: என்று வ்யாவ்ருத்தியும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸமஸ்த சப்தம் அவ்யாஸஜ்ய என்பதற்கு ஸமர்த்யம் என்பது ஸ்பஷ்டம். இவ்வர்த்தம் வேதாந்ததீபத்திலுள்ள க்ருத்ஸ்நப்ரஸக்திர்நிரவயவத்வசப்தகோபோ வா' என்ற ஸூத்ரவ்யாக்யாநவழியால் அங்கீகரிக்கப்படுகிறது. அது பின்வருமாறு: ப்ரஹ்மணோ ஜகத்காரணத்வம் ஸம்பவதி நேதி ஸம்சய:, ந ஸம்பவதீதி பூர்வ: பக்ஷ: நிரவயவஸ்ய ப்ரஹ்மணோ ஜகதுபாதாநத்வே க்ருத்ஸ்நஸ்ய ப்ரஹ்மணோ ஜகதாகாரேணாபரிணாமப்ரஸங்காத், தத்பரிஜிஹீர்ஷயா

ஸாவயவஸ்வாரூப்யாபத்தே: காரணதஶாயாம் நிரவயவத்வாபி ஶப்தோ பாத்யேத । யத்யபி ஸூக்ஷ்மசிதசித்வஸ்துஶரீரம் ப்ரஹ்ம காரணம் ஸ்தூலசிதசித்வஸ்துஶரீரம் கார்யமிதி த்வயோச்யதே । ததாபி ஶரீரிண: ஸர்வஸ்யாபி கார்யத்வாப்யுபகமாத் க்ருத்ஸ்னப்ரஸக்தி: நிரவயவஶப்தபாதோ வா । ராஜ்ஞஸ்து ஸகலேதராவி ஸஜாதீயம் ப்ரஹ்ம நிரவயவமபி கார்யம் பவதி அந்யச்ச பவதீதி பரிச்சிதவஸ்துவாத்யம் ந தத்ர ப்ரஸஜ்யதே । யதா ஜாதிவாதி நோ ஜாதிரேகைவ ஸ்வாஶ்ரயபூதாஶேஷவ்யக்திஷு ப்ரத்யேகம் பரிஸமாப்யைவ வர்த்ததே ந தத்ர ஊதராவஸ்த்வாத்யமிதி । அத: ப்ரஹ்மணோ ஜகத்காரணத்வம் ஸம்பவத்யேவ" இங்கு க்ருத்ஸ்னப்ரஸக்த்யாதியான ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்தின் தாத்பர்யமும் இதற்கு ஸமாதானமாயுள்ள ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத் என்கிற அடுத்த ஸூத்ரத்தின் தாத்பர்யமும் விஶதீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த பூர்வபக்ஷம் நையாயிகஸித்தாந்தஸாரமாய் ஏற்பட்டது. இது பரிப்பாணம் 17வது பக்கத்தில் உதாஹரிக்கப்பட்ட ஈடுப்ரவேசத்துக்கு மணவாளமாமுனிகள் செய்திருக்கும் வ்யாக்யானத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டவிஷயம். ஜகத்துக்கு ப்ரஹ்மம் நிமித்தகாரணமேயன்றி உபாதானகாரணமில்லையென்கிற ஸித்தாந்தத்தைக்கைக்கொண்ட நையாயிகர்கள் உபாதானகாரணமும் நிமித்தகாரணமும் ப்ரஹ்மமே யென்கிற வேதாந்திகளின் நிர்ணயத்துக்கு அஸித்தி கூறுவதற்காகக் கிளப்பிய ஹேத்வாபாஸமிது. இவ்வாதத்தை க்ருத்ஸ்னப்ரஸக்த்யாதியான முதல்ஸூத்ரத்தில் ஸூத்ரகாரர் ப்ரஸ்தாவித்துப் பின்பு ஶ்ருதேஸ்த்வாதியான அடுத்த ஸூத்ரத்தால் பரிஹரிக்கிறார். ம்ருத்பிண்ட ஸுவர்ண, ம்ருத்திகை, படம் என்ற த்ருஷ்டாந்தங்களைக்கொண்டு கார்யகாரணபாவாதிகளை உபபாதநம் செய்வது நையாயிகஸரணியாகையால் அந்த த்ருஷ்டாந்தத்தைக்கொண்டே இந்த வாதமும் கிளப்பப்பட்டிருக்கிறது. எப்படி ஒரு ம்ருத்பிண்டத்திலிருந்து பல பாண்டங்கள் செய்யப்பட்டால் அதின் சிற்சில அம்சங்கள்தான் ஒவ்வொன்றிலும் சேரு

மேதவிர முழுதும் சேரமாட்டாதோ அப்படியே ப்ரஹ்மம் தானே பலவுருக்களாக ஸ்ருஷ்டிகாலத்தில் பரிணமித்தால் அதின் சிற்சில அம்சங்கள்தான் ஒவ்வொரு கார்யவஸ்துவிலும் இருக்கக்கூடு மென்று ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியமாகையால் ப்ரஹ்மம் ஒன்றே, அது நிரம்சம், என்கிற ச்ருதிவாக்யங்கள் பாதிக்கப் படுகின்றன. ஆகையால் ப்ரஹ்மம் ஜகத்துக்கு உபாதாநகாரணம் என்பது ஸித்திக்காது என்பது பூர்வபக்ஷம். இதற்கு ஸமாதான மாவது—இது தர்மிக்ராஹகப்ரமாணந்யாயத்தை யறியாத பேச்சு. அந்த ந்யாயமாவது—எந்த ப்ரமாணத்தைக்கொண்டு தர்மியாகிற வஸ்து அறியப்படுகிறதோ அந்த ப்ரமாணம் அந்த வஸ்துவை எவ்வித தர்மங்களுடன் கூடியதாகக் காண்பிக்கிறதோ அவ்வித தர்மவிசிஷ்டமாகவே அதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இல் லாவிட்டால் அந்த தர்மியே ஸித்திக்காது. நமக்கு ச்ருதிவாக்ய ங்களைக்கொண்டே தர்மியாகிற ப்ரஹ்மம் ஸித்திப்பதால் அவ்வாக்ய ங்களில் அதை நிரவயவமென்று விலக்ஷணதர்மவிசிஷ்டமாகக் கூறியிருப்பதால் அதற்கு மாறாக த்ருஷ்டாந்தஸாமாந்யவஸ்துக் களைக்கொண்டு விரோதம்செய்வது யுக்தமல்ல. உங்கள் ந்யாயவி ஶாஸ்த்ரத்திலும் இதற்கு உதாஹரணம் எடுத்துக்காட்டுகிறோம். நீங்கள் ஸாமாந்யம் அல்லது ஜாதி என்று சொல்லும் பதார்த்தம் நிரம்சமாயிருந்தபோதிலும் அது கண்டமுண்டாதிகளான பற்பல விலக்ஷண வ்யக்திகளில் பரிஸமாப்ய அதாவது அவ்யாஸஜ்ய வர்த்திக்கிறதென்று ஒப்புக்கொண்டிருப்பதால் உங்கள் ஸங்கேதத் தால் ஏற்பட்ட கல்பிதமான ஸாமாந்யத்துக்கே இவ்வித யோக்யதை இருக்குமானால் நாங்கள் ச்ருதிஸித்தமான ப்ரஹ்மத்தின் விஷயத்தில் அது நிரம்சம், ஸகல வஸ்துக்களிலும் பர்யாப்ய வர்த்திக்கிறது என்று 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' இத்யாதி ப்ரமாண பலாத்காரமாய்க் கூறுவதை நீங்கள் எப்படி ஆக்ஷேபிக்கவமையும் என்பதே. இதுதான் ஈடு ப்ரவேசத்திலும் 'ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமென்றால் அவிகலவைசிஷ்ட்யத்துக்கு இது கூடுமென்றிருப்பர்கள். பரம சேதனனுயிருப்பானொருவன் . பரி

ஸமாப்ய வர்த்திக்குமென்றால் இது கூடாதென்று ஸம்சயியா நிற்ப ர்கள்' என்று நிரூபிக்கப்பட்டது. இதைப் பார்த்தாலும் ப்ரஹ்ம் ஶ்ருதிவஸ்துஸூத்ரவ்யவஸ்தி யுடையதென்று சொல்வதற்கு சிறிதும் இடமில்லை. எப்படி ஜாதிக்கும் வ்யக்திக்குமுள்ள ஸமவாய ஸம்பந்தத்தையிட்டு அயம் கௌ:, அயம் கௌ:, என்று தனித்தனி வ்யக்தியை ஸாமாந்ய(ஜாதிவாசக) ஶப்தத்தினால் வ்யவஹரிக்கப்படு கிறதோ அப்படியே ப்ரஹ்மமும் ஶரீராத்மபாவரூபமான ஸம்ப ந்தத்தையிட்டு ஒவ்வொரு வஸ்துவிலும் ஸர்வம் ப்ரஹ்ம ஸர்வம் ப்ரஹ்ம, என்று தனித்தனியே வ்யவஹாரார்ஹமாயிருப்பதால் அதைக்கொண்டு ப்ரஹ்மம் ஶ்ருதிவஸ்து ஸமஸ்தவ்ய வதநேதே என்று கூறப்படுகிறதேதவிர ஸ்வரூபைக்யவிஷயமாக ப்ரஹ்மத் தின் விஶேஷத்தையே ப்ரதிபாதனம் செய்வதாயிருக்கிற ஶ்ருதி வஸ்துப்ரஹ்மஸூத்ரவ்யவஸ்தியைக் கொண்டல்ல.

இப்படி வஸ்துஸ்திதி யிருக்க இதற்கு மாறாக பரித்ராணம் 18வது பக்கத்தில் 'ஸர்வதேவ ஸர்வ' என்கிற ஸ்வாமி ஸூக்திக்கு ஸமஸ்தவ்ய வதநேதே இத்யதி: என்று ஸ்பஷ்டமான விவ ரணமும் எழுதப்பட்டுள்ளது' என்று வரையப்பட்டிருக்கிறது. இங்கு வ்யாக்யானவாக்ய முழுவதையும் எடுக்காமல் ஸர்வதேவத் தைமட்டில் எடுத்துக்கூறி அதற்கடுத்தாப்போல் வரும் நவிஶேஷ வஸ்த்வைக்ய ஜ்ஞானம் என்ற உதாஹரணத்தை உதாஹரிக்காமல் விட்டிருப்பது பரித்ராணத்தினால் ஸத்யம் எவ்வளவு ஸம்ரக்ஷித மாகிறதென்பதை நன்கு ப்ரகாசிப்பிக்கிறது. அது ஸர்வதேவ க்வம் நாம வ்யாக்யா ஶ்ருதிவிஹித ஶ்ருதிவஸ்து ஸ்வவ்யாக்யாவஸ்தி ரேவ நது ஸூத்ரவ்யவஸ்திதி ஸூத்ராவகதிம் வாரயிதும் உதாஹரணம்விஹாய ஸர்வதேவப்ரஸ்துதாவாதநகித்யர்த்தே ஸூக்ஷா நாநாவிதா ஸவெக! இனி ந்யாயஸித்தாஞ்ஜனத்திலுள்ள மேல்வாக் யங்களின் அர்த்தத்தை விசாரிப்போம். ஏற்கனவே நாம் கூறியபடி ப்ரஹ்மலக்ஷணமாக எடுக்கப்பட்ட ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை முறையே தம்தமதிகாரமாகவுடைய ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்கிற மும்மூர்த்திகளும் ஸமஷ்டிவ்யஷ்டி ஸம்ஸாரஸம்பந்த

ஷேஶ்யராகிருர்களாவென்கிற சங்கையைப் பரிஹரிக்க இம்மூவரி லும் ஈச்வரன் பரிபூர்ணனேயென்று கூறப்பட்டது. அப்படியாகில் மூவரும் ஸமரென்று கொள்ள ப்ரஸங்கிக்குமே யென்ற சங்கை யைப் பரிஹரிக்கக் கூறுகிறர், "ப்ரஜாபதிஶர்வ ப்ரப்ருதயோ ஹ்யேதே ஸ்ரஷ்டா ப்ரவேஶா ஜீவவ்யவஹித இதி விஶேஷ:" என்று. பகவான் ப்ரம்மா, ருத்ரன், இவ்விருவர்களேயும் தத்ஜீவத்வாரா அனுப்ரவேசித்து அவர்களைக்கொண்டு ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை நடத்துகிறனென்றும் விஷ்ணுரேவைகோ ஒருவரே ஸாக்ஷாத்பகவதவதார மென்றும் ப்ரமாணங்களிருப்பதால் விஷ்ணுவே பரமாத்மா, மற்றவர்களல்லவென்று இதனல் விவேசிக்கப்படுகிறது. இங்கு ஸஹஸ்ரார்களை ஜீவத்வாரா அநுப்ரவேஶித்தவகையில் அவர்களிடத்தில் ஈச்வரன் பரிபூர்ணனுயிருக்கிறர் என்று கூறப்பட்டதைக் கொண்டு அவர்களுக்கு இதனல் ஸ்வரூபத்திலேயே இதர வைலக்ஷண்யமிருப்பதாக சங்கிக்க இடமுண்டாகுமோ வென்றெண்ணி இவ்விதமாக அதயப்ரவேஶேன ஜீவாநுப்ரவேசமும் தஸ்ய ப்ராப்தவர்ணுக்ஷமும் ஸம்ஸ்காரவ்யதிரிக்தஸ்வஸ்தஸாதாரணம் என்பதற்காக ஸவமேவ ஸவப்ரதாவி வர்ணு ஸவ என்று கூறப்பட்டது. இப்படிச் சொன்னவுடன் க்ருத்ஸ்நப்ரஸக்திர்நிரவயவத்வ ஶப்தகோபோ வா என்ற ஸூத்ரத்தில் விவக்ஷிக்கப்பட்ட நையாயிகபூர்வபக்ஷியால் அங்கு போலவே இங்கும் செய்யப்படுமாக்ஷேபம் க்ருத்ஸ்ந விப்ரநஷ்டஸ்ய த்யாஜ்யாக்யத்தால் குறிக்கப்படுகிறது. அதாவது ஒரே பதார்த்தம் ஒரிடத்திலிருக்கிறதென்று கூறி அதுவே தத்பின்னமான மற்றோரிடத்திலும் பூர்ணமாயிருக்கிறது என்று சொல்வது பொருந்தாது என்பதே. இதன் தாத்பர்யம் என்னவென்றல் ஒரே வஸ்துவுக்குக் குறிப்பிட்ட வோரிடத்தில் ஸர்வதேவவரிஸமாப்தி ஏற்பட்டுவிட்டால் அது மற்றோரிடத்திலுமிருக்கிறது என்பது பரஸ்பரவிருத்தமாகையால் யாரும் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல என்பது. இந்த ஆக்ஷேபத்தின் ரீதியைக்கொண்டே வர்ணபக்ஷி தாம் ப்ரயோகித்த வர்ணசப்தத்தின் பொருளை ஸரியாக உணரவில்லை என்று தெரிந்து கிஞ்சிம் வர்ணுக்ஷம் நிஷித்யதே

என்று ப்ரதிஜ்ஞாம் செய்யப்பட்டது. அதாவது நீர் ஆக்ஷேபம் செய்யும் ஸாமாநாதிகரண்யம் எவ்வகைப்பட்டது? நம்மால் என்ன பொருளை மனதில் வைத்துக்கொண்டு ஸாமாநாதிகரண்யஸ்வரூபம் இங்கு ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறதென்பதை நீர் நன்கறிந்தீரா? நீர் கேட்கிறமாதிரியிலிருந்தே நீர் நம்மபிப்ராயத்தை யறியவில்லை யென்று தெரிவதால் அதை நீர் செவ்வனே யறியும்படி விளக்குகிறோம் என்று திருவுள்ளம்பற்றி ஸாமாநாதிகரண்யஸ்வரூபார்த்தத்தை நான்குவிதமாக விகல்பிக்கிறார். அதில் முதல் விகல்பம் தான் பூர்வபக்ஷி நினைத்தது. அது அத்யந்தாஸம்பவமாகையால் அதை வெகு ஸுலபமாக விலக்கிவிட்டுப் பிறகு மற்ற மூன்று விகல்பங்களையும் தாமே ப்ரஸ்தாவம் செய்து ஸமாதானம் கூறுகிறார். ஷ முதல் விகல்பம் பின்வருமாறு: கிமேகத்ரைவ வ்ருத்திமத்த்வம். அதாவது—இங்கேயே இருப்பதா? அதாவது ஓரிடத்தில் ஸமாவேசவ்ருத்தியை நாம் ஸாமாநாதிகரண்யத்தால் வ்யவஹரித்தோம் என்று எண்ணுகிறீராவென்று தாத்பர்யம். ஏகத்ரைவ என்கிற அவதாரணத்தால் மற்றோரிடத்தில் ஸம்பந்தப்படாமல் எப்படியிருக்கலாமோ அவ்வகையில் ஓரிடத்திலிருப்பது; இதுதான் ஸமாவேசவ்ருத்தி என்பது ஸ்பஷ்டம். இவ்வர்த்தமே திருப்புட்குழி ஸ்வாமி வ்யாக்யானத்தில் பின்வருமாறு விளக்கப்படுகிறது—ஸாம்ஸ்ரோ யத்ருத்தே வதுூஉாநஸ்யாக தஹிூ அத்ர ஸமாநா நஸ்யாதிதி தகூூவமூம்வ்ய ஶூதெத- அந்யத்ர வ்ருத்திமத்வஸ்ய கிமிதிமித்யாதி ஸூவாத்ருத்திமாநாஹாவ ப்ரதியோகிவ ஸாமாநாதிகரண்யம் கிம் ஸமாவேசித்யயூ:। ஏகத்ரைவ வ்ருத்திமத்த்வமிதி வா தத்ஹா வ்ருத்திகவிஶிஷ்டத்வ் ப்ரவ்ருத்திகவஶித்யயூ: என்று. இந்த முதல் விகல்பம் நாத்ய: தஸ்யாஸ்ஸாஹிரநஹ்யுவஸம்ஸ என்று நிராகரிக்கப்படுகிறது. அதாவது ஓரிடத்திலேயேயிருப்பது. அதாவது ஓரிடத்தில் ஸமாவேசவ்ருத்தி யென்கிற பக்ஷத்தை நாம் ஒப்புக்கொள்ளவில்லை. இவ்விடத்தில் திருப்புட்குழி ஸ்வாமியின் வ்யாக்யானம் நோக்கத்தக்கது. ஸஹி: ஸாம்ஸ்ரவஸ்ய விஶேஷணவிஶேஷ்யபாவோ: அநந்யாவஸரோதி! தயாசேஷாவத்திரிதி ஹாவ:।

ஈச்வரன் விபு ஸாக்ஷி யென்கிற மதத்தை அவலம்பித்த நாம் அவனேரிடத்திலேயே இருக்கிறன் அதாவது ஸாக்ஷிவஸம்பந்த வித்தியவச்சேதகம் அவனுக்கு ஓரிடத்தில் ஸம்பவிக்கிறதென் கிறபக்ஷத்தை ஒப்புக்கொள்ளமாட்டோமாகையால் வச்சேதக சப்தத்துக்கு அவ்வர்த்தத்தை வைத்து நீர் செய்யும் ஆக்ஷேபம் எங்களுக்கு ஸம்மதமேயென்று தாத்பர்யம். இந்த ஸந்தர்ப்பத்தில் பரித்ராணம் 18 வது பக்கத்தில் அந்யதேந்த்ரியாதிபான தோஷத்தைப்பற்றி 'இந்த தோஷமும் எங்ஙனே கிளம்பிற்றென்று விவேகிகள் விமர்சிக்கவேண்டும். ஸமவேதாவிச்சேதகம் என்ற முன் வாக்யத்தில் ஸ்வரூபஸமாப்திதான் அபிப்ரேதம் என்பது இதனல் ஸுஸ்பஷ்டமாகிறதன்றே. இல்லையானல் அந்யதேந்த்ரியாதி தோஷமே உசிதமாக ப்ரஸக்தியில்லையே' என்று கூறப்பட்டிருக்கிறது எற்கனவே நாம் விவரித்ததைக்கொண்டே இதன் அஸாமஞ்ஜஸ்யம் ஸ்பஷ்டமாகக்கூடும். ததாபி தச்சாஸ்த்ரத்தை ஸங்க்ஷேபமாக இங்கும் விஶதீகரிக்கிறேம். வச்சேதகசப்தத்தால் ஸாக்ஷிவஸம்பந்த விவக்ஷிக்கப்பட்டதென்பது பூர்வபக்ஷியின் ஹ்ருதயம். அதனல்தான் அந்யதேந்த்ரியாதிதோஷமும் அவனல் கிளப்பப்பட்டது. அதை நிரஸநம் செய்வதற்காகவே ஸ்வாமி கிஞ்சிதிந்த்ரியாதிவாக்யஷம் செய்கிறர். இங்குள்ள ஸம்பந்த வச்சேதக என்பதற்கு வ்யாப்யவ்ருத்தே என்று ரஜூநாதஸ்வாமி வ்யாக்யானம் பண்ணியது ஸாக்ஷிவஸம்பந்தவித்தியை ஸ்பஷ்டமாகக் குறிக்கிறதென்று பரித்ராணக்காரர் எழுதியிருப்பது தவறென்று முன்பே வ்யக்தமாக்கப்பட்டது. இங்கு ஏற்பட்டுள்ள தோஷம் [illegible] [illegible] என்று நையாயிகர் கிளப்பின தோஷமே ப்ரகாராந்தரமாய் வெளியிடப்பட்டிருப்பது என்பதும் ஏற்கனவே கூறப்பட்டது. த்ரவ்யம் ஏகமென்றும் நிரம்சமென்றும் ஒப்புக்கொண்டு அது ஓர் ப்ரதேசத்தில் பூர்ணமாக இருந்தால் அதாவது ஸாக்ஷிவஸம்பந்தவித்தியை அடைந்திருந்தால் அது எப்படி தத்பின்னமான மற்றொரு ப்ரதேசத்திலும் ஸாக்ஷித்வேன ஸம்பந்தப்படும் என்பது இந்த தோஷத்தின் தாத்பர்யம். இந்த ஸந்தர்ப்ப ஸ்ரீபாஷ்யத்தில்

(தஸ்ய நிரவயவஸ்ய பஹுபவநம் நோபபத்யதே' இத்யாதி யுக்திகளாலும் அநேகஸ்மின்னபி ஶரீரே ஶரீர்யம்ஶ: பரிஸமாப்த இதி நாநாத்வம் ஸ்யாதித்யர்த்த:'என்று ஶ்ருதப்ரகாஶிகா வாக்யங்களாலும் நாம் சொன்னபடியே பூர்வபக்ஷி ஓரிடத்திலேயே ஸர்வாவயவபரிஸமாப்தி ப்ரஸங்கிக்குமென்று நினைத்து இந்த ஆக்ஷேபத்தைச் சொல்வதாக ஸ்பஷ்டமாகிறது. இதற்கு ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத் என்கிற அநந்தரஸூத்ரத்தில் யதாஶ்ருதக்ரஹணத்தைக்கொண்டு யதார்த்தநிர்ணயம் செய்யவேண்டுமேதவிர இதரவஸ்து த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு சங்கைகள் கிளப்புவது ஶாஸ்த்ரஜ்ஞலக்ஷணமல்லவென்று ஸமாதானம் கூறப்பட்டது. இத்தால் ப்ரஹ்மம் ஏகமாகவும் நிரம்ஶமாகவும் நாநாரூபமான ஜகத்ஸ்ருஷ்டிக்கு உபாதானகாரணமாயும் இருக்கிறதென்று ஶ்ருத்யேகஸமதிகம்யமான விஷயத்தில் ஶ்ருதிவாக்யங்களில் கூறப்பட்டதைக் கொண்டே பூர்வபக்ஷியின் வாக்யத்தில் ப்ரஸ்தாவிக்கப் பட்ட க்ருத்ஸ்நப்ரஸக்தியும் கிடையாது. நிரவயவத்வஶப்தகோபமும் கிடையாதென்றே தீர்மானிக்கப்பட்டது. இந்த ஸூத்ரத்துக்கு வேதாந்ததீபத்தில் வ்யாக்யானம் பண்ணும் போது தார்க்கிகர்கள் ஒப்புக்கொண்டிருக்கும் ஜாதிவ்யக்தி த்ருஷ்டாந்தத்தை எடுத்து அம்மாதிரியில் ஒரே பதார்த்தம் நிரவயவமாயிருந்தபோதிலும் பல வஸ்துக்களில் தனித்தனியே வ்யவஹாரார்ஹமாயிருக்கப் பொருந்துமாகையால் தார்க்கிகர்கள் இவ்வாக்ஷேபம் செய்வது யுக்தமாகாது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இத்தால் ச்ருதி ப்ரமாணத்தை எடுக்காமலே தார்க்கிகர்களின் யுக்தியைக்கொண்டே இவ்வாக்ஷேபத்தை நிரஸநம் செய்யக்கூடுமென்பதும் ப்ரதர்ஶிக்கப்பட்டது. இதன் விவரம் நாம் முன்பே கூறியுள்ளோம். ஆகையால் க்ருத்ஸ்நப்ரஸக்தி யென்பதும் ஶப்தகோப மென்பதும் அஸம்பாவ்யமாகையால் ஸூ[illegible] நிரா கரிக்கப்பட்டதென்பது ஸ்பஷ்டம். ஏதோ [illegible] ஜநத்தில் ஸித்தேதத்வவிப்ரதிஷேதாத் என்கிற முதல் விகல்பத்தை ஒப்புக் கொள்ளாததால் அது ஸ்வரூபஸமாப்தி பக்ஷத்துக்கு ஸாதக

ஸாயிப்பது தவறு, ப்ரஹ்மஜ்ஞானம் அளவற்றதேயென்று கூறும் நம்மை தூஷிப்பதும் பரிஹஸிப்பதும் கலிபுருஷனுக்கு மிகவும் ஸந்தோஷகரமாகும். ஜ்ஞானமானது ஸ்ரீமான சக்தியானது தனக்கு ஆச்ரயமான ஸ்வரூபத்தின் ஸமாப்தியைச் செய்வதாகச்சொல்வது குடாரம் தரிப்பதுபோலும் வாழை குலேபோடுவது போலும் அச்வதரீகர்ப்பம்போலும் ஸ்வரூபநாசத்துக்கே ஹேதுவானதாகத் தேறுகிறபடியால் இதைப் பேசும் இவருடைய சாஸ்த்ர பரிசீலநசக்தி மஹிமையை என்னென்று சொல்வதோ தெரியவில்லை. ஆகையால் இவர் கூறியுள்ள அநுமாநத்தில் பக்ஷாபேக்ஷமே ஸாத்யத்தினால் ஸாயிக்கப்படுகிறதென்பது ஸ்பஷ்டம். தவிர இவர் கைக்கொண்ட ஹேதுவும் இதற்கு அப்ரயோஜகமேயாகும். ஜ்ஞானவஸ்தாவவிஷயத்தில் சக்தி அஸித்தமென்பது நாம் முன்பே நிரூபித்திருக்கிறோம். தவிரவும் இந்த ஸாத்யம் ச்ருதிவிருத்தமாதலால் பாதிதமென்பதும் தேறி நிற்கிறது. இதற்கு ஸ்பஷ்டமான த்ருஷ்டாந்தம் கூறி இவரது அநுமாநத்தின் அஸாமர்த்யத்தை உள்ளங்கைநெல்லிக்கனிபோல் ஸ்பஷ்டமாக்குகிறோம். மேருர்மேரு: அணுபரிமாண: அநுகூலகஸ்ய என்று ஒருவன் சொன்னால் இவர் ந்யாயசாஸ்த்ரம் அறிந்தவராயிருந்தால் என்ன பதில் கூறுவரென்பதை யோசிக்கவேண்டும். மஹாமேருவின் மஹத்வம் ப்ரத்யக்ஷஸித்தமாக இருக்க அதற்கு விரோதமாக அது அணுபரிமாணமுடையது என்று சொல்வது பாதிதமென்றும் அநுகூலகம் என்கிற அம்சம் இந்த ஸாத்யவிஷயத்தில் அப்ரயோஜகமென்றும் பதிலளிக்கவேண்டியதே அவசியமாகும். அப்படியே இவரது அநுமாநவிஷயத்திலும் ப்ரத்யக்ஷச்ருதிஸித்தமான ப்ரஹ்மஜ்ஞானத்தின் ப்ருஹத்த்வத்தை அவலம்பித்து அது ஸாவதிவ்ருத்தி என்பது ச்ருதிப்ரமாணபாதிதமென்றும் இவ்விஷயத்தில் ப்ரஹ்மத்தின் சக்தி அப்ரயோஜகமென்றும் சொல்வதே பொருந்துமென்பதை இவரே கண்டுகொள்ளட்டும். மேலும் இவ்வநுமானம் உபாதிதூஷிதமாகையால் வ்யாப்திசூந்யமாய் நிற்பதும் இது அஸமீசீநமென்பதை த்ருடப்படுத்துகிறது. தவிர

வும் இது ஸூக்திவக்ஷமென்கிற ஹேதுகாஹாஸ்தாஷ்டமாகவுமிருக்கிறது. ஸஹ்ய ந கஞ்சுராபி பரிஸரோத்ஸவம் விஹாகுராஸ் காலவஸ் என்று ஸாயுராஹாவஸாயகஹேதுவதர்பூஷஶாநவம் வரூகமான நம் பூர்வோமத்துக்கு இவர் என்ன மறுமொழி கூற முடியும்? இவ்வகையாக ஸவாநுதா ஜூவாஸாஜேஷஸ்யம் பரிஷ்க்ரியையில் பூர்ணமாயிருப்பது வக்ஷாஜ்ஞான்களுக்கு வ்யக்தமாவதாலும் இதில் ஸாயாநிஜெதுயும் வாயாகாலநமுமே பூர்வாநமாய் காணப்படுவதாலும் இதைப்பற்றி இனி விஸ்தரிப்பது அவசியமில்லையென்று நினைத்து இதன் ஸாணவிஹவத்தைப் பின்வருமாறு ஸங்க்ரஹித்துள்ளோம்— ஸத்யாவெதா: பூஜாவாஜவதிஜவி தம் ஶாஸ்த்ரமேநு ஸாஸமெஷ்ஷ ஸாத்வேஸ்த்ரம் விமிதுயம் ஸா ராஜநவிஷயெ தாவநுவொர்நாயநுஜாஷம் । வளந: வாநயம் விரோயொ ஜவாதரவிஷயெர்வயமஜிநுதம் வெவரீதயம் வநதெ வெவஸம்வியாஸு பூவாராதரஜீஷ வெருக்ஷ்யதாம் யாஷி ஹாவா: ॥ ஜதி। இவ்வாறமைந்துள்ள இந்நூலை இவர் ஏற்படுத்தும் வேதாந்த பரீக்ஷையில் அந்வயிப்பவர்களுக்கு முக்யமான கவெஷ்யமநுமாய் நியமித்திருப்பதாக இவரது விஷ்ணுநோஹரா வென்கிற பத்ரிகையில் ப்ரசுரம் செய்திருப்பது ஹிரண்யகசிபு தன் பாடசாலையில் விஷ்யாஹ்யாஸகர் ஹிரண்யாய நம: என்றே கற்கவேணுமென்று ஆணையிட்டதை நினைவுமூட்டுகிறது. இவ்விதம் நடக்கும் பரீக்ஷையில் கேள்விகேட்பவரும் கேட்கப்படுபவரும் பரிசு கொடுப்பதற்கு உபகரிப்பவரும் எவ்வித நன்மையையடைவார்களென்பதை நாம் சொல்லாமலே ஸகலரும் அறியலாம் 'வாஸாஷெவகயா பூஜ்ய: வாராஷாம்ஸீநுவாநாதி ஹி। வக்தாரம் வ்யூவகம் ஹெராத்ரம்ஸதாதஸவிஜம் யயா' என்று ஶாகவஜ்ஜமருளிச்செய்ததற்கு எதிர்த்தட்டாக வரிஷ்க்ரியா வரிபூஜ்ய: வாராஷாம்ஸீஞிவாதயெக । பூஷாரம் பூதி வக்தாரம் தயெவ ஸஹகாரிணம்' என்றறுதியிடப்பொருந்தும். கவெஷாவத ஜஹக்ஷம் விவரீதஜிஷம் ஜமக । யெநாவதுவதெ ஸாயாரஸாயாஷேந தாஷ்யதி ॥ இவ்வளவோடு தேஶிகநிஷ்டா

நிஹாநிராகரண ஸம்பந்தமாயுள்ள வக்தவ்யாம்ஶமும் முடிவுபெற்றது. இனி இவர் சில சில்லரையான விஷயங்களையெடுத்துச் சொல்லியிருப்பதற்குச் சுருங்க பதிலுரைக்கிறோம்.

பரித்ராணம் 10வது பக்கத்தில் ஆராய்ச்சியில் 96 லக்கங்களிட்டு விஷயங்கள் வெளியிடப்பட்டதாகவும் நிராகிருதியில் 13 பக்கங்களில் பதிலளிக்கப்பட்டிருப்பதாகவும் கூறி இதைத் தனக்கு விஜயஹேதுவாகக் கொண்டாடுகிறார். அப்படிக் கொண்டாடுவதில் நமக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் பெருந்துப்பைக் குவியல்கள் ஓர் சிறு நெருப்புப்பொறியால் சாம்பலாக்கப்படுவதைக் காண்கிறோமென்பதை இவர் மறந்தார்போலும். பரித்ராணம் 13 முதல் 16 பக்கம் வரையில் இவர் தேசிகன் க்ருஷ்ணமிச்ரனோடு வாதம் செய்ததாகச் சொல்வது கட்டுக்கதை யென்பதை விரிவாக ஸ்தாபிக்க முயல்கிறார். கடைசியில் அது முற்றும் பொய் என்று வத்வாநி ஸ்ருஜாணி உதந்யாதியான ஓர் சாடுஶ்லோகத்தை எடுத்துப் பரிஹஸிக்கின்றார். இவர் ஆராய்ச்சி 8வது பாராவில் ஆசார்யசம்பூவென்கிற வடமொழி நூலொன்றே தேசிக சரித்ரத்தை உள்ளவாறு உணர்த்துவதாகவும் ‘அதில் கூறப்படாத கதைகளை எழுதுவதும் கூறியுள்ள கதையை மாறுபாடாக எழுதுவதும் விவேகிகளுக்கு உரியதன்று’ என்றும் ‘அஃதொன்றே ஆக்ஷேபதோஷங்களைப் பெறாததும் பெறமுடியாததுமான நூல்’ என்றும் அறுதியிட்டிருக்கிறார். இதை ஆதாரமாகக் கொண்டே நான் நிராகிருதி 9வது பக்கத்தில் க்ருஷ்ணமிச்ரனோடு தேசிகன் வாதம் செய்த வ்ருத்தாந்தம் ஆசார்யசம்பூவில் நன்கு கூறப்பட்டிருப்பதால் அதை ஆராய்ச்சியில் உபேக்ஷித்திருப்பது ஸரியல்லவென்று சொன்னேன். இவரே ஆசார்ய சம்புவுக்கு மாறாக எழுதுவது விவேகிகளுக்கு உரியதன்று என்று ஆராய்ச்சி 8வது பாராவில் சொல்லிவிட்டுப் பிறகு தானே 23-வது பாராவில் ஆசார்யசம்பூவிலிருப்பதற்கு விரோதமாக தேசிகன் வாதயுத்தம் செய்தாரென்று எழுதியிருப்பதெல்லாம் பொய்க்கதையென்று கூறுவது விவேகிக்கு உரியதா வென்று நான் கேட்டால் அதைப்

பற்றி பரித்ராணத்தில் இவர் கோபித்துக் கூக்குரலிடுவது எப்படி யுக்தமென்று தெரியவில்லை. மேலும் இவரே எழுதியிருக்கும் ஸ்ரீமத் வேதாந்த தேசிகவைபவம் என்கிற நூலில் 30வது பக்கத்தில் "தென்னரங்கத்திலே மார்கழித்திருநாளான திருவத்யயன மஹோத்ஸவம் ப்ராப்தமான ஸமயத்திலே புறச்சமயிகள் திரண்டுவந்து தமிழ்பாஷையில் அமைந்த ப்ரபந்தங்களை இங்கே ஓதுவதற்கும் அந்த பிரபந்தங்களைப்பகர்ந்த ஆழ்வார்களை இங்கே போற்றுவதற்கும் தக்க ப்ரமாணங்களைக் காட்டி எம்முடைய ஆக்ஷேபங்களை அகற்றினாலல்லது இத்திருநாள் செய்யவொட்டோம்' என்று ப்ரத்யவஸ்தானம்பண்ணிநிற்க அப்போது ஸ்வாமி தேசிகன் தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல் ப்ரமாணோபந்யாஸ பூர்வகமாக அவர்களுடைய துர்வாதங்களை நிரஸித்தருளி ஒருவிபவமும் குன்றாமே அவ்வுத்ஸவம் முன்னிலும் சீருற நடைபெறுமாறு சேமம் செய்து அருளினார்" என்றிருப்பதும் ஆராய்ச்சியில் எழுதியிருப்பதற்குப் போதுமான பதிலாகும். ஒருக்கால் இவர் பூர்வோத்தர விருத்தமாய் எழுதுவது தமக்கே அஸாதாரணமாயமைந்துள்ள உரிமையாகையால் அதைக் குறித்து வடிவடி ஆக்ஷேபிப்பது விஸஹாயந தோஷமாகுமென்று கோபித்தால் நாம் அதைப்பொருத்தேதீர வேணும். பரித்ராணம் 15வது பக்கத்தில் 'ஸஹஸ்ரஜிஹ்வ என்கிற ப்ரமாணத்தை இந்த சடகோபாசார்யர் கொடாமலே காடு பாய்ந்ததும் ஒரு குணவிசேஷமே' என்று என்னைப் பரிஹாஸம் செய்கிறார் ஸஹஸ்ரஜிஹ்வஸம்பந்தம் கடாதென்று வெகு தூரத்தில் விலகி நிற்கும் குணவிசேஷம் எனக்குண்டென்பதை அங்கீகரிக்கிறேன். இதை இவர் உபஹாஸ்யமாய் நினைப்பதால் எனக்கு மனஸ்தாபமில்லை. ஸ்ரீ உ. ப. வே. மதுரை நாராயணய்யங்கார் ஸஹாவென்பது ராஜஸபையைக் குறிப்பதென்று ப்ரமாணிகமாக வெழுதியதைப் பலவாறாக விளக்கம் 4வது பக்கத்தில் இவர் தூஷித்திருக்கிறார். அந்த ஸந்தர்ப்பத்தில் ஹூணவொய ஸஹோதய கதகூர்வான க்ருஷ்ணாசாரியன் என்பவன் தேசிகனுக்கு ஸகோதரந

னல்லவென்று தேறிநிற்பதாகவெழுதுகிறார் இக்காலத்தில் சரித்ர விமர்சகர்கள் தினந்தோறும் புதிதுபுதிதாய் வெவ்வேறு நிர்ணயங்கள் செய்வது ஸாதாரணமாயிருப்பதால் அவ்வித நிர்ணயங்களை ஆதாரமாகக் கொண்டு முற்காலம்முதல் நிராக்ஷேபமாய் வழங்கிவரும் ஐதிஹ்யங்களையும் நமது ப்ராசீநக்ரந்தங்களிலுள்ள வ்ருத்தாந்தங்களையும் மறுக்கவாவது மாற்றவாவது துணிவுகொள்வது உசிதமல்ல. வாதம்செய்த க்ருஷ்ணமிச்ரன் ப்ரபோதசந்த்ரோதயகர்த்தாவாகவிருந்தாலுமிருக்கலாம் இல்லாமலிருந்தாலுமிருக்கலாம். அதைப்பற்றி இப்போது விசாரிப்பது அநாவச்யகம். ஸ்ரீதேசிகன் வாதிகளைப்பலமுறை வாதத்தில் ஜயித்தாரென்கிற ஸர்வஸம்ப்ரதிபந்நமானதும் இவரும் முன்பு ஒப்புக்கொண்டதுமான விஷயத்தை மறுக்கவேணுமென்கிற ஆக்ரஹம் இவருக்கு இப்போது ஏனேற்பட்டதென்பதை நாம் கேட்கிறோம். ஸ்வமதைகபக்ஷமாய் ஸ்ரீதேசிகன் விஷயத்தில் ஏதாவது ஒருவிதத்தில் குறைகூற வேணுமென்பதும் இதுவரையில் பரம்பரையாய்க் கூறப்பட்டுள்ள வ்ருத்தாந்தங்களை ஆக்ஷேபித்து தத்ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு மனவலியுண்டாக்க வேணுமென்பதும் தவிர வேறுகாரணம் புலப்படவில்லை ஸ்ரீதேசிகசரித்திரத்தைக் குறித்து உண்மையை நிர்ணயித்து லோகோபகாரார்த்தம் வெளியிடவேணுமென்பது இவருடைய அபிஸந்தியென்று தடஸ்தர் ஒருவரும் ஒப்புக்கொள்ளமுடியாது. அப்படி நிர்ணயிக்க இவரதிகாரியுமல்ல. ஏதோ ஸ்ரீதேசிகனுடைய விலக்ஷணமான சாந்திக்கு விரோதம் வந்துவிடுமே என்கிற பயத்தினால் ஸ்ரீதேசிகன் வாதிகளோடு வாதம் புரியவில்லையென்று ஸ்தாபித்து அவருடைய ஆத்மகுணபூர்த்தியை மிகப்பரிவுடன் ரக்ஷிக்க முன்வருவதாக இவர் நடனஞ்செய்வது கண்ணுள்ளவர்களைச் சிறிதும் மயக்காதென்பதை நாமிவருக்கு விளக்குகிறோம். இப்படிப்பட்ட தேசிகபக்தர்களிடமிருந்து ஸ்ரீதேசிக வைபவத்தை ரக்ஷிப்பதே நம்போலியவர்களுடைய கடமையாகையால் அக்கடமையை நிறைவேற்றுவதில் நாம் ஸதா ஜாகரூகர் என்பதை இவரறியட்டும்.

யதிராஜஸப்ததியில் 'கோ வா வக்தா ரோஹணயேதி விவாதோ வா ஸாவதகம் ஸ்ருதாஸ்ருதிவிஹாரஸம்ஹ்ருத ரணா ஸா தேஷு வா தேஷு நஃ' என்றிருப்பதும் ஸ்ரீதேஹளீசஸ்துதியில் 'சாஸ்த்ரஜாத வஸதாம் ப்ரஸக்தவஸதாம் ரமேசு ரமேசுவி நதஃ' என்றிருப்பதும் இன்னுமிம்மாதிரியாகப் பலவிடங்களில் ஸ்ரீ தேசிகன் திவ்யஸூக்திகளில் அவர் ப்ரதிபக்ஷிகளுடன் வாதம் புரிந்தவிஷயமாய் ஸ்பஷ்டமாகக் காணப்படுவதும் இவர் சொல்வ தெல்லாம் விபரீதவாதமென்பதை நிஸ்ஸம்சயமாக்குகின்றன.

பரித்ராணம் 37, 38, பக்கங்களில் ராமானுஜ தயாபாத்ரத் தனியன் விஷயமாக ஆராய்ச்சியில் 59, 60, பாராக்களில் எழுதப் பட்ட விஷயங்களுக்கு நிராகிருதியில் ஒன்றும் பதில் காணப்பட வில்லையென்றிவர் பரிஹஸிக்கிறார். நிராகிருதியில் ஸ்ரீதேசிக நிந்தாரூபமாக ஆராய்ச்சியிலுள்ளதைக் கண்டிப்பதையே உத்தே ச்யமாக நாம்கொண்டபடியால் மற்றவைகளைப்பற்றி விஸ்தரிக் காமல் திக்ப்ரதர்சநத்தோடு நிறுத்திக்கொண்டோம். இவருக்கிது அபூர்வமென்று தோன்றுவதால் இங்கு சில அவச்யமான விஷயங்களைக் கூறுகிறோம். ராமானுஜதயாபாத்ரத்தனியன் 200 வருஷங்களுக்கிப்பால் கோவில்சண்டைகளுக்காகவே தோன்றிய தாகவும் அது ஸ்ரீதேசிகன் காலத்திலேற்பட்டதென்று சொல் வது பொய்க்கதை என்றும் இதைக்குறித்துத் தான் ஸ்ரீராமானுஜ தயாபாத்ர தத்வம் முதலிய நூல்களெழுதியிருப்பதாகவும் ஆராய் ச்சி 59வது பாராவில் உத்கோஷிக்கிறார். மற்ற விஷயங்களைப் போலவே இதிலும் இவருடையகோஷம் பெரியதேதவிர விஷயம் ஒன்றும் விகல்பஸஹமல்லவென்பது ஸ்பஷ்டம். இத்தனியன் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி ஸாதித்ததென்றும் அது ஸ்ரீரங்கத் தில் வேதாந்திகளுடைய தடையினால் ச்ருத்யத்யயநோத்ஸவத்துக்குத் தடையேற்பட்டபோது ஸ்வாமி ஸ்ரீதேசிகன் அப்பிரதிபக்ஷிகளை வாதத்தில் ஜெயித்து அக்கப்போத்ஸவத்தை யதாசாஸ்த்ரம் நடத்தி வைக்கும் தறுவாயில் ஸ்ரீரங்கநாயனுடைய நியமனப்படி திவ்ய ப்ரபந்த அநுஸந்தானத்துக்கு முன்பு ஸேவிக்கப்பட்டதாகவும்

அதையனுஸரித்தே பின்பு எங்கும் அவ்வனுஷ்டானம் நடந்து வருவதாகவும் ப்ராசீநக்ரந்தங்களிலிருந்தும் ஸர்வாரம்பேஷ்வ ஸம்யமிநாம் என்றபடி ஸம்ப்ரதாய பரம்பரா ப்ராப்தமான அநுஷ்டாநத்திலிருந்தும் நிஸ்ஸம்சயமாய் விளங்குகிறது. ஆனால் இவ்வாறுள்ள வஸ்துஸ்திதியை ஒப்புக்கொண்டால் இப்போது சில காலமாய் ஸ்ரீரங்கம்முதலிய ப்ரதானமான திவ்ய தேசங்களில் கலிவசத்தாலுண்டாயிருக்கும் விபரீதாநுஷ்டாநங்கள் சிலா வணியற்றுப்போய்விடுமே என்கிற பயத்தால் இவர் தத்வத்தை கலுஷிக்கவேணுமென்று நினைத்து ஏதோ ஸ்ரீதேசிகனுடைய மஹிமையைத் தானே காப்பாற்ற முன்வருபவர்போல் கபட நாடகம்போட்டு ப்ரதிபக்ஷிகளோடு அவர் வாதம் செய்ததே கிடையாது, அது அவருடைய க்ஷாந்திகுணத்துக்கு விருத்தமா கையால் நடந்திருக்க ப்ரஸக்தியில்லை யென்பது முதலான மித்யா வாதங்களைச் செய்கிறார். ஆனால் இந்தத் தனியன் ஸ்வாமி தேசிகன் காலத்திலேயே ப்ரசாரத்திலிருந்ததென்பதும் அதுவிஷ யத்தில் சிலர் அஸூயை கொண்டிருந்தார்களென்பதும் இவரது கூடஸ்தரான ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் அருளிச்செய் திருக்கும் ஸப்ததிரத்நமாலிகையிலுள்ள 'ஶ்ரீமத்வாதிஹம்ஸாம்பு வாஹாசார்யபதாஶ்ரிதஜநாஹ்லாதீ நயத்ராதா வித்யாவ்யாஸ்யஜத்யாதி ஶ்லோகத்தில் நன்கு ஸூசிக்கப்பட்டிருப்பது ஸர்வஜ்ஞர்கள் அறி யத்தகும். இங்கு ஸ்வாமி தேசிகனை அவர் திருநாமத்தைவிட்டு ஸாக்ஷாத்தாகக் குறிக்காமல் வ்யாக்யாநநாயபூர்வ ப்ரயோஜகமான வாதிஹம்ஸாம்புவாஹாசார்யசிஷ்ய சப்தத்தால் வ்யபதேசித்த தற்குத் தாத்பர்யம் ராமாநுஜதயாபாத்ரம் என்பதற்குப் பர்யாய மாய் இருக்கவேணுமென்பதே என்பது மிகவும் உசிதமான ஊஹ மாகும். பெரியபெருமாள் நியமித்தபடி அதுமுதல் ப்ரமேணக வக்ஷ்வாதிகளான பெரியோர்கள் ராமாநுஜதயாபாத்ரத் தனியனை அநுஸந்தித்துவந்தும் அஸூயுக்களான சில தூர்வாதப்ரவ்ருத் தர்கள் அதை அநுஸந்தியாமல் முன்போலவே லக்ஷ்மீநாதஸமா ரம்பாம் என்று தொடங்கி திவ்யப்ரபந்தத்தை ஸேவித்துவந்தபடி

யால் அதனுல் திருவுள்ளம்கலங்கி அவர்களை லக்ஷ்யமாகக் குறித்து தேசிகஸஹஸ்ரவராரான அண்ணன் இவ்விதம் அருளிச்செய்த படி. இது ஐதிஹ்யமுகத்தாலும் அர்த்தஸ்வாரஸ்யத்தாலும் தேர்ந்த விஷயம். இதையெல்லாம் புறந்தள்ளி இவர் ராமாநுஜதயாபாத்ர தனியன் ப்ராசீநமென்றும் ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தனியன்தான் அர்வாசீநமென்றும் அதற்குப்போட்டியாகஸந்நிதிகளில் ஸந்நிவேசிப்பதற்காக இது புதிதாகக் கல்பிக்கப்பட்டதென்றும் சொல்லத் துணிகிறார். இன்னும் சிறிதுகாலம்சென்றால் இவர் ஸ்ரீதேசிகனே வரவரமுனிக்குப் பின்பு அவதரித்தவரென்றும் சொல்ல முன்வந்தாலும் வரக்கூடும். [illegible] என்று ஒரு ஸ்தோத்ரம் ஸ்ரீதேசிகன் ஸாதித்ததாக ஓர் பொய்க்கதையைக் கட்டி அதை ப்ரசுரம் செய்தவிவருக்கு இம்மாதிரியான கல்பனங்களெதுவும் ஸாமாந்யமென்று. ராமாநுஜ தயாபாத்ரத்தனியன் ஏற்கனவே இருந்ததென்றும் ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்பது புதிதாக ஏற்பட்டதென்றும் விருத்தாசலம் அடால்ட் கோர்ட்டு 1807ஸு அசல் நெ. 107ல் தீர்மானிக்கப்பட்டிருப்பது இவர் சொல்வது நம்பத்தகாததென்பதை ஸ்தாபிக்கிறது. வங்கீபுரம் ஸ்ரீ உ வே வேதாந்தராமாநுஜாசார்யருடைய ஸ்ரீதத்வநிர்ணயம் என்கிற க்ரந்தத்தில் பிள்ளை லோகஞ்ஜீயரென்பவர் தன் லௌகிக ஸாமர்த்யத்தால் சிலகாலத்துக்குமுன் அநாதியாய் வழங்கிவந்த ராமாநுஜதயாபாத்ரத்தனியனுக்குப் பதிலாகப் புதிதாக ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தைப் புகுரவிட்டாரென்கிற யாதார்த்த்யம் ஸோபபத்திகமாய் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் தத்த்வவித்துக்களான ப்ராசீநர்கள் ராமாநுஜ தயாபாத்ரத்தையே ஸம்ப்ரதாயஸித்தமாய் அநுஸந்தாநம் பண்ணிவந்திருப்பதுடன் இதன் கம்பீராசயத்தைப் பல விதத்தில் வ்யாக்யாநம் செய்திருக்க ஆராய்ச்சி 61வது பாராவில் 'எங்கும் பாதுகா ஸஹஸ்ரலாபத்தோடு நிற்கின்றவொரு அநுஷ்டுப்புக்கு லக்ன ஹோரைகள் முதற்கொண்டு வெளிவருகிறதென்றால் இந்த ஜாதகம் எதற்காகத் தோன்றியதென்பதைக் கண்டுபிடிக்க நிபுணர்க

ளில்லையா' என்றிவர் கேள்வி கேட்டிருக்கிறார். தனது வைவர்ண்யாதிசயத்தினால் பாதுகா ஸஹஸ்ரலாபமென்று ப்ரத்யக்ஷமாய் வ்யாமோஹம் செய்துவிட்டதாக இந்த தேசிக பக்தர் அந்தரங்கக் களிப்பினாற் பூரிக்கிறார், ஸ்ரீதேசிகனுடைய விபவதசையில் அவரது திருமுடியில் இடிக்கவேணுமென்று பாத ரக்ஷைகளை வாயிற்படியில் தொங்கவிட்டவர்கள் கோஷ்டியில் புகுந்திருக்குமிவர், ராமானுஜ தயாபாத்ரத்தனியனுக்கு இந்த ஸம்பாவனை செய்வதும் வாதூலகுலஸம்பவத்துக்கு இவ்விதமான வ்யாமோஹம் தேடியதும் ஆச்சர்யமல்ல. ஏற்கனவே நாம் கூறியுள்ளபடி இவ்வகையான நிந்தாக்ஷேபமான இவரது பாபம் வ்ருதைவ நிந்த்யதே என்பதும் ஸர்வஸ்யாபி ஸ்வஸ்ய க்ஷிபந்தேவ வ்யவஸ்தேதி என்கிற கணக்கில் இதெல்லாம் ஒருகாலும் வீண் போகாதென்பதும் நிஸ்ஸம்சயம்.

பரித்ராணம் 7, 8, 9, பக்கங்களில் 'ஓடும் புள்ளேறி' என்கிற திருவாய்மொழியைக் குறித்துச் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அதில் முதலில் ஆராய்ச்சியில் தேசிகநிந்தையும் முன்னிருந்த பரகால மடாதிபதிகளைக் குறித்து தூஷணமுமிருப்பதாக நான் நிராகிருதியில் சொல்லியிருப்பது அஸத்யமென்று இவர் சொல்லுகிறார். இது ஸர்வதா அஸத்யமென்பது ஆராய்ச்சியைப் படித்தால் ஸ்பஷ்டமாகையால் நான் விரிவாக ஒன்றும் எழுதவேண்டிய அவச்யமில்லை. இந்த ப்ரகரணத்தில் இவ்விதமான இவரது ஆரம்ப வாக்யங்களெப்படி அயதார்த்தமோ அக்கணக்கிலேயே இவர் மேலே கூறும் விஷயங்களும் அஸங்கதமாய் நிற்கும் நிலையை இப்போது விசதீகரிக்கிறோம். "ஆராய்ச்சி நூலில் 56வது பாராவில் பதினெண்ணாயிரப்படியில் என்று தொடங்கி எழுதப்பட்டிருக்கும் விஷயத்தையே இவர் பரகாலஸ்வாமிகளின் நிந்தையாகக் குறிப்பிடுகிறார். அந்தப் பதினெண்ணாயிரப்படியை எடுத்துக் கண்திறந்து பார்க்கலாமே. அதில் இல்லாதவிஷயமேதேனும் எழுதப்பட்டிருந்தால் அதை நிரூபிப்பதன்றோ நிபுணக்ருத்யம் அந்தோ! அதற்கு சக்கில்

லேயே இவர்களிடத்தில் விஷய விசாரத்தில் வாய்வைக்க பாக்ய மில்லேயே. "நிந்திக்கிறார், தூஷிக்கிறார்", என்று இந்தப்பாட்டை பாடிச் சில பாமரர்களை வஞ்சிக்கப்பார்ப்பதுதவிர வேறுண்டோ இவர்களிடத்தில். தேசிகன் பிள்ளானுடைய ஆறாயிரப்படியைக் கையிற்கொள்ளாமல் பெரியவாச்சான்பிள்ளையின் இருபத்திநாலா யிரப்படியைக் கையிற்கொண்டே த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்னவளியைப் பணித்துள்ளாரென்று ஸப்ரமாணமாக ஆராய்ச்சி நூலில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றதே. அதற்கு இவரோ மற்ற வர்களோ வாய்திறந்தொன்று பணிக்க வழியுண்டோ? அப் படிப்பட்ட விஷயங்களன்றோ இவர்கள் பேசி நாவீறுகாட்ட வேண்டும். அதற்குச் சரக்கில்லாதபோது வாளாகிடப்பதன்றோ விதி. எதுக்கிச் சிறுவிஷயங்களிலே பரந்துழல்வது?" என்று பரித்ராண வாக்யாநுபூர்வி. இங்கு ஸ்ப்ரமாணமாக ஆராய்ச்சி நூலில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்று நிர்தேசிக்கப்பட்டிருக்கும் வாக்யங்கள் அதில் 55, 56, 57, பாராக்களில் வரையப்பட்டிருக் கின்றன. அவைகளில் த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்னவளியில் ஸ்ரீதேசிகன் 'ஒடும்புள்ளேறி' என்கிற முதல்பத்து 8வது திரு வாய்மொழியில் பகவானுடைய ஸௌலப்யம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப் பதாக ஸாதித்திருப்பதால் திருவாறாயிரப்படியில் ஐச்வர்யம் கூறப்பட்டிருப்பதாகச் சொல்வதை அவர் உபேக்ஷித்து 'நம் பிள்ளை நிஷ்கர்ஷித்தபடியையே பின்பற்றினரென்றும்' ஆர்ஜ வகுணமென்கிற ப்ரஸ்தாவமே ஆறாயிரப்படியில் கிடையாது, நம்பிள்ளை திருவடிகளின் வ்யாக்யானங்களை ஸேவியாமல் தேசி கன் அதை எங்ஙனம் நிர்வஹித்தாரென்றும், 'பரகாலஸ்வாமி பதினெண்ணாயிரப்படியில் ஸ்ரீ தேசிகன் இப்படி ஆறாயிரப்படி வழியைவிட்டு நம்பிள்ளை நெறியை ஆதரித்து விட்டாரே என்கிற திருவயிற்றெரிச்சலினால் ஸ்ரீ தேசிகரை சபிக்கமாட்டாமல் நம பிள்ளையை நிந்திக்கிறார், இங்கே ஸ்ரீதேசிகன் யாருடைய திருவடி களை சரணம்பற்றியிருக்கிறார் என்பதை ப்ராமாணிகர்கள் ஆகா சத்தாண்டவம் செய்யாமல் ஆர்ஜவத்துடன் அறுதியிட வேண்

டுய்' என்றும் இப்புடையில் விஸ்தாரமாக விஜ்ரும்ஹணம். காணப் படுகிறது.

திருவாராயிரப்படியில் இத்திருவாய்மொழியின் முதற்பாசுரத்துக்கு அவதாரிகையாக, இதற்கு முன்புற்ற 'பிறவித்துயரற' இத்யாதியான திருவாய்மொழிக்கும் இப்பாசுரத்திற்கும் ஸங்கதி ரூபஸம்பந்தரூபமாக "இப்படித் தம்மோடு கலந்தருளின வெம்பெருமானுடைய திவ்யரூபமும் சொல்லுகிறது" என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. பிறகு 2வது பாசுரத்தில் இப்படி நித்யஸித்தமான திவ்யரூபத்தின் மேலே ஸம்ஸாரிஸம்ரக்ஷணார்த்தமான வதாரரூபமான [illegible]த்தைப் பேசி, 3-வது' பாசுரத்தில் திருமலையில் நிற்கும் மஹாஸம்பத்தைக் கொண்டாடி பிறகு 4 முதல் வரும் பாசுரங்களில் 'இப்படிப்பட்ட ஐச்வர்ய பரம்பரைகளையுடையவன் ஆச்ரிதர் திறத்தில் ப்ரேமையை யாவிஷ்கரிக்கும் ப்ரகாரங்களைச் சொல்லிக் கடைசியில் அதிசீதளமாய் ஸர்வமனோஹரமான திருநிறத்தையுடையவனாயிருந்த வெம்பெருமானுடைய ஆச்ரிதவாத்ஸல்யமாகிற மஹாகுணத்தையுள்ளபடியே பேசிற்றித்திருவாய்மொழி யென்கிறார்' என்று நிகமனம் செய்யப்பட்டிருக்கிறது. இதையனுஸரித்தே தேசிகன் தாத்பர்ய ரத்நாவளியில் இத்திருவாய்மொழியை "ஸங்கீர்ணாம் [illegible] வ்யாப்திமத்தாம் ஸ்வாஸ்த்ராணாம் வந்யா ஸ்ரீவத்ஸாம் [illegible] ஸ்ரீ [illegible] வைதேஹ்யாம் ஸவித்ருதநயாம் ... [illegible] ... ஆச்ரிதாநாம் நிரவதிக்ருபாம் [illegible] ॥ என்று ஸங்க்ரஹிக்கும்போது முதல் மூன்று பதங்களால் முதல் மூன்று பாசுரங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட [illegible]த்தை ஸங்க்ரஹித்துப் பின் ஏழு பதங்களால் பகவான் ஆச்ரிதர்களிடமுள்ள ப்ரீதி விசயத்தால் பஹுப்ரகாரமாக அவர்களுக்குபகரிக்கும்படியை 4 முதல் 10 வரை பாசுரங்களில் வர்ணிக்கப்பட்டிருப்பதை ஸங்க்ஷேபித்துப் பிறகு இத்திருவாய்மொழி முழுவதிலும் தேறி நிற்கும் ப்ரதிபாத்யாம்சத்தை 'நிரவதிக்ருபாம் [illegible]

ஜநா:' என்றருளிச்செய்திருக்கிறார். இதை வ்யாஜீகரித்து ஆராய்ச்சியில் தேசிகன் திருவாராயிரப்படியை ஸமர்த்தநம் செய்து நம்பிள்ளையைப் பின்பற்றினதாக மேற்குறித்தவாறு பறையடிக்கப் பட்டிருக்கிறது. இத்துடன் நிற்காமல் ஸ்ரீபரகாலஸ்வாமி பதினெண்ணாயிரப்படி வ்யாக்யானத்தில் இவ்விஷயத்தைக் குறித்தருளிச்செய்திருப்பது ஸ்பஷ்டமாய் நிந்திக்கப்பட்டுமிருக்கிறது. இதெல்லாம் சிறிதும் உபபந்நமல்ல. முன் திருவாய்மொழியில் அதிநிக்ருஷ்டனை தன்னோடு வாசியறக்கலந்துகளிப்புறும் எம்பெருமானுடைய எளிமையைப்பேசி இப்படியவன் தன்னோடு கலந்ததால் அவனுக்கு நிகர்ஷம் ஸம்பவியாதோ வென்கிற சங்கையை நிவர்த்திக்கப் புகுபவராய் காரண வாக்யங்களில் ப்ரதிபாதிக்கப் பட்ட ஹேயப்ரத்யநீகத்வத்தால் பகவானுக்குக் குற்றமொன்றுமில்லையென்று சோதகவாக்யங்கள் அவனது பெருமையை அறுதியிடுவதுபோல் இத்திருவாய்மொழியில் முதல் பாசுரத்தில் அவனது ஐச்வர்யம் வர்ணிக்கப்படுகிறதென்று மட்டும் திருவாராயிரப்படி அவதாரிகையில் கூறப்பட்டது. பின்பு இவ்வைச்வர்யமிருக்கச்செய்தேயே, இத்தால் அவனது ஆச்ரிதவாத்ஸல்யஸௌலப்யாதிகமான விவிதவிசித்ர மஹோபகாரங்களுக்கு எவ்விதத் தட்டுமில்லை என்பது மேற்கண்டவாறு பின்னால் ஸங்க்ரஹிக்கப்பட்டது. இப்படித் தாழ்ந்தவரோடு இணைபிரியாமல் கலப்பது, அப்படிக் கலக்கையிலேயே தன் ஸ்வரூபகதமான ஐச்வர்யம் சிறிதும் குன்றாமலிருப்பது, இப்படிப்பட்ட ஐச்வர்யவிசிஷ்டனாகவே மறுபடியும் ஸமஸ்தமான ஆச்ரிதர்களுக்கும் அவரவருக்குத் தக்கவாறு தண்ணியனாய் நிற்பது என்கிற ஸ்வபாவத்தால் தன்னை யாச்ரயிப்பவர்களுடைய நிக்ருஷ்டஸ்வபாவங்கள் எப்படி யிருந்தபோதிலும் தன்னை ஆச்ரயித்தவர்கள் என்கிற ஸாம்யத்தையிட்டு அவர்கள் எல்லாரிடமும் ஏகரூபமாய் வர்த்திக்குமதான ஸமத்வம் திருவாராயிரப்படியில் தேறி நிற்கும் ஸாராம்சமாகையால் அதை வ்யக்தமாகக் கூறுவதற்காகவே தேசிகன் தாத்பர்ய ரத்னாவளியில் நிரவதிஸௌஜந்யதாம்' என்று ஸாதித்தாரென்பது ஸஹ்ருதயர்களு

க்கு ஸ்பஷ்டமாய் விளங்கும். ஸாம்யம் என்பது பல ப்ரகார முள்ளது. அதில் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அஜஹத்ஸ்வஸ்வபாவனுயிருக்கை யென்பது ஒன்று. இதுதான் முன் ஸர்வத்ர ஸமானத்வநிர்வாஹத்தில் ஸர்வத்ர ஸதைகரூப ஸமானனுயிருக்கை என்று நிரூபிக்கப்பட்டது. „ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந: இத்யாதி ச்ருதிகளிலும் ஸமோऽஹம் ஸர்வபூதேஷு இத்யாதியான ஸ்ரீகீதாவாக்யத்திலும் இது ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு ஆகாரம் தாத்பர்ய ரத்நாவளியில் ஸ்ரீவாத்ஸல்யாதே என்று குறிக்கப்பட்டதான பெரியவன், சிறியவன் என்கிற தரம் பாராதே, தன்னை யாச்ரயித்தவர்களிடம் ஒருதாய் தன்மக்களின் வயது, குணம், முதலிய பேதத்தைப் பாராமல் அவரவருக்குத் தக்கபடி ஸ்தந்யதாநம் செய்து அவரவரை புஷ்டராக்குவது போல் ஏகரூபமாய் வர்த்திக்கும் வாத்ஸல்யாதிரூபமாகும். இதன் வேறொரு ப்ரகாரம் பகவான் தனக்கு ப்ரியதமரான ஆச்ரிதர்களுடன் ஸம்ச்லேஷிக்கும்போது தன் திருவுள்ளத்தில் எவ்வித ஸங்கோசமின்றியே ஸர்வாத்மநா ஸம்ச்லேஷிப்பதாகும். இதுதான் இத்திருவாய்மொழிக்கு நடுநாயகமாய் விளங்கும் ‘வைகலும் வெண்ணெ கைகலந்துண்டான், பொய்கலவாதென் மெய்கலந்தானே’ என்கிற 5வது பாசுரத்தில் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இது திருவாராயிரப்படியில் „காபட்யரஹிதமாய் என்னோடு ஸம்ச்லேஷிக்கையன்றியே என்னோடு ஸம்ச்லேஷித்தல்லது தரிக்கமாட்டாத ஸ்வபாவனுய்க் கொண்டென்னுடைய இந்தவுடம்போடே ஸம்ச்லேஷித்தருளினான்” என்று விவரிக்கப் பட்டிருக்கிறது. ஸ்தநந்தயனுடைய குரல் கேட்டவளவில் மாதாவானவள் எந்நிலைமையிலிருந்தாலும் வாத்ஸல்யாதிசயபரவசையாய் வாரியணைக்க விரைவது போல், தன்னுடைய ஆச்ரிதஸ்வரம் கேட்டவாறே விளம்பவ்யாஜாதிகளான பொய் சிறிதும் கலவாது வெண்ணெயளைந்த திருமேனியுடனே தன்னை ஸம்ச்லேஷித்ததான ஆர்ஜவாதிரேகத்தை விஸ்மயத்துடன் ப்ரசம்ஸிக்கிறார். இவ்வகையான ஆர்ஜவப்ரகா

ரங்கள் திருவாராயிரப்படியின் ஸூசநவசநரீதி யிலிருந்தே ஸ்பஷ்டமாகத் தேறுவதால் அதையனுஸரித்தே ஸ்ரீதேசிகன் இத்திருவாய்மொழியின் பாசுரங்களின் தாத்பர்யத்தை முன் விசேஷணங்களால் நிர்தேசித்துக் கடைசியாக அநுஸந்தாகாரத்தை 'நிரவத்யஸ்ருஜதாம்' என்று ஸங்க்ரஹித்தார். ஆகையால் ஸ்ரீதேசிகன் ஆராயிரப்படியை உபேக்ஷித்ததாகச் சொல்வது வஸ்துஸ்திதிக்கு அத்யந்தவிருத்தம். பரமாதிஸாரஸிகயாயும் அதிப்ராசீநவாயும் பரமகம்பீரமாயுமிருக்கும் ஆழ்வார்திவ்யஸூக்தியின் ஸரணியை அனுஸரித்து அதன்ச்சாயையைப்போல் பின்சென்று வ்யாகரமானது புஷ்பத்தின் ஸௌரபத்துக்காவது ஸௌகுமார்யத்துக்காவது எவ்வித ஹாநியுமின்றியே வாயுவானது க்ரஹிப்பது போல் அதன் தாத்பர்யத்தை உத்தாரம் செய்து லோகத்துக்கு அநுக்ரஹம் செய்திருக்கும் மஹாபுருஷனான ஸ்ரீபாஷ்யகார ஜ்ஞாநஸம்பந்நனாகிய திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய அதிகம்பீரமான திருவாக்கின் அர்த்தவிசேஷங்களை எல்லோரும் யதாவத்தாகத் தெரிந்துகொள்வது ஸுலபமல்ல வென்றெண்ணியே ஸ்ரீதேசிகன் தாத்பர்ய ரத்னவளியில் அவைகளை ஸுவ்யக்தமாக்கிப் பரமோபகாரம் செய்துள்ளார். உண்மையிவ்வாறிருக்க ஈடுமுப்பத்தாராயிரப்படி வ்யாக்யானத்தில் இத்திருவாய்மொழியின் வ்யாக்யானாரம்பத்தில் 'இத்திருவாய்மொழிதான் ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யத்தைச்சொல்லுகிறது என்பாருமுண்டு ; அன்றிக்கே கீழே பாடியிளைப்பிலம் என்றார். அப்படியே பாடியனுபவிக்கிறார் என்பாருமுண்டு ; ஆர்ஜவகுணம் சொல்லுகிறது என்று பட்டரருளிச் செய்யும்படி' என்கிற வாக்யானுபூர்வி காணப்படுகிறது. இங்கு முதலிற் கூறிய நிர்வாஹம் அதாவது ஐச்வர்யத்தைச் சொல்லுகிறது என்றது திருவாராயிரப்படியில் முதல் பாசுரத்தின் அவதாரிகையின் அநுவாதமாகையால் திருக்குருகைப் பிரான் பிள்ளானைக்குறித்து 'என்பாருமுண்டு' என்று பக்ஷாந்தரம் போல் விகல்பித்துப் பேசியிருப்பது மிகவும் அயுக்தமென்று நினைத்தே அதிமஹநீயரான ஸ்ரீபரகாலஸ்வாமி தமது பதினெண்

ணுயிரப்படி யென்கிற வ்யாக்யாநத்தில் பின் வருமாறு ஸாதிக் கிருர். "இதில் எம்பெருமானுடைய ஸௌலப்யம் சொல்லு கிறதென்றருளிச் செய்த திருக்குருகைப்பிரான் பிள்ளானை 'என் பாருமுண்டு' என்பது ஸ்வாபிப்ராயம். ஸ்வாரஸ்யமும் அவருடைய ஸ்ரீஸூக்தியிலே கண்டிலோம்". இதைக்குறிப் பிட்டுத்தான் ஆராய்ச்சியில் பரகாலஸ்வாமி திருவயிற்றெரிச்ச லால் ஸ்ரீதேசிகனை சபிக்கமாட்டாமல் நம்பிள்ளையை நிந்திக்கிருர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் பரகாலஸ்வாமி யைப்பற்றி இவர் பேசியிருப்பது அவரைத் தூஷித்ததாகாது பூஷித்ததேயாகும் என்றிவர் ஶபதம் செய்கிருர். அதுவும் ஸத்ய விபரீதவாதியான இவருக்குயுக்தமே. அது எப்படி யிருந்தபோதிலும் ஈட்டில் சொல்லியிருப்பது ஸௌலப்யமல்ல வென்பது நிராக்ஷேபமான விஷயம். நான் முன்பே கூறியபடி ஸௌலப்யத்தைச் சொல்லுகிருர் என்பது முதல் பாசுரத்துக்கு முன் திருவாய்மொழியுடன் ஸங்கதியைக்குறிக்கக் கூறப்பட்டதே தவிர இத்திருவாய்மொழி முழுவதின் தாத்பர்யமாகக் கூறிய தல்ல. அப்படிக்கொண்டால் நிகமனத்தில் 'எம்பெருமானுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யமாகிற மஹாகுணத்தையுள்ளபடியே பேசிற்றித் திருவாய்மொழி என்கிருர்' என்பதுடன் விரோதிக்கும். ஈட்டுக் காரர் இதை அடியோடு மறந்து முதற் பாசுரத்துக்காகக் கூறிய அவதாரிகையைத் திருவாய்மொழி முழுதுக்கும் தாத்பர்யமாக ப்ரமித்து மேற்கண்டபடி பேசியது தவறென்று பஹுஜ்ஞரான பரகாலஸ்வாமி கண்டித்திருப்பதை தத்வஜ்ஞர்கள் அநுமோதனம் செய்யாமலிருக்க முடியாது. மேலும் ஒரே வாக்யத்தில் பிள் ளானை 'என்பாருமுண்டு' என்று உபேக்ஷாவசநத்தால் நிர்தே ஶித்துப் பிறகு 'பட்டருளிச் செய்யும்படி' என்று பஹுமாநவச நத்தால் பட்டரைக் குறிப்பது ஸத்ஸம்ப்ரதாயத்தில் ஆசார்யரை பஹு மானித்ததாகுமா, பட்டருக்குத்தான் அது உகக்குமா வென்ப தையும் யோஜிக்க வேணும். 'ஆசார்ய ப்ராசார்யயோஸ் ஸந்நி பாதே ப்ராசார்யாயாபோவஸம்ஶ்ருத்ய ஸம்ஜவ்யக்ஷோவா

யத்ம் ப்ரதிஷேதயதி தர: என்கிற ந்யாயத்தை ஈட்டுக்காரர் மறந்தார் போலும். அதுபற்றியே ஜ்ஞாநவைராக்யாநுஷ்டாந ஶாலிஷ்டரான ஸ்ரீபரகாலயதீஶ்வரர் இந்த வ்யதிகரத்தை ஸம்மதிக்கவில்லை. தவிர முன்பு நான் விவரித்தபடி ஸர்வாவஸ்தைகளிலும் ஸௌலப்யவைண ஸௌஶீல்ய யோகமும் ஸர்வாவதார ஸஜ்ஜநர்களோடு ஸம்ஶ்லேஷிப்பதும் நீசோத்விஹாரமற ஸர்வஸ்தமான ஆஶ்ரிதர்பக்கல் ஸமமான வாத்ஸல்யத்துடன் ததுஸ்தாநுவர்த்தநம் பண்ணுவதும் ஆர்ஜவகுணத்தின் ப்ரகாரங்களாகையால் இதையறியாமல் ஈட்டில் இவைகளை விகல்பித்திருப்பது தத்வவேதிகளுக்கு ஆக்ஷேபாஸ்பதமாயிருப்பது யுக்தமே. ஈட்டிலேயே "ஆர்ஜவகுணம் சொல்லுகிறது" என்பது பட்டருடைய நிர்வாஹமாகச் சொல்லப்பட்டிருப்பதால் நம்பிள்ளையாவது பெரியவாச்சான் பிள்ளையாவது இதற்குப் ப்ரவர்த்தகரல்லவென்று ஏற்படுவதால் ஸ்வாமிதேசிகன் நம்பிள்ளை திருவடியையும் பெரியவாச்சான்பிள்ளை திருவடியையும் பற்றியே இவ்வர்த்தத்தைத் தெரிந்து கொண்டாரென்றுரைச்சியில் சொல்லியிருப்பது ஸத்யவிருத்தம். திருவாறாயிரப்படியின் வசநவ்யக்தியிலிருந்து ஸ்பஷ்டமான விஷயமிது என்பது வ்யக்தமாயிருப்பதால் ஸர்வஜ்ஞரான ஸ்ரீதேசிகனுக்கு இதைப் பிறரிடம் கற்கவேண்டிய அவச்யமின்றியே இவ்வர்த்தம் ஸ்புரித்திருக்கத்தட்டில்லை. தாத்பர்யரத்நாவளி ஶ்லோகாநுவ்ருத்தியை கவனித்தால் இது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. அப்படிக்கில்லையென்றாலும் பட்டர் செய்தருளிய நிர்வாஹம் தேசிகனுக்கு தம் ஆசார்ய பரம்பரையின் வழியாகத் தெரிந்திருக்கலாம். பட்டருக்கும் தேசிகனுக்கும் எல்லா விஷயங்களிலும் ஸாரஸ்யமே தவிர பிந்நாபிப்ராயம் கிடையாது. இது ஸ்ரீதேசிகனுடைய க்ரந்தங்களில் ஸுஸ்பஷ்டம். ஆகையால் பட்டருடைய நிர்வாஹத்தை தேசிகன் ஸ்வஹஸ்தேநம் அபஹாரம் பண்ணத்தட்டில்லை. ஆயவர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை முதலிய ஆசார்யர்களின் க்ரந்தங்களில் இருக்கும் ப்ரமாணஹாஸங்களை தேசிகன் பரிக்ரஹிக்க இசையாமற் போகார். ஸதெத்யகதுஷ்டி

யான ஸ்வாமிக்கு ப்ரமாணமெங்கிருந்தாலும் அது ஸஹ்ருதயாவமர்ஷ ஸஹமேதவிர வேறில்லை. அப்படிக்கவர் ஸஹ்ருதயாவமர்சம் பண்ணும் விஷயத்தில் தத்ஸம்ப்ரதாயஸ்திதர்கள் ஒருவருக்கும் வருத்தமிருக்க ந்யாயமில்லை. வைஷ்ணவஜந ஸமாஸ்ருத்தினிடம் க்ருபணீய உபாஸநரான நம் ஆசார்யனுக்கு இது நிஸர்க்கஸித்தமென்று பூஜிப்பார்களேதவிர அந்யதா நினைக்கமாட்டார்கள். ஸ்ரீபரகால ஸ்வாமியும் இந்தப் ரகரணத்தில் ஸ்ரீதேசிகன் ஆர்ஜவகுணத்தைக் கூறியிருப்பதைப் பற்றி எவ்வித அபிப்ராயபேதத்தையும் தெரிவிக்கவில்லை. ஸ்வதந்த்ர ஆர்ஜவகுணமே இத்திருவாய்மொழியில் ஆதியோடந்தமாய் பல ப்ரகாரத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதுவே திருவாறாயிரப்படியில் தேர்ந்து நிற்கும் தாத்பர்யமென்றும் ஸூக்ஷ்மமாக ஸாதித்திருக்கிறார். இந்த ஸாரஸ்யத்தை நோக்காமல் திருவாறாயிரப்படி ஸ்ரீஸூக்தியான பிள்ளானிடம் ஈட்டுக்காரர் உபேக்ஷாகர்வமான வசனத்தை ப்ரயோகித்ததை பதினெண்ணாயிரப்படியில் ஆக்ஷேபித்திருக்க. திருவயிற்றெரிச்சலினால் தேசிகனை சபிக்கமாட்டாமல் நம்பிள்ளையை தூஷித்திருப்பதாக ஆராய்ச்சியில் இவர் எழுதியிருப்பது அதிஸாஹஸமான அஸத்யமென்பதே நிஸ்ஸம்சயமாய்த் தேறி நிற்கிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் மற்றோர் விஷயமும் கவனிக்க வேண்டியதாகிறது.

ஈடுக்ரந்தம் தேசிகன்காலத்தில் வெளிவரவில்லை என்றே ஐதிஹ்யம் கூறப்பட்டிருக்கிறபடியால் ஈட்டைப்பார்த்து ஸ்ரீதேசிகன் இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்டிருக்க முடியாது. இதை இவரும் ஆராய்ச்சி 53வது பாராவில் ஒப்புக்கொண்டிருக்கிறார். பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தில் இருப்பதைக் கொண்டு தெரிந்துகொண்டிருக்கலாமென்றால் அதற்குப் பதிலாக தேசிகனுடைய தாத்பர்ய ரத்நாவளியிலிருந்தோ அல்லது நிகமபரிமளத்திலிருந்தோ பெரியவாச்சான்பிள்ளை இதைத் தெரிந்துகொண்டு தன் வ்யாக்யானத்தில் எழுதியிருக்கலாமென்று நாம் சொன்னால் அது உபபன்னதர மென்றே ஏற்படும். ஆராய்ச்சியிலும்

பரித்ராணத்திலும் மற்றுமனேக விடங்களிலும் தேசிகன் ஆழ்வாரின் திவ்யஸூக்திக்கு வ்யாக்யானம் எழுதினுரென்பது சுத்தப் பொய்க்கதையென்று இவர் பறைசாற்றுகிருர். ஆனல் ஸ்ரீதொட்டயாசார்யருடைய ஸம்ஸ்கிருத வைபவப்ரகாசிகையிலும் அதை அனுஸரித்த ப்ராசீனமான மணிப்ரவாள வைபவப்ரகாசிகையிலும் ஸ்ரீதேசிகன் திருவாருயிரப்படிக்கு வ்யாக்யானம் அருளிச் செய்ததாகக் காணப்படுகிறது. இதை தென்ஞசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள் என்பது இவர்கள் குருபரம்பரை புஸ்தகம் (1902 வருடத்தில் சென்னை ஸ்ரீநிகேதனம் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது) 167வது பக்கத்தில் பெரியவாச்சான் பிள்ளை வைபவத்தைப்பற்றி எழுதுகையில் அவரிடம் தேசிகன் சென்றபோது தேசிகன் ஆழ்வார் நாதமுனிகளுக்கு உபதேசித்ததைவிட்டு வேறு வழியாக ஆழ்வார் திவ்யப்ரபந்தத்துக்கு விரிவான வ்யாக்யானம் எழுதியிருப்பது யுக்தமல்லவென்று சொன்னதாகக் கண்டிருப்பதால் வ்யக்தமாகிறது. இதில் கூறப்பட்டுள்ள மற்ற விஷயங்கள் எவ்வாறிருந்தபோதிலும் தேசிகன் ஆழ்வாரின் திவ்யப்ரபந்தத்துக்கு விரிவான வ்யாக்யானம் எழுதியுள்ளாரென்பது எதிரிகைவிடு தீட்டினல் ஸித்திப்பதால் இதையிவர் ஆக்ஷேபிக்கவொண்ணுது. அப்படிக்கிருந்துமிவர் தேசிகன் ஆழ்வாரின் திவ்யப்ரபந்தத்துக்கு வ்யாக்யானம் எழுதினுரென்பதே கட்டுக்கதையென்று பலவாருகப் பரிஹாஸம்செய்வது இவரது விபரீதாக்ரஹத்தையே விளக்குகிறது. ஸ்ரீபாஷ்யத்துக்கு தத்வடீகையென்கிற வ்யாக்யானமும் அதிகரண ஸாராவளியும் ஸாதித்த கணக்கில் திருவாருயிரப்படிக்கு நிகமபரிமளம் என்கிற விஸ்தாரமான வ்யாக்யானமும் தாத்பர்ய ரத்னவளியும் ஸ்வாமி தேசிகன் அவச்யம் ஸாதித்திருக்க வேணுமென்று ஊஹிப்பது யுக்தமேயாகும். திருவாராயிரப்படி ஸம்க்ஷிப்தமாகவும் அதிகம்பீரமாகவுமிருப்பதுபற்றி அது விவரணஸாபேக்ஷமா யிருப்பதால் ஸ்ரீதேசிகன் அதற்கு விரிவான வ்யாக்யானம் எழுதியதாக எல்லா குருபரம்பரை க்ரந்தங்களிலும் காணப்படுவது ஸரியல்லவென்று

சொல்வது சிறிதும் பொருந்தாது. ஆனால் தத்வ டீகையில் ஏகதேசம் தவிர பெரும்பான்மைபாகம் இப்போது கிடைக்காமற்போனதுபோல் நிகமபரிமளம் முழுவதும் இப்போது தென்படாமலிருப்பது பற்றி அது எழுதப்படவேயில்லை யென்று கூற இவர் முன்வர இடங்கொடுத்திருக்கிறது. த்ராவிடவேதங்களுக்கும் ஸ்ரீதேசிகனுடைய வ்யாக்யானமே சரணமாய்விட்டால் தங்களுடைய ஸாம்ராஜ்யத்துக்கு ஹானியேற்படுமென்கிற பயத்தினால் உபாயகௌஶலஜ்ஞர்களான ஸ்வார்த்தியுக்கள் அதை எவ்விதமாகவோ மறைத்ததும் தேசிகஸம்ப்ரதாயஸ்தர்கள் இது விஷயத்தில் ஜாகரூகர்களாக இராமல் உபேக்ஷை செய்ததுமே இவ் வ்யாக்யானரத்னம் அந்தர்தானத்தையடைந்து இப்போதிவர் தோன்றினபடியெல்லாம் உஜ்ஜீவிக்க ஸூக்ஷ்மமாயிற்றென்பது தடஸ்தர்கள் அறியத்தகும். தாத்பர்யரத்னாவளியில் ஒவ்வொரு பாசுரார்த்தத்தையும் ஸங்க்ரஹிக்கும் பதங்கள் ஸ்வாமியின் வ்யாக்யானத்திலுள்ள விஸ்தரத்தின் ஸங்க்ஷேபமாயிருக்கவேணுமென்பது நிச்சயமாய் ஏற்படுகிறது. இவ்விஷயங்களை ஸரியாக விவரிக்க மற்ற வ்யாக்யானங்கள் ஸமர்த்த மல்லவென்பதும் ஸ்பஷ்டம். பெரிய வாச்சான் பிள்ளை முதலியோருடைய வ்யாக்யானங்கள் இவ்விஷயத்தில் அத்யந்தபேதங்களென்பது அவைகளைப் பார்த்தாலே யேற்படும். ஸூசீகடாஹந்யாயமாய் இந்த எட்டாந் திருவாய்மொழிக்கு ஈடு இருபத்தினாலாயிரப்படி இவைகளின் தாத்பர்ய ஸங்க்ரஹமாயிருக்கும் த்ரமிடோபநிஷத் ஸங்கதியிலுள்ள 'ஸ்ரீஸ்வஸ்வாகாரணத்வதயேஷ்வபி ஜகத்ஸ்வாதீநதைவ காரணத்வதயே காரத்வம் । ஸர்வஸ்யாதாரவபி ஹவிஸ்வஸ்ய கர்மாதித்யாவஷ்டம்ப காரணோ ஹேதிரஷ்டமே ॥' என்கிற ச்லோகத்தையும் முன் உதாஹரிக்கப்பட்ட ஸர்வேஷாம் ஶேஷஶேஷ்யௌ இத்யாதியான தாத்பர்ய ரத்னாவளி ஶ்லோகத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால் நாம் சொல்வதின் உண்மை வெளியாகும். ஆழ்வார் திவ்ய ஸூக்தியின் பாவமும் அதை அனுஸரித்த திருவாறாயிரப்படியின் ஆஶயமும் எதில் ஶாஸ்த்ரஜ்ஞர்களுக்கும் அநாத்ரவஸ்வ

ணர்களான ஸாத்த்விகர்களுக்கும் ஹ்ருதயங்கமமாக அனுபவ்யமான ப்ரபந்தத்திலே விஶதீகரிக்கப்பட்டிருக்கிறதென்பது அவதானத்துடன் படிக்கும் அபிஜ்ஞர்களுக்கு நன்கு புலப்படும். இத்திருவாய்மொழியிலுள்ள எந்தப் பாசுரத்திலும் ஜந்துக்களின் அநுவர்த்தநீயத்வம் ப்ரஸ்தாவிக்கப்படவேயில்லை. பகவதேகாந்திகளான மஹாபுருஷர்களே இங்கு ப்ரஸ்தாவிக்கப்படுவதால் அவர்களுக்கு அநுவர்த்தநீயத்வமென்பது அத்யந்தம் அநுகுணமான விஷயம். 'அநுவர்த்த்ய ஸதாம் ஶிக்ஷயாப்யநுவர்த்தநம் கரோதி பகவாந்' என்கிற கணக்கில் அநுவர்த்த்யவான்கள் யாராயிருந்தபோதிலும் சிக்ஷைக்கே இலக்காகப் பொருந்துமே தவிர அவர்கள் சென்றவழியே ஸ்ரீபகவான் பின்சென்று அவர்களை வசப்படுத்துகிறான் என்பது சாஸ்த்ரத்துக்காவது யுக்திக்காவது உபபந்நமாகாததுபற்றி அவ்விதம் வ்யாக்யானம் செய்திருப்பது ஸமஞ்ஜஸமாகமாட்டாது. 'யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்। மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வஶ:' என்கிற கீதாவசனம் பகவதாஜ்ஞாநுவர்த்திகளான மஹாபுருஷர்களைக் குறித்துப் ப்ரவர்த்தித்ததே தவிர ததாஜ்ஞாதிலங்கிகளுக்குச் சிறிதுமது பொருந்தாது. அதிலங்கிகள் விஷயமாக 'ஶ்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே। ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ:॥' 'ஸேதும் விலங்க்ய மர்யாதாம் யே வர்த்தந்தே நராதமா:। க்ஷிபாமி ந க்ஷமாமி ... ஆஜ்ஞாவ்யதிக்ரமகாந்॥' இத்யாதியான ஶாஸ்த்ர ப்ரமாணங்கள் ஸுஸ்பஷ்டமாய் நிற்பதால் 'அஶாஸ்த்ரஸாரம் க்ருத்ஸ்நம்' என்ற கணக்கில் ஶ்ருதிஸ்ம்ருத்யுக்தாநுஷ்டாந விமுகர்கள் பகவானுடைய நிக்ரஹத்துக்கே பாத்ரமாவார்களென்பது நிஸ்ஸம்ஶயமாகையால் இதற்கு விரோதமாக பகவான் தோஷபோக்யனென்றும் பாபாசாரமுடைய ஆஶ்ரிதர்களை அவன் பின்பற்றி வசப்படுத்துகிறானென்றும் இன்னுமிப்புடைகளில் பேசப்படுவதெல்லாம் உத்ஸூத்ரமான அதிவாதங்களேயாகுமென்பதுபற்றி ப்ராமாணிகர்களுக்கு

அவை ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. இத்திருவாய்மொழியில் அது விஷயமுமன்று. மேலும் ‘அகலிலகலும்’ என்கிற பாசுரத்துக்கு விரோதிக்கும். ஆகையால் இவ்விதமான வ்யாக்யானங்களை ஸ்ரீ தேசிகன் பின்பற்றினரென்பது அத்யந்தாஸம்பாவிதமென்பதில ஸந்தேஹமேயில்லை. தவிர தேசிகன் ஸ்தோத்ரபாஷ்யத்தில் ‘த்விஜாதி:’ என்பதற்கு ‘ஸ்ரீதேசிகேநாவதாராய வ்ருத்தீநாம் ஏக ஏவ தயா க்ஷத்ரியோ க்ருஹீத:’ என்றும் ‘ஸ்ரீ தஸ்ய ஜாதிநாமாதி ஸர்வாவஸ்தா நம் வா த்விஜாத்வம்’ என்றும் இருவிதமாக வ்யாக்யானம் செய்தருளி யிருக்கிறார். இவற்றுள் இரண்டாவதுதான் இப் பாசுரத்திற் பொருந்தும். அதுதான் ரத்னாவளியில் விவக்ஷித்தது. அதுவே திருவாறாயிரப்படிக்கு ஒத்தது. இதைவிட்டு இங்கு அஸம்மத மான முதல் அர்த்தத்தைக் கைக்கொண்டவர்களின் க்ஷத்ரிய க்ருத்யம் விஷாதாஸ்பதமே. இவ்விஷயத்தில் தகுவிசேஷம் செய்தால் இவ்விதம் சொல்ல வேண்டி யிருக்குமென்றெண்ணியே இதைப்பற்றி நிராகரணத்தில் ப்ரஸ்தாவம் செய்யவில்லை. அப்படிக் கிருந்தும் இவர் பரித்ராணம் 8ம் பக்கத்தில் நான் இதைப்பற்றி யெழுதாததை ஒர் பெரிய தோஷமாகக் கூறிப் பறைச்சாற்றி யிருப்பதால் தத்வத்தை யதாவஸ்திதமாய் வெளியிட வேண்டிய அவசியம் நேரிட்டதென்பதை அபிநிவேசமில்லாத ஸஹ்ருதயர் கள் அறியவேண்டும். இந்த ஸந்தர்ப்பத்தில் ‘அபிசேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக்’ । இத்யாதிவசனங்கள் பகவதே காந்தியானவன் துராசாரனாயிருக்கவே மாட்டான் என்பதும் அப்படிக்கவன் கதாசித் இருக்க நேர்ந்தபோதிலும் அவனது அவ்யபிசார வ்யவஸாயமான ததேகபஜநவ்யாஸங்கமாக ஜடபரதர், திருமங்கையாழ்வார் முதலியவர்களின் நடவடிக்கைபோல் லோக த்ருஷ்டியால் பார்ப்பவர்களுக்கு அது துராசாரமாகத் தோற்றிய போதிலும் வஸ்துஸ்திதியில் அது அப்படியாகாதென்பதைக் கூறு கின்றனவே தவிர பாகவத வேஷம் போட்டால் எப்படிவேணுமா னாலும் திரிய வடுக்குமென்பதற்கு இவை ப்ரமாணமாகாதென்ப தையும் வற்புறுத்தவேண்டியதவச்யமாகிறது.

இங்கு ஆராய்ச்சியில் ஸ்ரீபரகாலஸ்வாமி தேசிகனை சபிக்க மாட்டாமல் நம்பிள்ளையை நிந்திக்கிறார் என்றிவர் எழுதியிருப்பது உண்மைக்கு விரோதமென்பதை நாம் முன்பே ப்ரதிபாதித்துள்ளோம். ஸ்ரீதேசிகன் 'நிரவத்யோஜ்ஜ்வலதாம்' என்று ஸாதித்திருப்பதையே விவரித்து பதினெண்ணாயிரப்படியில் வ்யாக்யானம் செய்திருப்பதால் தேசிகனை சபிப்பதற்கு யாதொரு ப்ரமேயமுமில்லை. மேலும் நம்பிள்ளையின் பெயரையே பதினெண்ணாயிரப்படியில் குறிக்கவில்லை. 'என்பாருமுண்டு' என்கிற ஈடு வாக்யத்தைமட்டுமெடுத்து அதன் அநுபபத்தியைக் கூறியதாலேயே நம்பிள்ளையை நிந்தித்ததாகச் சொல்வது யுக்தமல்ல. இவரே பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களில் ஏதாவது குற்றங்குறைகளிருந்தால் அதை எடுத்துக் காட்டுவது அவர்களை நிந்திப்பதாகாதென்று பலமுறை சொல்லியிருக்க ஸ்ரீபரகாலஸ்வாமி ஈட்டிலுள்ள அஸாரஸ்யத்தை எடுத்துக்கூறியதை திருவயிற்றெரிச்சலாலேற்பட்ட நம்பிள்ளை நிந்தையாக எப்படிப் பேசுகிறாரோ தெரியவில்லை. ஈடு என்கிற வ்யாக்யானம் நம்பிள்ளை அருளிச்செய்ததாவென்பதே மிகவும் ஸம்ஶயாஸ்பதமான விஷயம். அதைப் பற்றிக் கூறப்படும் ஐதிஹ்யமும் விஶ்வஸநீயமாகத் தோன்றவில்லை. அக்கிரந்தம் வெகுகாலம் ப்ரசாரமில்லாமல் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படும் கதையின் உண்மை விசாரார்ஹமேயாகும். மேலும் ஸ்ரீபராசர பட்டருடைய சிஷ்யரான நஞ்சீயரருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்தபாஷ்யத்தை பார்த்தால் அது ஸ்ரீதேசிகனுக்கு அத்யந்தாபிமதமான க்ரந்தமென்றும் அதையவர் மிகவும் உகந்து அனுஸரித்திருக்கிறாரென்றும் ஏற்படுவதால் நஞ்சீயருடைய சிஷ்யராகிய நம்பிள்ளை ஸ்ரீஸூக்த பாஷ்யத்துக்கும் ததநுஸாரியான ஸ்ரீதேசிகனுடைய நிர்ணயங்களுக்கும் விருத்தமாக வொன்றும் ஸாதித்திருக்க இடமில்லை. இது முதலிய ந்யாயங்களைக்கொண்டு ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யானத்தை அர்வாசீநரான ஒருவர் எழுதி அதற்கு ப்ராமாண்யம் ஏற்படுத்துவதற்காக நம்பிள்ளையிடமிருந்து வந்ததாக

ஒரு ஐதிஹ்யத்தைக் கல்பித்திருக்கக் கூடுமென்று உபேக்ஷிப்பது ஸந்யாயவிதமல்லவென்று தடஸ்யவாஸியுடன் விஷய விமர்சம் செய்பவர்களுக்குப் புலப்படும். ஸ்ரீபரகாலஸ்வாமியும் இவ்வபிப்பிராயத்தைக்கொண்டே ஈட்டிலுள்ள வாக்யத்தை யெடுத்துக்கண்டித்ததோடு நிறுத்திக்கொண்டு அதன்கர்த்தாவைப்பற்றியாதொரு நிர்தேசமும் செய்யவில்லையென்று தோன்றுகிறது. இதுநிற்க, இவ்விஷயத்தில் பதினெண்ணாயிரப்படி வ்யாக்யான கர்த்தாவான ஸ்ரீபரகாலஸ்வாமியைக் குறித்து இவர் அவஜ்ஞா பரிஹாஸாதிவசநப்ரயோகம் செய்தது போதாமல் 63வது பாராவில் ஸ்ரீபரகால மடாதிபதி ஒருவர் தனக்குப் பெரும்பொருளுபபத்தியிருந்தபடியால் வண்டிகளில் நூற்றுக்கணக்கான தேசிக விக்ரஹங்களை ஏற்றிக்கொண்டுபோய் பல திவ்யதேசங்களில் ப்ரதிஷ்டை செய்து வைத்தாரென்றும் ராமானுஜதயாபாத்ரத்தனியன் ப்ரசாரத்துக்கு பெருமுயற்சி செய்த மஹாஸ்வாமி அவரேயாவார் என்றும் இவ்வுண்மை தனக்கு மைஸூர் நகரத்தில் அச்சாய் வந்த ஸ்ரீமத் பரகாலஸ்வாமிவைபவம் என்கிற கன்னட க்ரந்தத்திலிருந்து தெரியவந்ததாகவும் அது உலகத்திற்குத் தெரியவேண்டுமென்று தான் ஆராய்ச்சியில் எழுதியதாகவும் சொல்லியிருக்கிறார். அநேக திவ்ய தேசங்களில் வேதாந்தாசார்யருடைய விக்ரஹப்ரதிஷ்டை நடந்திருக்கிறதே ; இது எப்போது நடந்தது, எப்படி நடந்தது; எதற்காக நடந்தது; என்றிப்படிப்பலரும் பலபடியாக விதர்க்கங்கள் செய்துகொண்டிருந்தார்கள். ஒருவிதமான நிர்ணயமும் நெடுநாளாகவே ஏற்படாமலிருந்தது என்று சொல்லி இந்த ஸந்தேஹ நிர்ணயம் மேற்கண்ட க்ரந்தத்தைப் பார்த்ததில் தனக்கு ஏற்பட்டதாகவும் எழுதியிருக்கிறார். இப்படி ஸவ்யஸ்தமாக இவர் ஆராய்ச்சியில் எழுதியுள்ளதற்கு தேசிக [illegible] ஹப்ரதிஷ்டையைக் குறித்தும் ராமானுஜதயாபாத்ர [illegible] குறித்தும் ஹேளநம் செய்து அந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீ[illegible]தசிகஸ்தா ஶ்ரயர்களான ஸ்ரீபரகாலஸ்வாமிகளையும் [illegible]வ[illegible]த்துத் தன்னுள்ளம் களிக்கவேணுமென்பது தவிர வேறொரு [illegible]ணமுமில்லை

யென்பது ஸ்பஷ்டம். இப்படியிருந்தும் இவர் பரித்ராணம் 8 9 பக்கங்களில் தான் இவ்வாறெழுதுவதால் வதபூர்ோநவாகஸ வாமியின் திருவுள்ளம் விகாரப்பட்டுவிடும். அதனுல் ஏதோ கோட்டை பிடித்து விடலாமென்று பல விடூஸஂஷகர்கள் அந்த ஸ்வாமியிடம் நேரிற்சென்று தர்க்கிப்பதாகவும் பலவாறு லிகிதங்கள் விடுப்பதாகவும் இவர் எழுதியிருக்கிறுர். இதெல்லாம் தன் குஊஷராவராயத்தை மறைப்பதற்காக இவர் கட்டும் ஆகாசக் கோட்டையேதவிரச் சிறிதும் ஸத்யமுமே யிதற்கில்லை யென்பதை யெல்லோரும் அறியவேண்டும். இவரிடத்தில் ஸ்ரீபரகால ஸ்வாமிக்கு வஹூதஃ ஹீதியிருந்தால் அதைக் கெடுப்பதில் யாருக்கும் யாதொரு அக்கரையுமில்லை. இவரோடு இவ்விஷயத்தில் எவருக்கும் எவ்விதமான போட்டியுமில்லை, முன்பே நான் கூறியபடி இவருக்கு பரகாலஸ்வாமி விஷயத்தில் கூுதஜ்ஞதை பாராட்ட வேண்டியது கடமையானது பற்றி அதற்கு மாருக ஆராய்ச்சியில் பரகாலஸ்வாமிகளைப் பழித்திருப்பதால் இவர் அதின் கர்த்தாவாயிருக்கமாட்டாரென்று நிராக்ருதியில் நானெழுதியதற்கு இவர் பரித்ராணத்தில் தானே அதை எழுதியதாக வெளிப்படுத்திக்கொண்டது எவ்வளவு இவரது வைஃஜிகஸ்ஸ ஜத்தைத் தெரிவிக்கிறதென்பது கவனிக்கத்தகும். அதற்குமேல், தான் எது செய்தபோதிலும் பரகாலஸ்வாமியிடம் தனக்குள்ள வாஜ்ஸல்யத்துக்கு எவ்வித ஹானியும் வராதென்று “ஞுளஃ வதெஸ வுஷிவீ ஸீயெபுஸ ஹிவோது ஸுகஃஹவெஸ । வாகாயெதீரூா ணாஂ விகி யெத நஜாதுு ஹுஸ ॥ என்று ஸவயமிட வல்லார் பலருளர்,” என்றும், நிஜஉுவஷொஷஂ நிஉுமெஷ்வி ஈவபு ணைஷஂ ஸமேவபுயதி’ என்கிற ஸூக்தியைப் பரகாலஸ்வாமி நன்கறிவர்’ என்றும் உஜொஷிப்பது நமக்கு விஸ்மயத்தை விளைவிக்கிறது. இப்படியிவர் தன் வாஜ்ஸல்யத்தைப் பற்றிப் பெருமையடிப்பது ஹாஙிஜநங்கள் ஜெஷீணீஸஂவாஉமென்று சொல்லும் வூஹெஷிகெயில்‘ யெந கெநாவி வாநெூந விஷஜெயஂ யயா ஸஂவஂ । ந உநாவி உாஂ ஹதூர உநஸாவி விமஹபுயெஸ ॥

என்கிற ஸூக்தவாக்யத்தை நினைவு மூட்டுகிறது. ஸ்ரீபரகால ஸ்வாமியின் ஸுநிர்மலாசரணமான ஸத்வ்ருத்தத்தையும் ஶாந்தி யுமே இவரிப்படி பேசத்துணிவதற்குக் காரணமாகிறது. ஆனால் ‘ஶ்ரேயாம்ஸ்யநேகாநி தயாதிகாநி ஶக்த்யாநுஷ்டேயானி தத்தே ஸதாம் ஸர்வாந் கர்மண்யேவ ஸம்யக் ஸதாம் வ்ருத்தேஜாநபிஹிதாத்மநாம்’, என்பதையும் இவர் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது அவச்யமேயாகும்.

இத்தோடு ஆராய்ச்சியில் இவரெழுதியவைகளில் முக்யமான விஷயங்களுக்கு நாம் நிராக்ருதியில் கண்டனம் எழுதியதைக் குறித்து இவர் பரித்ராணத்தில் கூறியவற்றுக்கு விஸ்தாரமாக பதில் எழுதியாய் விட்டது. இனியிவர் பரித்ராணம் 45வது பக்கத்தில் நான் ஏதோ ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகையில் ஸர்வஜ்ஞமான ஸதாசார்யஸூக்திகளை பச்சையாக உபேக்ஷித்ததாகவும் அதைத் தான் கண்டித்து சிக்ஷித்ததாகவும் அது ‘ஸாவஶேஷாந்ருதவஶேஷதந்த்ரம்’ என்று பரித்ராணத்துக்கு ஸந்தர்ப்பமாகக் கோர்க்கப்பட்டிருப்பதாகவும் எழுதியிருக்கிறார். இதைச்சற்று விசாரிக்கவேண்டியது இங்கு அவச்யமாயிருக்கிறது. இவர் வர்ணநாஹமாக எடுத்துக்கொண்டது ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகையில் நான் ப்ரசுரம் செய்து வந்த திருப்பாவை வ்யாக்யானத்தில் ஓர்பாகம். இது ஷை பத்ரிகை 4வது ஸம்புடம் 3வது ஸஞ்சிகையில் காணப்படுகிறது. விவாதவிஷய வாக்யாநந்தரம் பின்வருமாறு— ‘பத்து ஆழ்வார்களை இப்பாசுரங்களால் ஆண்டாள் துயிலெழுப்புவதாகப் பாவித்து அது காரணமாகப் பாசுரங்களின் எண்பத்தாக அமைந்ததென்று சில பூர்வவ்யாக்யாதாக்கள் அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் ஆழ்வார்கள் விஷயத்தில் ப்ரபோதனுபேக்ஷகர்களென்பது பொருந்துமோ? பகவதனுபவவிஷயத்தில் அவர்கள் நித்யஜாகரூகர்கள் அல்லவோ? என்கிற சங்கை ஏற்படக் கூடுமாகையால் அதைப் பரிஹரிப்பதற்காக இப்பாசுரங்களுக்கு அந்யாபதேசார்த்தம் ஸ்வாபதேசார்த்தம் என்று இரு விதமாக அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது. இவ்வகையான ஸம்ஜ்ஞா

வசனங்களுடைய ஔசித்யம் சிந்த்யமென்று நினைக்கவேண்டியதாகிறது. ஸ்வாபதேச மென்பது ஸமீசீன வ்யபதேஶமாகத் தோன்றவில்லை. அவிவக்ஷிதமான ஆபாதார்த்தத்தை அந்யாபதேசமென்று வ்யவஹரிப்பதும் விவக்ஷிதமான தத்வார்த்தத்தை வ்யங்க்யார்த்தம் அல்லது லக்ஷ்யார்த்தம் ஸூசிதம் முதலிய பதங்களைக்கொண்டு வ்யவஹரிப்பதும் உசிதமே தவிர, இதை ஒரு அபதேச கோடியில் சேர்த்து ஸ்வாபதேசம் என்பது யுக்தமாகப்படவில்லை. அபதேசபதம் வ்யாஜமாகக் கைக்கொள்ளப்பட்ட அமுக்யத்தைக் குறிக்குமே தவிர தாத்விகமாக எண்ணப்பட்ட முக்யத்தைக் குறிக்காது. ஆகையால் தாத்விகமாக உத்திஷ்டார்த்தத்தை ஸ்வாபதேசம் என்பது ஒவ்வாது. இவ்விடத்தில் வாச்யார்த்தத்தைக் காட்டில் வேறாக ஏதாவது லக்ஷ்யாம்சம் இருப்பதாக ஏற்படும் பக்ஷத்தில் அதை வ்யங்க்யார்த்த மென்றோ த்வந்யர்த்தமென்றோ வ்யஹரிப்பதே உசிதமாகும். இங்கு வ்யங்க்யார்த்தத்துக்கு ப்ரஸக்தி யிருப்பதாகத் தோன்றவில்லை. வாச்யார்த்தமே அத்யாத்ம ஸாராம்சங்களைப் பொதிந்துகொண்டு காந்தாஸம்மிதோபதேசமாக இருக்கிறதென்பது முன்பே ப்ரதிபாதிக்கப்பட்டது. மேலும் இந்தக்ரந்தமே ஆமூலாக்ரம் தத்வஹித புருஷார்த்தங்களை லலிதமாகவும் வ்யக்தமாகவும் ஸுந்தரமாகவும் ஸர்வஜந ஸம்வேத்யமான ப்ரக்ரியையில் விசதீகரணம் செய்வதற்காக ப்ரவ்ருத்தம் என்கிற விஷயமும் ஏற்கனவே விவரிக்கப்பட்டது. ஆகையால் இங்கு வாச்யார்த்தத்தை அடியோடு பரித்யாகம் செய்தோ அல்லது அநாதரம் செய்தோ மற்றொரு வ்யங்க்யார்த்தத்தை கல்பிக்கவேண்டிய அவச்யமிருப்பதாக ஏற்படவில்லை. அப்படிச்செய்வதால் ஶப்தக்லேசம் ஏற்பட்டுக் காவ்யரஸத்துக்கு பங்கம் நேரிடும். இவ்விதம் அப்ரஸக்தார்த்தங்களை கதஞ்சித்கல்பித்தால் இம்மாதிரி நாநாப்ரகாரமான கல்பனங்கள் அவரவர் மனோதர்மாநுஸாரமாய் ஏற்படக் கூடுமாதலால் அநவஸ்தா ப்ரஸங்கம் உண்டாகும். இவை முதலான ஹேதுக்களை உத்தேசித்து அந்யாபதேசம், ஸ்வாபதேசமென்கிற ப்ரக்ரியை இங்கு

அவலம்பிக்கப்படவில்லை. தவிர, முன் வ்யாக்யாநங்களில் இது விஸ்தாரமாய் ப்ரபஞ்சிக்கப்பட்டிருப்பதால் அவைகளையெல்லாம் இங்கு அநுவதிப்பது அநாவச்யகம்'' என்று. இவ்வாக்யங்களைப் பற்றி 'ஸதாசாரவிருத்தோக்திகளைப் பச்சையாக தூஷித்து' என்றிவர் சொல்வது ஸத்யமாவென்பதை முதலில் கவனிக்கவேண்டும். இவரே பரித்ராணம் 6வது பக்கத்திலும் ரஸம் 12வது பக்கத்திலும் இன்னும் பலவிடங்களிலும் பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களில் ஏதாவது ஸூக்ஷ்மவாதமான விஷயங்கள் இருப்பதாகத் தோன்றினால் அதை ஸோபபத்திகமாக வெளியிடுவது நிந்தாகோடியில் சேராதென்று கூறியிருக்கிறார். இக்கணக்கில் நான் என் அபிப்பிராயத்தை முன்வாக்யங்களில் எழுதியிருப்பது இவருக்கு எப்படி பச்சையான தூஷணமாயிற்றென்று தெரியவில்லை. அதில் எனக்கேற்பட்ட ஸம்சயத்தை ஸோபபத்திகமாக வெளியிட்டது தவிர தூஷணம் என்று சொல்லத்தகுந்தது ஒன்றுமிருப்பதாகப் புலப்படவில்லை. இப்படியிருந்துமிவர் அதை பச்சையான ஸதாசாரவிருத்தோக்தி தூஷணம் என்பது 'நிஜகுணவசேஷம் நிர்தோஷவித் வக்ஷ்யேஷ்வபி யஸ்ய' என்றிவரே 9வது பக்கத்தில் அஸ்மாநே உதாஹரித்துள்ள ஸ்ரீதேசிகஸூக்திக்குப் பொருந்திய விஷயமாகிறது. 'வஸ்துதி வமேஷு தோஷா நஸந்தோஷவி ஜநஸ்ஸந்தோவி தைந்ய ம்ருணாநு। விவஸீ தவிஷம் ஸ்வஸ்திந ஊஹிநோ ஸோஹாஜ நவேஷ்யேஷ:॥' என்கிற ஸ்ரீதேசிகஸூக்தியும் இங்கும் மற்றுமிவர் எழுதியுள்ளதிலெங்கும் நன்கு பொருந்துமென்பது இவரெழுதியுள்ளதைப் படிக்கும் ஸஹ்ருதயர்களுக்கு விளங்கும்.

இவர், பரித்ராணத்தின் அநுபந்தமாகச் சேர்த்துள்ள 'ஸ்வாபதேசாந்யாபதேச தத்வம்' என்பதில் 13, 14 பக்கங்களில் நான் அந்யாபதேசாயம் ஸ்வாபதேசாயம் என்கிற ஸம்ஜ்ஞா வசநங்களுடைய ஔசித்யம் விஷயம் என்றெழுதியிருப்பதை அநுவதித்து 'இதனால் அந்யாபதேசம் ஸ்வாபதேசம் என்கிற சப்தஸ்வரூபமே அஸாரமென்கிற இவருடைய நிர்த்தாரணம் வெளிவந்திட்டது' என்று சொல்லிப் பிறகு நான் ஸ்வாபதேசம்

என்கிற ஶப்³த³ம்மட்டில் அஸாத்⁴யமென்று நிரூபித்து அந்யதே³ஶ ஶப்³த³த்தைப்பற்றி ஆக்ஷேபம் சொல்லாததால் ப்ரதிஜ்ஞாதார்த²ஹாநியும் ஏற்பட்டதுபோல் பேசுகிறார். இது நான் எழுதியுள்ளதை நன்குபராமர்சிக்காமல் எவ்வகையிலாவது அதை தூஷிக்கவேணுமென்கிற அபி⁴நிவேஶஸம்ரம்பா⁴திஶயமென்பதையே தெரிவிக்கிறது. அந்யதே³ஶீயமும் ஸ்வதே³ஶீயமும் என்றிவ்விரண்டு ஸஞ்ஜ்ஞாவசநங்களாலேற்படும் விபா⁴க³த்துக்கு திருப்பாவைப் பாசுரங்களில் அவகாஶமில்லாததுபற்றி அவைகளை அப்பாசுரங்கள் விஷயமாக ப்ரயோகித்ததின் பொருத்தம் விளங்கவில்லையென்பதுதான் அவைகளின் ஔசித்யம் வைஶிஷ்ட்யம் என்பதின் தாத்பர்யம். ஔசித்யஶப்³த³த்திலிருந்தே ப்ரகரணௌசித்யமென்பது ஸ்பஷ்டமாயிருக்க இவர் இவ்வாக்யத்தில் அந்யதே³ஶம் ஸ்வதே³ஶம் என்கிற பதங்களின் வ்யுத்பத்தியின் அஸாத்⁴யத்தை நான் விவக்ஷித்ததாகச் சொல்வது வ்யாக்யாநமேயாகும். இதற்குமேல் ஷீ ஸஞ்ஜ்ஞாவசநங்களில் ஸ்வதே³ஶமென்கிற பதத்தைமட்டில் எடுத்து அந்தப் பத³ப்ரயோக³ம் ஸாத்⁴யமா இல்லையாவென்பது மற்றோராக்ஷேபம். இவ்விரண்டு ஆக்ஷேபங்களும் ப்ரத்யேகமாய் உபபாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அந்யதே³ஶம் என்கிற ஶப்³த³த்தின் ஸாத்⁴யத்வத்தையாவது யுக்தமான ஸ்த²லங்களில் அதன் ப்ரயோக³த்தையாவது நான் ஆக்ஷேபிக்காததால் ஏதோ நான் அந்யதே³ஶம் என்பதிருப்பதாகவே ஒப்புக்கொள்ளவில்லையென்று ஆரோபித்துக்கொண்டு அந்யதே³ஶம் உண்டென்பதை ஸ்தாபிப்பதற்காக இவர் 1 முதல் 9 பக்கம் வரையில் எழுதியிருப்பது வ்ருதா² விஸ்தரமேயாகிறது. திருப்பாவையில் அந்யதே³ஶத்துக்கு ப்ரஸக்தியுண்டாவென்பது மட்டில் விவாத³விஷயமேயல்லது உலகத்தில் அந்யதே³ஶமென்கிற வ்யவஹாரமுண்டா இல்லையா வென்பதல்லவென்பது நான் எழுதியுள்ளதிலிருந்தே ஸ்பஷ்டமாவதால் விசாரிக்கவேண்டிய விஷயத்தைக் குறித்துப் பேசாமல் இங்குமங்கும் கவலைபாய்வது அபி⁴ஜ்ஞர்கள் அங்கீகாரம் பண்ணத்தக்கதல்ல.

ஸந்த்யாபதேசமென்கிற பதத்தில் அபதேசசப்தம் வ்யாஜார்த்தகமென்று நான் எழுதியிருக்கிறேன். அதற்கு மறுப்பாக இவர் 'அது வ்யாஜார்த்தக மன்று வ்யபதேசார்த்தகமே அது' என்று அறுதியிடுகிறார். 'வ்யபதேசம் என்பதற்கு குறித்தல் என்று பொருள். 'வி' என்கிற உபஸர்க்கத்தால் அர்த்தபேதம் கிடையாது. ஆகையால் அபதேசமும் வ்யபதேசமும் பர்யாயபதங்கள் என்றிவர் ஸாதிக்கிறார். அபேக்ஷா வ்யபேக்ஷா என்கிற பதங்கள் பர்யாயமாகப் பண்டிதர்கள் ப்ரயோகிப்பதுண்டு' என்றும் இதற்கு உதாஹரணமாகக் கூறுகிறார். இந்த உதாஹரணம் நிரர்த்தகம் என்பது ஸ்பஷ்டம். இவ்விஷயத்தில் ஆக்ருதிः, வ்யாக்ருதிः, ஆதானம், வ்யாதானம், ஆக்யானம், வ்யாக்யானம், உத்பத்திः, வ்யுத்பத்திः, இத்யாதி பதங்கள் இதற்கு ப்ரத்யுதாஹரணமாக நிற்பதை இவருக்குத் தெரிவிக்கிறோம். தவிர, அபதேசசப்தத்துக்கு இவர் கூறும் அர்த்தம் ஸந்த்யாபதேசம் என்பதில் பொருந்தாது. இவ்விஷயத்தில் இவர் செய்யும் நிரூபணத்திலிருந்தே வ்யாஜம் என்று அர்த்தம் கொண்டாலொழிய ப்ரயோஜனமில்லையென்பது தேறிநிற்கிறது. இவர் உதாஹரிக்கும் ஸர்வப்ரஸித்தமான நாமலிங்கானுசாஸனம் முதல் காண்டத்தில் 33வது ச்லோகம் முதல் பாதம் 'வ்யாஜோऽபதேசோ லக்ஷ்யம்' என்றிருக்கிறது. இதன் வ்யாக்யானத்தில் 'த்ரீணி ஸ்வரூபாச்சாதனஸ்ய' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதிலேயே 3வது காண்டத்தில் 216வது ச்லோகம் 'பதே லக்ஷ்யே நிமித்தேऽபதேச: ஸ்யாத்' என்றிருக்கிறது. 'அபதேச: புமாந் லக்ஷ்யே நிமித்தவ்யாஜயோரபி, இதி விச்வः. 'அபதேசஸ்து லக்ஷ்யே ஸ்யாந்நிமித்தவ்யாஜயோரபி இதி வைஜயந்தீ. இந்த நிகண்டுக்களிலிருந்து அபதேசசப்தத்தின் முக்யமான அர்த்தம் ஸ்வரூபாச்சாதனம் அதாவது மறைபொருள் என்று நிச்சயப்படுவதால் நான் கூறின வ்யாஜமென்கிற அர்த்தமே நேரானதென்று ஸித்திக்கிறது. இவர் 10வது பக்கத்தில் முக்யமாக உத்தேசிக்கப்பட்ட பொருளைக்காட்டிலும் வேறான வொரு பொருளைக் குறிப்பது 'ஸந்த்யாபதேச'

மெனப்படுகிறது, என்று சொல்லியிருப்பதும் அவிவக்ஷிதமான ப்ரதாநார்த்தம் என்று நான் கூறியதிலேயே ப்ரகாசிக்கிறது. ஆகையால் 'அந்யாபதேசம்' என்பது பதங்களின் ஸ்வாபாவிகார்த்தத்தை முக்யமாக விவக்ஷிக்காமல் வேறொரு அர்த்தத்தை உத்தேசித்து எழுதப்பட்டுள்ள வாக்யத்துக்குப் பெயர் என்பது உபயஸம்மதம். விவக்ஷிதாத் அந்ய: அபதேச: வ்யாஜ: யஸ்மிந் ஸ: அந்யாபதேச: விவக்ஷிதார்த்தாத் அந்யம் அபதிஶ்ய வ்யாஜீக்ருத்ய ப்ரவ்ருத்த இதி யாவத்। முக்யமாக உத்தேசிக்கப்பட்ட அர்த்தத்தைக் காட்டிலும் வேறொன்றைச் சொல்வதாக வெண்பித்து அதற்கநுகுணமாக ஏற்பட்டுள்ள வசநவ்யக்தியானது அந்யாபதேசமென்று கூறப்படுகிறது. விவக்ஷிதார்த்தத்தை நேராகப் பேசுவதற்கு ஏதாவது ப்ரதிபந்தம் அல்லது அஸாமர்த்யமிருந்து அதுகாரணமாக மற்றொன்றை வ்யாஜீகரித்து வ்யாஜமாக விவக்ஷிதார்த்தத்தை ஸூசிப்பதே இதன் ஸ்வரூபம். சாகுந்தலத்தில் சகுந்தலையும் துஷயந்தனும் தனியாக இருக்கும்போது கௌதமி வருவதைக்கண்டு அநஸூயை 'சக்கவாஅவஹு ஆமந்தேஹி ஸஹஅரம் உவட்டிதா ரஅணீ' என்று ஸங்கேதமாய்ச் சொல்லியிருப்பது இதற்குப் பொருந்திய உதாஹரணமாகக் கொள்ளலாம். இவர் 2வது பக்கத்தில் உதாஹரித்திருக்கும் 'ப்ரபவக்ருதி ஸேதுராஜி ரேத்யாதிஶ்லோகமும் இதற்குயுக்தமான உதாஹரணமே. அதற்கு இவரே விவரமாக அர்த்தம் கூறியிருப்பதால் நானதை இங்கு அனுவதிக்கவேண்டிய அவசியமில்லை. முக்யார்த்தத்தை நேராகத் தெரிவிக்க ஔசித்யமில்லாதது காரணமாக வேறொன்றை வ்யாஜீகரித்து விவக்ஷிதத்தை கூடமாய்ஸூசிப்பதே அந்யாபதேசம் என்பது இவருடைய வாக்யங்களாலேயே ஸித்திக்கிறது. இத்தால் அபதேசசப்தத்துக்கு வ்யாஜம் என்றே அர்த்தங்கொள்ள வேண்டியதவசிய மென்பது ஸ்பஷ்டமாகிறது. அபதேசசப்தத்துக்கு வ்யபதேசசப்தம் போல் கேவலம் 'சொல்' என்பதுபொருள் என்று இவர் கூறுவது, இவர் உதாஹரித்த நிகண்டுக்களில் இல்லை. ஆனால் ந்யாயசாஸ்த்ரத்தில் சிலவிடங்களில் அபதேச

ஷம் ஸம்க்ஷேபாம்ஶத்திலும் உபபாதநாம்ஶத்திலும் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. 'ஹேதுரபதேஶோ லிங்கம் ப்ரமாணம் காரணமித்யநர்த்தாந்தரம்' என்கிற காணாத ஸூத்ரமும், 'ஹேத்வபதேஶாத் ப்ரதிஜ்ஞாயா: புநர்வசநம் நிகமநம்' என்கிற கௌதம ஸூத்ரமும் இதற்கு முறையே ப்ரமாணமாகும். ஆனால் இது அந்த ஶாஸ்த்ரத்தின் பரிபாஷையில் சேர்ந்ததாகும். ஆகையால் ஸாதாரணமாய் கவிகள் 'ரக்ஷாபதேஶாந் முநிஹோமதேநோ:' 'கேநாபதேஶேந ஸக்ருதாஶ்ரமம் ப்ரவிஶாம: தபஸ்விகார்யாபதேஶமாபேத்ய' 'வேதாலஹஸ்ததாலதாலவேதஶ்யவாதம்' இத்யாதிகளிற்போல் அதை வ்யாஜார்த்தத்திலேயே ப்ரயோகிக்கக் காண்கிறோம். இவர் 13வது பக்கத்தில் திருவாராயிரப் படியைத் தனக்கு ஸாயகம்போலெண்ணிக் குறிப்பதால் அதிலும் நாம் சொல்வதே ஸ்திரப்படுத்தப் படுகிறதென்பதை விளக்குவோம். முதல் பத்து 4வது திருவாய்மொழி முதல் பாட்டின் வ்யாக்யானத்தில் பிள்ளான் ஒரு பிராட்டியினுடைய வாக்யாபதேசத்தாலே ஸ்வாபிலஷிதத்தை விண்ணப்பம் செய்கிறார் என்று அருளிச்செய்திருப்பதால் அபதேஶபதத்துக்கு வ்யாஜமென்கிறவர்த்தமே தேறிநிற்கிறது. இவ்வகையிலே அம்மஹான் 2ம் பத்து அவதாரிகையில் அந்யாபதேஶத்தாலே ஸ்வதசையைப் பேசுகிறார் என்கிறவிடத்திலும் இவர் உதாஹரிக்கும் 'கங்குலும் பகலும்' என்கிற பாசுர வ்யாக்யானத்திலும் அபதேஶ பதத்தை வ்யாஜார்த்தகமென்றே திருவுள்ளம் பற்றியிருக்கிறார். இதுமுதலிய பல ஔசித்யங்களை முன்னிட்டு அந்யாபதேஶம் என்கிற பதத்திலுள்ள அபதேஶஶப்தம் வ்யாஜார்த்தகமே யென்பது நிச்சயம். அப்படிக்கல்லாமல் இவர் சொல்கிற விவக்ஷிதார்த்தாந்யஸ்ய கதநம் என்று வைத்துக் கொண்டால் ஒன்றை நினைத்து மற்றொன்றைச் சொல்வது ஶ்லேஷாதிவிஷயங்களிலும் ஏற்படக்கூடுமாகையால் அதிவ்யாப்தியும் வரும். மேலும் அந்யாபதேஶ மென்பது ஓர் ஸந்தர்ப்பத்தில் ஒன்றையுத்தேசித்து மற்றொன்றை மறைவிடமாகக் கூறுவதால் ஶ்ரோதாக்

களின் மனதில் ரஸவிசேஷத்தை யுண்டுபண்ணும். அப்ரஸ்துத ப்ரசம்ஸாரூபமான அலங்கார வகுப்பில் சேர்ந்ததாகையால் வ்யாஜாச்ரயங் கொண்டாலொழிய அது ஸித்திக்காதென்பதை காவ்யஜ்ஞர் ஒருவரும் அந்யத்ராபிநிவேசாத் மறுக்க முன் வாரார். ஸங்கல்ப ஸூர்யோதயம் முதல் அங்கம் 11வது ச்லோகமான கீழ் உதாஹரித்த அபதிச்ய கிமப்யசேஷமந்யத் என்பதில் அபதிச்ய என்பதற்கு வ்யாஜீக்ருத்ய என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருப்பதும் நான் கூறுவதை ஸ்திரப்படுத்துகிறது. இவ்வாறு அந்யாபதேச சப்தத்தில் அபதேசசப்தம் வ்யாஜவாசி மென்று தேறியபிறகு இதற்கு ப்ரதிஸிரஸ்கமாக ப்ரயோகிக்கப் படும். ஸ்வாபதேச மென்பதிலும் அபதேசசப்தம் வ்யாஜவாசியாகவே இருக்கவேண்டுமென்பது ஸ்வரஸ ஸித்தமாகையால் விவக்ஷிதார்த்தத்தை வ்யாஜமாக வைத்துப் பேசும் வாக்யம் என்பது ஸ்வாபதேச வசத்துக்குப் பொருளாவதால் இது எப்படிப்பொருந்துமென்று புலப்படவில்லை.

இப்படிக்கில்லாமல், அந்யாபதேசவசத்தில் அபதேச சப்தம் வ்யாஜார்த்தகமாயிருந்தபோதிலும் ஸ்வாபதேச பதத்தில் அதற்கவ்வர்த்தமே இருக்கவேணுமென்கிற நியமமில்லாததால் இங்கதற்குச் "சொல்வது" என்கிற பொருளை வைத்து ஸ்வஸ்ய அபதேசஃ என்றிவர் சொல்லும் ரீதியில் வ்யுத்பத்தி பண்ணக் கூடுமே என்றால் இதுவும் யுக்தமாகாது. அபதேசசப்தம் வசனத்தைக் குறிப்பதென்று கூறிய பிறகு வசனமிங்கு அதாவது அந்யாபதேச வ்யவஹாரத்தில், ஸ்வவ்யதிரிக்தமான அந்யத்தைக் குறிப்பதால் ஸ்வஸ்ய அபதேசம் என்பது சிறிதும் பொருந்தாது. ஆகையால் அபதேச சப்தத்துக்கு இவர் கூறும் அர்த்தம் அந்யாபதேச பதத்தில் கதஞ்சித் பொருத்தக் கூடியதாயிருந்தாலும் ஸ்வாபதேச பதத்தில் அதை எவ்விதத்திலும் பொருத்த முடியாது. இப்படியிருந்தும் 'உத்தேச்யமான பொருளை உள்ளே வைத்துக்கொண்டு வேறொரு பொருளைக் குறிப்பது அந்யாபதேசம். உத்தேச்யமான பொருள் தன்னையே குறிப்பது ஸ்வாப

தேசம். இங்கு அபதேச மென்பதும் வ்யபதேச மென்பதும் ஸமாநார்த்தம்' என்றிவர் 14 வது பக்கத்தில் பறைசாற்றுவது எவ்விதம் இவர் பக்ஷத்துக்கு ஸாதகமென்று நினைக்கிறாரோ தெரியவில்லை. வாக்யம் உத்தேச்யமான பொருள் தன்னையே குறிப்பதுதான் ஸாதாரணமாய் வழங்கி வருவது. இதற்கு மாறாக உத்தேசித்த பொருளைக் கூறாமல் மற்றொரு பொருளைக் கூறும் வசநத்தை ப்ரயோகஞ்செய்து அதிலுள்ள ஸாத்ருஶ்யவிஶேஷத்தால் உத்தேசித்த பொருளை ஸூசிப்பதைத் தான் அந்யாபதேஶம் என்று சொல்லுகிறோம். உத்தேசித்த பொருளையே குறிக்கும் வாக்யம் ஸ்வாபதேசம் என்றிவர் சொல்வதால் அந்யாபதேஶமில்லாத ஸாதாரண வாக்யமே ஸ்வாபதேஶ ஶப்தவாச்யமாவதுபற்றி அந்யாபதேஶ மென்பதும் ஸ்வாபதேஶமென்பதும் பரஸ்பரவிருத்தமான வசநவ்யக்தியைக் குறிப்பதால் அவைகளுக்கு ஒரே வாக்யத்தில் ஸாமாநாதிகரண்ய மென்பது அஸம்பவ மென்றே தேறுகிறது. இப்படி இவர் கூறியவர்த்தம் இவருக்கே அநர்த்தமாய் முடிவதால் இதையறிந்தோ அல்லது அறியாமலோ அந்யாபதேஶ ஶப்தத்துக்கு இவர் வேறொரு வகையாகவும் பொருளுரைக்கிறார். 15வது பக்கத்தில் இதற்கு லக்ஷ்யம் என்கிற அர்த்தம் கோசங்களில் இருப்பதால் அதைக்கொண்டு நிர்வஹிக்கலாமென்று சொல்லி 'அந்யார்த்தத்தை லக்ஷ்யமாகக் கொண்டது அந்யாபதேசம். ஸ்வமான அர்த்தத்தை லக்ஷ்யமாகக்கொண்டது ஸ்வாபதேசம் என்று தெளியக் குறையென்? பலவழிகளில் ஸங்கதமாகக் கூடிய இச்சொல்லை அஸங்கதமென்று பழித்தது பெரிய ஸாஹஸம்' என்று தீர்மானிக்கிறார். இதையும் சற்றுப் பராமர்சிப்போம். வாச்யாதந்ய: அந்ய: அபதேஶ: லக்ஷ்யம் யஸ்ய ஸ: அந்யாபதேஶ: அதாவது வாச்யார்த்தத்தைக் காட்டிலும் வேறு பொருளைக் குறிப்பது அந்யாபதேஶ மென்பது. இவரும் இதையேதான் சொல்லியிருக்கிறார். இவ்வகையில் ஸ்வாபதேஶ பதத்துக்கு ஸ்வீய: வாச்யார்த்த: அபதேஶ: லக்ஷ்யம் யஸ்ய ஸ: ஸ்வாபதேஶ: என்று விக்ரஹம் செய்யவேண்டியிருப்

பதால் வாச்யநிகாயத்தை லக்ஷ்யமாகவுடைய வாக்யம் ஸ்வாபதேசமென்று தேறுவதால் இதுவும் முன்போலவே இவருடைய உத்தேசத்துக்கு நேர் விரோதமாக முடிகிறது. இப்படியே 'ஸ்வமான அர்த்தத்தை லக்ஷ்யமாகக் கொண்டது' என்று இவரும் சொல்லியிருக்கிறார். இத்தகைய வஸ்துஸ்திதியைப் பராமர்சிக்க விரகில்லாமல் கேவலம் ஶப்தாடம்பரத்தைக்கொண்டு கண்டநம் செய்துவிடலாமென்றெண்ணி நாம் கூறியது 'பெரிய ஸாஹஸம்' என்றிவர் அட்டஹாஸம் செய்கிறார். உண்மையில் முன் பலவிடங்களில் நாம் நிரூபித்ததுபோல் இங்குமிவர் பேச்சைக்கொண்டே இவரது ஸித்தாந்தம் நிர்மூலமாக்கப்பட்டு நிற்பது வித்வான்களுக்குச் செவ்வனே விளங்குமென்பது ப்ரத்யக்ஷமேயாகும்.

11வது பக்கத்தில் 'அந்யாபதேசம் ஸ்வாபதேசம் என்கிற சொற்கள் நேற்று இன்று ஒருவரால் தொடுக்கப்பட்டனவல்ல. ஸ்ரீமந்நாதமுனிகள் காலந்தொடங்கி ஸம்ப்ரதாய பரம்பரையாய் வழங்கிவரும் சொற்களிவை' என்றிவர் பேசுகிறார். அந்யாபதேஶம் என்கிற ஶப்தத்தின் ஸாமர்த்யத்தைப்பற்றி நான் எவ்வித விப்ரதிபத்தியும் பண்ணாமலிருக்க அதைக் கூட்டியே இவர் பேசுவது அப்ரஸ்துதவிஸ்தாரமே தவிர வேறல்ல. ஸ்ரீமந்நாதமுனிகள் காலத்துக்கு முன்பே அநேக ப்ராசீந கவிகள் அந்யாபதேஶ ப்ரபந்தங்கள் இயற்றியுள்ளாரென்பது ப்ரஸித்தமாகையால் அது விஷயத்தில் யாரும் இவரிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டிய தொன்றுமில்லை. ஆனால் ஸ்வாபதேசம் என்கிற வ்யவஹாரம் ஸ்ரீமந்நாதமுனிகள் காலந்தொடங்கி ஸம்ப்ரதாய பரம்பரையில் வழங்கிவருவதாக இவர் சொல்வதின் உண்மையை நாம் ஒப்புக்கொள்ளவில்லை. ஸம்ப்ரதிபந்நர்களான பூர்வாசார்யர்கள் அந்த ஶப்தத்தை எங்கும் ப்ரயோகித்ததாகத் தெரியவில்லை. சில அர்வாசீந வ்யாக்யாதாக்கள் இதை ப்ரயோகித்திருப்பதைக் கொண்டே இந்த ஶப்தம் ஸர்வாசார்யஸம்மதம் என்று சொல்வது யுக்தமல்ல. ஸ்ரீபாஷ்யகாரர், பிள்ளான், பட்டர், தேசிகன் முதலிய மஹான்கள் இப்பதத்தை எங்கும் ப்ரயோகித்ததில்லை.

திருப்பாவைக்குப் பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்திருக்கும் வ்யாக்யானத்திலும் இது காணப்படவில்லை. "இந்தப் பதம் வார்த்திககாரஸூக்தம் போல் கைகூப்பி நிற்க வேண்டியதல்ல, ஶாஸ்த்ரீயமான உபபத்தி பொருந்தியதே' என்றிவர் அறுதியிட்டு முன் கூறியுள்ள வழிகளில் அதை வ்யுத்பத்தி செய்ய முயன்றதின் ப்ரயோஜனத்தை நாம் ஏற்கனவே விசதமாக்கியுள்ளோம். இப்படி அபிப்ராயத்தை ஸாதிக்க முன் வருவதைவிட 'இது சில நவீந வ்யாக்யாதாக்கள் ஏற்படுத்திய 'ஸங்கேதபதம்,' 'தனி ஶ்லோகீ' 'தனி ப்ரணவம்' முதலியவைகளைப்போல் இதையும் சிலர் ஸம்ப்ரதாயத்தில் வழங்கி வருவதால் இதன் வ்யுத்பத்தியைக்குறித்து வ்யாகரண ஶாஸ்த்ரரீதியில் விசாரிக்கப் புகுவது அப்ரஸக்தமான விஷயம்", என்று கூறினால் நாமதைப்பற்றி மேலே ஆக்ஷேபிக்க இடமிராது. மேலும் 'அந்யாபதேஶம்' என்பதில் அபதேஶஶப்தம் வ்யாஜவாசியாயிருந்தபோதிலும் ஸ்வாபதேஶ பதத்தில் அதற்கு உபபாதநம் என்று பொருள்; அப்படிக்கொண்டால் ஸ்வாபதேஶம் என்பது வ்யாக்யேய வாக்யத்தைக்குறிக்காமல் வ்யாக்யாநத்தையே குறிக்கிறது. அதற்கு ஸ்வஸ்ய விவக்ஷிதார்த்தஸ்ய அபதேஶ: உபபாதநம் என்று விவரணம் செய்யவேண்டும்' என்று சொன்னாலும் அபிஜ்ஞர்கள் ஏற்றுக்கொள்ளலாம். இதையெல்லாம் விட்டுத் தன் பக்ஷத்துக்கு நேர்விருத்தமான வழியில் இவர் பிடிவாதமாய்ச் சென்று விபரீதார்த்தத்தை ஸாதிக்க முன்வருவது ஸாபாய ஊஹாஸாஹஸமே தவிர நாம் கூறியதெதுவும் ஸாஹஸவ்யபதேஶார்ஹமல்லவென்பதை நிபுணர்கள் அறிவார்கள்.

இனி இவர் 15வது பக்கத்தில் இதற்குமேல் மற்றொரு மிகப் பெரிய ஸாஹஸம் கேண்மின் என்றாரம்பித்து திருப்பாவையில் வ்யங்க்யார்த்தத்துக்கு ப்ரஸக்தி யிருப்பதாகத் தெரியவில்லையென்று நான் கூறியிருப்பதை கண்டனம் செய்கிறார். இவ்விஷயத்திலும் இப்போது ப்ரஸக்தமான திருப்பாவையின் பாசுரமெதையும் எடுத்து நிரூபிக்காமல் இதரக்ரந்தங்களில் வ்யங்க்யார்த்தமிருப்பதாகவும் பலவிதமாகப் பலவிடங்களில் பலர் விசேஷார்த்தங்கள் கூறி

யுள்ளாரென்றும் அநுஸந்தாநம் செய்திருப்பது ஆசார்ய தத்துக்குச் சிறிதும் உபகரிக்க மாட்டாது. இத்தால் இவர் வஸ்துதத்வம் இன்னதென்றுவது நாம் கூறியுள்ளது இன்னதென்றுவது அறியாமலே வீண்பேச்சை வளர்த்துகிறுரென்பது ஸ்பஷ்டமாகிறது. மஹாகவிகளின் வாக்குகளில் ஶப்தஶக்தியால் ஏற்படும் அர்த்தம் தவிர ஆதீயமாநமாயுள்ள அதிரோஹமான அர்த்தங்கள் எங்கும் கிடையாதென்று நான் அறுதியிட முன்வரவில்லை. என்னுடைய வ்யாக்யானத்திலேயே பலவிடங்களில் மஹாநிதிபோல் அதிகூடமான ஸ்வாபதேசங்கள் திருப்பாவையில் அமைந்துள்ளதை ஆதரித்திருப்பது படிப்பவர்களுக்குப் புலப்படும். ஆனுல் இப்ப்ரபந்தத்தை ஸர்வோபரும் அநுபவ நிஷேதமென்று நிர்ணயித்து வாச்யார்த்தத்தை வர்ஜநம் செய்து அதற்கு ஸம்பந்தமில்லாத அர்த்தாந்தரங்களைக் கல்பிப்பது யுக்தமாவென்பதுதான் ஆக்ஷேபவிஷயம். இப்படிக் கல்பிப்பது அநுசிதமென்றெனக்குத் தோன்றியதால் அதன் ஔசித்யம் விசார்யமென்று நான் கூறினேன். இவரதை வெகுகோபத்துடன் ஆக்ஷேபிப்பதால் இங்கு என் அபிப்ராயத்தை உதாஹரண பூர்வமாக விஶதீகரிக்க வேண்டியதவசியமாகிறது. ஶாஸ்த்ரஸுவும்தொட்டயாசார்யருடைய ஸ்வாபதேஶ வ்யாக்யானம் என்று ப்ரசுரிக்கப் பட்டிருக்கும் திருப்பாவை வ்யாக்யானத்தில் திருவாய்ப்பாடியில் கோபிகைகள் மார்கழி மாஸத்தில் ஆத்ய உஷஸ் ஸமயத்தில் நீராடப் போன ஸ்ரீபாகவத ப்ரஸித்தமான கதையை அடியோடு புறக்கணித்து ஏதோ சில அஸ்வார்த்த ஶாஸ்த்ரஸம்பந்தமான வ்யவஹாரங்கள் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் அவ் வ்யவஹாரங்களுக்கும் பாசுரங்களின் வசநவ்யக்திக்கும் பொருத்தம் புலப்படவில்லை. இவ்விஷயம் நிஷ்பக்ஷபாதமாய்ப் படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். இங்கும் ஸ்வாபதேஶாநுஸாரமான சில அம்சங்களை எடுத்துக் காட்டுகிறேன். 'மார்கழித்திங்கள்' இத்யாதியான முதற்பாட்டில் ஸ்வாபதேச வ்யாக்யானத்தில் 'சிறுமீர்காள் என்றது ஆத்மாவானது ஸ்வரூபத்தாலே பாரதந்த்ரமாயிருத்தலைப்

பற்றியும் உகாரத்திலே அருளிச்செய்த அர்த்தத்தையும் உபபாதிக்கிறாள். அதாவது ஞானத்தால் உத்க்ருஷ்டர்களாகிய பாகவதர்களை யென்றபடி. ஜாதியால் ஒருக்காலும் உயர்வே கிடையாதென்கிறாள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வ்யாக்யானம் எப்படி மூலத்துக்கு ஸம்மத மென்பது ஏற்படவில்லை. 'நேரிழையீர்' என்கிற விசேஷணத்தைக்கைவிட்டு சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்' என்கிற ஸம்போதநத்தில் 'சிறுமீர்காள்' என்பதைமட்டும் எடுத்துக்கொண்டு அதற்கும் எவ்வகையிலும் பொருந்தாத இவ்வகையான பொருளையுரைப்பது உசிதமாகத் தோன்றவில்லை யென்கிற அபிப்பிராயத்தால் அவ்வழியை நான் பின்பற்ற முடியாமற் போன விஷயத்தை மஹிஷமாய் நான் ஸூசித்திருந்தேன். இதைப்பற்றி இவர் எழுதும்போது நானேதோ பூர்வாசார்யர்களைப் பச்சையாய் தூஷித்ததாகவும் ஸம்ப்ரதாய நெறியிற் படியாத வாசகங்களையிட்டு ரஸாபாஸமாக வுரைப்பதாகவும் இன்னும் பலவாறாக நிந்திக்கிறார். இந்த ப்ரகரணத்தில் நானெழுதியவர்த்தம் பின் வருமாறு.—

'நேரிழையீர்' என்பதற்கு நேர்மையுள்ள (அதாவது ருஜுவான) ஆபரணங்களை அணிந்தவர்களே! என்பது பொருள். இத்தால் வெளிப்பார்வைக்குமட்டில் ப்ரகாசமாகவும் உள்ளே துச்சமாகவுமுள்ள டாம்பிகர்களுடைய பூஷணங்கள் போலன்றிக்கே, உள்ளும் புறமும் ஏகரூபமான கட்டியாபரணங்கள் அணிந்துள்ளோரென்று சொன்னதாயிற்று. நேர்மை என்பதற்குச் சிறப்பு என்று பொருள் கொண்டால் விலையுயர்ந்த ஆபரணங்களைப் பூண்டவர்கள் என்று அர்த்தமாகும். ஆபரணங்களைச் சொன்னது வஸ்த்ரங்களுக்கும் உபலக்ஷணமாகும். இது தங்களுக்குப் பரமோத்தேஶமான ஸௌமங்கல்ய ஸித்திக்கு ஹேதுவாகிய வ்ரத விஶேஷமானதுபற்றி, கோபகன்யகைகள் மஹார்ஹமான வஸ்த்ராபரணாதிகளை தரித்துக்கொண்டு ஸ்நாநத்துக்குப் புறப்படுகிறார்கள் என்று த்யோதிதம். ஆயர் சிறுமியருக்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் எவ்வாறு கிடைத்தன வென்பதற்கு 'சீர்மல்

குமாய்ப் பாடிச்செல்வச் சிறுமீர்காள்' என்ற விளியினுல் விடைய ளிக்கப்படுகின்றது. இது 'தத ஆரப்ய நந்தஸ்ய வ்ரஜஸ்ஸர்வஸம்ருத்திமாந் | ஹத்வா கம்ஸம் ஸமாயாதே கோவிந்தே புண்யகர்மணி' என்று ஸாஸ்த்ரத்தாலும், ஜயதி தேऽதிகம் ஜந்மநா வ்ரஜ: | ஸ்ரயத இந்திரா ஸஸ்வதத்ர ஹி' என்கிற கோபிகா கீதையிலும் 'அஹோ ஸ்ரீமத்ஸமாஹாத்ம்யம் கோவாநாம் காநநௌகஸாம்' என்கிற இந்த்ர வாக்யத்திலும் பேசப்பட்டபடி ஸ்ரீக்ருஷ்ணபகவான் எழுந்தருளி யதுமுதல் நந்தவ்ரஜத்தில் ஏற்பட்டுள்ள ஸம்பத் ஸம்ருத்தியைக் காரணமாகவுடையதென்று ஸூசிதமாகிறது. 'சீர்மல்கும்' என்றதால் மேன்மேலும் இடைவிடாது செல்வம் வளர்ந்து வருகிற தென்று ஏற்படுவதால், 'ஸ்ரயத இந்திரா ஸஸ்வதத்ர ஹி' என்பது அனுவதிக்கப்பட்டது. 'செல்வச்சிறுமீர்காள் என்றதால், இக் குமாரிகைகள் விஷயத்தில் பெரியோர்களுக்குள்ள மிகுந்த அன் பும் ஆதரவும் வெளியாகின்றன. இத்தால் கோபவ்ருத்தர்கள் முற் காலத்தில் கோபிகள் க்ருஷ்ண ஸமாகமத்துக்காகச் செய்த ப்ரவ்ரு த்திகளுக்கு உபரோதம் செய்ததுபோலல்லாமல், இப்போது அவர்களே மிக்கப்பரிவுடன் கந்யகைகளை அலங்கரித்து ஸ்நானத் துக்குப்போக அனுப்பினர்கள் என்று ஏற்படுவதால் முன்பு நடந்ததற்கும், இப்போது ஆண்டாள் ஏற்படுத்திய நடைக்குமுள்ள வைலக்ஷண்யம் வ்யக்தமாகிறது. மேலும் 'நேரிழையீர்' என்ப தில் ஔசித்யவாசியான 'நேர்' என்கிற பதத்தால் கந்யகைகள் ஸ்நாநோசிதமான வஸ்த்ராபரணுதிகளை அணிந்துகொண்டிருப்ப தாக ஏற்படுவதால், முன் கோபகந்யகைகள் தம் வஸ்த்ரங்களை அவிழ்த்துக் கரையில்வைத்து நக்நர்களாக ஸ்நாநம் செய்த தர்ம வ்யதிக்ரமம் காரணமாக அவர்கள் பகவானுடைய உபாலம்பத்துக் கும் ஸிக்ஷைக்கும் பாத்ரமானதுபோல் இங்கு கிடையாதென்று த்யோதிதம்," (ந்ருஸிம்ஹப்ரியா 1வது ஸம்புடம் 11வது ஸஞ் சிகை 381, 382 பக்கங்கள்) இதை தடஸ்தபுத்தியுடன் படிக்கும் ஸாரவேதிகள் இவருடைய தூஷணத்துக்கு இங்கு அவகாச முண்டாவென்பதை நிர்ணயிக்கத்தகும். 'புள்ளும் சிலம்பின

காண்' இத்யாதியான ஆறும் பாசுரத்துக்கு ஸ்வாபதேச வ்யாக்யானத்தில் இது பொய்கை யாழ்வார் பாட்டு என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இது எப்படி உபபந்நமென்று நிரூபிக்கப்படவில்லை. எவ்வளவு யோசித்தாலும் இதன் உபபத்தி நமக்குப் புலப்படவில்லை. புள்ளரையன் கோயில் வெள்ளைவிளிசங்கின்பேரரவம்' என்பதுக்கு ப்ரணவத்வநி என்று அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது. அது அந்த ஸந்தர்ப்பத்தில் எப்படி அந்வயிக்கிறதென்று சொல்லப்படவில்லை. ஶங்கநாதத்துக்கு ஸத்ருஶமான ப்ரணவத்வநிஸாத்ருஶ்யத்தையிட்டுப் பேரரவம் என்று உத்கர்ஷம் பேசப்பட்டதென்று சொல்வது வேறு விஷயம். ஆனால் அது ஸ்வாபதேச வ்யவஹாரத்தில் சேராது. அப்படி அவ் வ்யாக்யாதா அபிப்ராயப்படவுமில்லை. இன்னும் அவ்வவ்விடங்களிலும் கூறப்பட்டுள்ள ஸ்வாபதேச வ்யாக்யாநாம்சங்களெல்லாம் மூலத்துக்குப் பொருத்தமில்லாமலும் பூர்வாபரஸந்தர்ப ஸம்பந்த மில்லாமலும் அஸ்வாரஸ்யஸஞ்ஜநகமாகவுமிருப்பது பற்றியே நான் அம்முறையை ஆதரிக்கவில்லை.

மேலும் திருப்பாவைக் கடைப்பாசுரத்தில் ஆண்டாள் தாமே 'கேசவனைத் திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி, அங்கப்பறை கொண்டவாற்றை யணிபுதுவை'— என்று திருவாய்ப்பாடியில் முற்காலத்தில் நடந்த வ்ருத்தாந்தத்தையே தாம் இங்கு ஸங்க்ரஹித்திருப்பதாக கண்டோக்தமாக அருளிச்செய்திருப்பதால் இதை அந்யாபதேசமென்று அடியோடு பரித்யாகம் செய்து அயதார்த்தகல்பநம் செய்வது எப்படி க்ரந்தகர்த்ரியின் ஆஶயத்தை அநுஸரித்ததாகுமென்று தெரியவில்லை. மேலும் இவர்கள் கூறும் ஸ்வாபதேசார்த்தத்தை முக்யார்த்தமாக வைத்தால் திருப்பாவையென்கிற இக் க்ரந்தத்தின் திருநாமத்துக்கே உபபத்தி ஏற்படாமற்போகும். இவ்விஷயத்தில் இன்னும் அநேகம் சொல்லவேண்டியிருந்தும் விஸ்தரபயாத் விரம்யதே'.

இவர் 15, 16வது பக்கங்களில் 'ஏவேந்த்ர ப்ரமுகாஸ்ஸர்வே நநந்து: நக்ஷத்ராயஷ்டிதே' இத்யாதி ஸங்கல்ப ஸூர்யோதய

ச்லோகத்தையெடுத்து இத்தால் ஸ்ரீதேசிகன் ராமாயணத்துக்கு ஸ்வாபதேசார்த்தம் திருவுள்ளம்பற்றியிருப்பதாக அபிப்ராயப் படுகிறார். இந்த ஶ்லோகத்தில் சேதனனுக்கு ஸாக்ஷிகாஹிமவும் கிடைப்பதற்கு ஒரு த்ருஷ்டாந்தமாக ஸீதாதேவிக்கு ஹநூமத்ஸமாகமம் நேர்ந்ததைக் கூறியிருக்க, இத்தால் ராமாயணத்தை அந்யாபதேசமாகவும் அதற்கு ஸ்வாபதேசார்த்தம் இதனால் அருளிச் செய்யப்பட்டதென்றும் சொல்வது மிகவும் அஸங்கதமேயாகும். இவ்வகையில் ஸமஸ்தபுராணங்களையும் இதிஹாஸங்களையும் காவ்யங்களையும் அந்யாபதேசமாக்கி யாதொரு ஸம்பந்தமு மில்லாத அர்த்தங்கள் பலவகைகளில் கல்பிக்க இடமுண்டாகும். இதைப் பற்றித்தான் நான் அநவஸ்தாப்ரஸங்கம் நேருமென்று கூறவேண்டியதாயிற்று. அதையிவர் சிறிதும் ஸம்பந்தமில்லாத தத்வமுக்தாகலாப ஶ்லோகத்தையெடுத்து ஆக்ஷேபிக்கிறார். இங்கு நான் அநவஸ்தாப்ரஸங்க மென்றது அஸம்பந்தப்ரலாப மென்பதில் பர்யவஸிதமாவதால் அது ஸர்வதா வர்ஜநீயமென்பது ஸமஸ்தபுத்திமான்களும் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்க இவரதை மிகப்பரிவுடன் ஆதரித்துப் பேசுவது இவருடைய ஸாராஸாரவிமர்ஶஶூந்யமான மதிவைபரீத்யத்தையே த்ருடப்படுத்துகிறது.

பரித்ராணம் 46 வது பக்கத்தில் எனது வித்வத்வரரும் ஆசார்யவர்யருமான ஸ்ரீஶதாவதாநம் ஸ்வாமியால் அருளிச்செய்யப் பட்ட அதிகம்பீர மநோஹரமான ந்யாயபரிஶுத்திவ்யாக்யைகையைக் குறித்து இவர் நிராலம்பநவ்யாயாமம் செய்து தான் ஏற்கனவே அதைக்கண்டனம் செய்து ஏதோ எழுதியிருப்பதாகவும் அக்கண்டன நூலை நான் திருவாராதனம் செய்துவருவதாகவும் அவ்விதமே இந்தப் பரித்ராணத்தையும் பக்தி ச்ரத்தையுடன் திருவாராதனம் பண்ணும்படிக்கும் என்னை நியமிக்கிறார். பரித்ராணம் எவ்வகையில் ஆராதநார்ஹமென்பதையும் அது என்னால் எப்படி திருவாராதனம் பெற்றுவருகிறதென்பதையும் இதில் ஏற்கனவே தெரிவித்தாய்விட்டது. இனி இவர் ந்யாயபரிஶுத்திவ்யாக்யைகையைப்பற்றி எழுதியிருப்பதாகச் சொல்லும் திட்டுச்சுவடியை

நான் திருவாராதனம் பண்ணும் க்ரமத்தை விவரிக்கிறேன். தத்வா ர்த்தங்களை [illegible] [illegible] [illegible] அஸத்யமுமான ஸாதுநிந்தைக்கு ஸாதநமாக்கியதால் [illegible] [illegible] செய்து ஸந்தோஷமடைகிற ந்யாய[illegible] இப் பரித்ராணக்காரருக்கும், [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அமைந்திருப் பதால் [illegible]மாயிருக்கும் ந்யாய[illegible] [illegible]கையை அருளிச்செய்த ஸ்ரீஸுதாவயா நம் ஸ்வாமிக்கும் [illegible] [illegible] வாசியளவிறந்த தாயிருப்பது [illegible] [illegible]கையையும் அதைப்பற்றி இவர் எழுதிய தூஷணத்தையும் படித்தமாத்ரத்தில் எல்லோருக்கும் ஸ்பஷ்ட மாய் விளங்கும். ஆகையால் இவரது [illegible] '[illegible]' [illegible] மென்று இதுவரையில் உபேக்ஷிக்கப்பட்டது. [illegible]ர்கள் [illegible] [illegible]யுடன் திரஸ்காரம் செய்வதால் [illegible]மடைந்து நஷ் டப்ராயமாயிருக்கும் இவரது தூஷணத்துக்கு நம்போலியவர் கண்டனம் செய்ய ஆரம்பித்தால் [illegible]மாகவதற்கு [illegible] மான வோர் [illegible] ஏற்படுமென்ற சங்கையும் இவ்வுபேக்ஷை க்குக் காரணமாயிருந்தது. இப்போதிவர் நமக்கு [illegible] உண்டுபண்ணவேணுமென்பது தவிற வேறு வ்யாஜமெசமு மல்லாமல் [illegible]மாய் இந்த [illegible] செய்திருப் பதை ஆர்யஜனங்கள் வெறுத்தே தீருவார்கள் என்பதில் ஸந்தே கமில்லை. இவ்விஷயத்தில் இவரது செய்கை 'ந ஹந்தவ்யா: ஸ்த்ரியச்சேதி யத் ப்ரவீஷி ப்லவங்கம । பீடாகரமமித்ராணாம் யத் ஸ்யாத் கர்த்தவ்யமேவ தத் ॥' என்று திருவடிக்குப் பதிலுரைத்த ராவணியின் கொள்கையைப் பின்பற்றியதாகும். நாமோவென் றால் [illegible]ர்களாய் '[illegible] [illegible] [illegible] । [illegible] [illegible]

ஜஹி ராவணிம் ॥' என்று சபதமிட்ட இளையபெருமாளின் அனுஷ்டானத்தைக் கைப்பிடித்தவர்களாகையால் நம்விஷயத்தில் இவருடைய இவ்வகையான சேஷ்டிதங்களனைத்தும் அகிஞ்சித்கரம் இவ்விருவகை அதிகாரிகளுக்குமுள்ள ஸௌ தாரதம்யம் அவதானத்துடன் படிக்கும் புத்திமான்களுக்கு நன்கு விளங்கும்.

ந்யாயபரிசுத்தியின் உபக்ரமத்தில் பரவாக்ய ப்ரமாணமூலமான த்ரிவிதசாஸ்த்ரவிபாகத்தைக் கூறிப் பிறகு ப்ரமாணமென்ற ந்யாயவிஸ்தரத்தின் உபயோகம் ஸோபபத்திகமாய் 'ப்ரமாணம் து ஸத்வசாஸ்த்ரமேவ ஸத்யவஸ்தூனாம் ஸ்வாதீநவ்யவஹாரவிஸம்வாதம் வேதாந்தவாக்யானாம் ப்ராமாண்யம் தத்ஸம்ஸ்த்வஜஸ்யஸம்பாதநயாந்த்யந்தம் சாஸ்த்ரம் ; யஸ்ய ஸம்ஜ்ஞானம் ந்யாயவிஸ்தர: தத்சாஸ்த்ரமிதி ஸூத்ரித தஸ்ய ப்ரமாணப்ரயோஜனமேவ ப்ரமாணமதேः ப்ரமேயஸாரமேவ விவேசனபூர்வகமாநதயா ப்ரமேயமேவ ந்யாயவத்ம் ப்ரவ்ருத்தம்' என்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. அநந்தரம் அக்ஷபாதந்யாயமதங்கள் ப்ரவ்ருத்தித்ததற்கும் பிறகு கணபக்ஷமதங்கள் ப்ரவ்ருத்தித்ததற்கும் காரணங்களைக்கூறி தந்த்ரமாக ஏற்பட்டுள்ள ந்யாயசாஸ்த்ரஸாரணியை வர்ணித்து அதை நம் பூர்வாசார்யர்கள் பரிஷ்காரமாக வெண்ணியதற்குக் காரணத்தைக் குறித்து ப்ரஹ்மஸூத்ராநுஸாரமாக ஸ்ரீநாதமுநிப்ரப்ருதிகளான நம் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த ந்யாயசாஸ்த்ரநிபந்தநங்களைப் பின்பற்றி அவைகளுக்கெல்லாம் மணிமாலைபோல் அமைத்துள்ளது ந்யாயபரிசுத்தி யென்று இந்த ப்ரபந்தத்தின் உபயோகவிசேஷமும் அதின் அவதாரக்ரமமும் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஸ்ரீதேசிகனுடைய மஹிமையை வர்ணிக்கும் ஸந்தர்ப்பத்தில் 'வாதமதேகேஸரீ ....

[illegible]

வாதேந வரவரிஸ்வயூயா வா ஸ்வ்ரதிதி விஜயிதஂ யாஜ்ய
தே । ஙஷ திவஹேஸஷ ஜிவஜஹ்யோநாவிஞ்தஶேஷா ஈவி
ஹ்யாவாய ஞூவாஙா: வரிஶீஜ்யோநாஸ்வஞேவாவாயவரி
தஂ வரோயஞேவாவெதயஞஸ்வஞாதிரிக்தஂ ஞூகாஶஞெ’
என்று தமது ஈநாஹவஸிஜமான நிர்ணயத்தை வெளியிட்டிருக்கிறார். இதற்குமேல் ‘‘ஷோயோவாயஃ ஜஷிஃ கவிராவாய ஐதி
ஞெயாவி வ்யவஸ்திதேஷ கக்ஷ்யாவிஹாஶேஷ வரிஶணீயஃ
வரிஶணிதஸ்வ’ என்றாரம்பித்து ஸ்ரீதேசிகனுடைய ஜஷிகுவளவயி
கமான ஶாணகிரியாதிகளை ஞூதஶநம் பண்ணி பிறகு ‘தஜித
ரீதஶேந்யதவி வாஶ்வயவரிதஂ ஶணநாதீதஸ்ய ஹேஷி ஹேஹி
ோதிஶயஸ்ய வராஂ காஷ்டாஂ விஶநயதி ! ஹேஷயொzவி
ஹி ஞூயெண வரதெஜஸா வரிஹதெ ஸ்வதெஜஸி விரஶ
வஹேவ்யாத்தெஜஸாரஹிஃயாzவி வஹெஞ்யவ வஶ்வாவ்வ தவஃ வரி
க்ஷயெண ஞூணஷ ஸவஸ்வா ஐவ வரிதவ்யஞெ । ஞெநவோவா
யஃ, க்ஷோஸாரஞேவ ஹி வரிதோவாயஸ்ய । தஸ்வாதாவாய
வயஸ்ய ஹேஷிகுவஹோயாரணஂ வஹாோவவவஸீயதெ’
என்று நிரூபணம் செய்து இதன் வாரண ஞூவிஜியையும் உதா
ஹரித்தருளியிருக்கிறார். ஈநதரஂ ஆசார்யனுடைய கவித்வத்
தை வர்ணிக்கவாரம்பித்து ‘‘கவிகுவேவி வாஸ்ய நவரஸநியாந
ஹதிதஂ ஸ்வாயதஶீதிவ்ருதிஶய்யாவாகவ்யதிஷஜ்ஜவரிவவெஜிரே
ரஸாநாஶணரவநாவிஶேஷவாஙார. ஹேஸ்வஶீதவ்ருதிஹாநிஷ்ய
நிரஶஞொவநீத நவநவாயஃ ரேஷாஹரஂ ஞூயஜஃ
வரஶ்ஶதாஃ ஞூவாஙாஃ க்ஷஸ்வோகஸ்வஹதிதாஶ்வதஸ்வ ஸவெ
தஸாஂ ஞூயஞெ । ஶாஸ்த்ரவவாஙவணயநெஷ்வவி கவிகுவஸஂவ
ஶிதஞேவ வாணீத்யஂ ஹேதீஂ ஶோஹாரோவஹதி । யஶா ராரே
க்ருஷ்ணாஜிஹோவாரஷவரிதெஷ ஸ்ருஜ்ஞாராநஶதோ வீர
ரஸோ ரத்யாவ்யோத்ஸ்தாஹாஹியஞ ஸ்யாயிநள ஹாவள ரஸவிதா
ோஶயெஷ ஸரேவெ ஸவேயநு வஹ்ராநஸவஹ்வாரிணஂ
ரஸாஸ்வாதரோதயாதி தயொ்தரொ்தரதகவ்யதிகரஹாஸாரஂ
ஶஹாயரவநாஸெளநயஸஂவஶிதஂ ஞூவாஙாரத்ஜாதஂ ஞூத

ஶ்ருதஞ்ச ஶாஸ்த்ராரம்பே ஸ்வாசார்யஸ்யாபிஜ்ஞஜனஹ்ருதயத்ர-வீகரணக்ஷமந்யாய்யம் சமத்காரமாவஹதீதி ததீய ஶ்ருத்யவாரி-ஶீலனமேவானுபாவயதி'' என்று ஸ்வாநுபவத்தை ரஸவித்துக்-களுக்கு ஹ்ருதயங்கமமாக ஸங்க்ரஹித்தருளினர். பிறகு ஸ்வாமி தேசிகனே ஆசார்யவ்யபதேஶத்துக்குத்தகுந்த விஷயமென்பதை 'ஆசார்யகபதஸ்ய ஸர்வாதிஶயவிஶேஷமேவாஹ்வயதே। ததேச தானீம் ஶ்ரீபாதை:—'ஆசினோதி ஹி ஶாஸ்த்ரார்த்தானாசாரே ஸ்தா-பயத்யபி। ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே।' இதி பகவன்நிருக்தமாசார்யகத்வம்। 'ஸர்வக்ஷரஸாத்ம்யஶாஸ்த்ராணி நிப்ருதமயாஸு' இதி யாஸ்கவசனாதாவினோதீதி வ்யுத்பத்திக்ரஹ-ணம்। தத்ர ஶாஸ்த்ராரம்பணம் நாம ப்ரமாணதாமாப-ரஸ்ய ஶாஸ்த்ரகஸமயிமத்யஸ்யார்யஸ்ய ஶிஷ்யபரீக்ஷணே த்ரு-ஷ்டவ்யம்। தேன ஹி பாணினி காத்யாயன ஜைமினி ஶ்ரௌதமபாத-ராயணாதய: கேவிதேவ ஸ்வநிபந்தாரகா ஆசார்யவ்யபதே-ஶேன வ்யவஹ்ரியந்தே। ததாபி ந்யாயவிஸ்தாரஹியானம-ஶேஷ விஶ்வாஸ்யானாவஜீவ்யமந்யஹிதததம் விஶ்வாஸ்ஸ்ரானம் ஶளத-மாஹிபி: பராநதனைர: க்ருதமேவாக்ஷபமபி [illegible] நவாசார்யபோஜனயா வ்யாவாதப்ரநர்த்தவத்தவ்யா பவநாவத்த வ்யவஹாரதோஷாபோஹேன ப்ரவ்ருத்திஸ்ய தீதிஹாஸஶாரீரக ஶாஸ்த்ராத்யநுஶாஸனே ச ஸம்ஸ்க்ருத்ய ப்ரதஶமயஸஹஸ்ரமா-சார்யபதமநுபவதி। ஸ்வஸ்வபி வபௌரஜ்ஞ்யாதிவ்யாகரணேஷு வேதிகலௌகிகநிவிஶஶப்தஸ்வரூபவாபமஶேஷ ஸம்ப்ரலக்ஷண ப்ரஸ்யானஸ்யாபனாதேவ ஹி பாணினிராசார்யதாம் ப்ராப்த:। ஏவம் தோஷதுஷ்டம் ஸதஸ்வ்யஸ்க்ஷம் தோஷாஶாஸ்ரேண ஸம-ரீக்ருத்ய ந்யாயதஶநம் தஶயந் ஸ்ரீமதேவநாதாசார்ய ஏவ ந்யாயாசார்யஶப்தஸ்ய மூலப்ரமாஜனம் பவதி। பகவானேவ ஹி ஸ்ரீரங்கராஜோ வேதாந்தாசார்யபதாபதேன தாஸ்ஸ்ரீநாசார்ய-பதமக்ரஹீத்। தத்தேவமஸ்ய ஸம்ப்ரதிபந்தமாசார்யகத்வம்।

கதம் ஸ்ரீபாஷ்யகாரமதிக்ருத்ய கதமேவம்ராவீனஸ்ய கவிகதக-ஸிம்ஹஸ்ய ஶோபேதாநாசார்யகவீஶ்வரேணாபி ததிதி ஶங்கா

[illegible]

என்று [illegible]மாயும் [illegible]மாயும் ஸ்தாபித்திருக்கிறார்.
பிறகு ஸ்ரீ[illegible]த்துக்கு [illegible]

காலவசேந ஸம்பவித்த காலுஷ்யத்தைப்போக்கி அதை யதா வஸ்துத்வம் நிரூபீகரணாயும் ஸ்ரீதேசிகாவதாரம் என்பதை ஸகாரணமாக உபபாதநம் செய்து நிரவத்யமான தேசிகஸூக்தம் இவ்வாசார்யன் விஷயத்தில்தான் சரிதார்த்தமென்பதை ஸ்தாபித்து மறுபடி ஸிம்ஹாவலோகிதந்யாயேந ப்ரக்ருத க்ரந்தவிசேஷமாகிற ந்யாயபரிசுத்தியின் ப்ரபாவத்தை 'தேசிகம் ஸர்வஜ்ஞகாருண்யகோஷ்டீஸ்ரீநித்யாவதாரமேவ தாரகாப்ரோக்ஷக்ருதிரியம் ந்யாயபரிசுத்தி: ந்யாயவிஸ்தரஸ்யைவ வித்யாஸ்தாநஸ்ய த்வநுஷ்டாயிநஸ்த்ரிஜ்ஞோ ப்ராஜ்ஞோ லோகஸ்ய காவிஹ்யேயவரிண திரிதி வரிஸீதிகரத்யர நாசேவலந்யாஸாத்யதேஷ்வ வதி வதிஸதேஹஹ்ய । ஸஸ்தகஜ்ஞஸத்ஜ்ஞ ஹாரவணீதேஷ நிப நியஷ்ஷ கூவிநவி ஸஞிவ்யமேநவிவ்யாஸாலஸயொ ரோதுபாஜவி ந ஸம்ஸாவ்யதே । யேந ஸஸ்தாதிஸிதேவ்யகம்வ்யூதேதேஷாம் வ்யரோணம், ஸா வேஷா ந்யாயபரிசுத்திருதாதிவிஹித ரேவாரோத்ருதஹீதாவவஸ்ய ஸவேதாவஜீவ்யஸ்ய ந்யாயவி ஸ்தரஸ்ய வித்யாஸ்தாநஸ்ய ஸகலதோஷரஜ:பரிமோஜநதக்ஷிண தாஸிநவாரிவா வ்யத்யஜ்ஞஸம்ஸாரோரவவாதநவ்யஹாணீக்ருத ஸஞஹாஹ்யா ச காஷிவாவயவிரவிதா ஸேதிநிவாஹாதி:" ஊத்யாதியால் ஸதிஸம்ஷீரமாய் வ்யதஸித்தருளினர். இவ்வாறு ஸர்வஸாஸ்த்ரவைஸாரத்யஜ்ஞமாய் ஸாபாஸா வாணன் தண்டி முதலான ப்ரஸித்தகவிகள் ஸஹிதநம் பண்ணும்படியான ஸதிவைஸதவைலக்ஷீயிலமைந்துள்ள இந்த ஸ்ரீகையில் ஸ்ரீதேசிகனுடைய நிரதிசயமான வைஸவம் ஸகலவித்ஜநநோஹா ரியான ஸரணியில் ஸவிஸ்தரமாக ப்ரகாசப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு இவர் ஸதிரோத்ராஸஹ்யாவிஷ்டராய் இங்குள்ள ஸவேதாத்தமான ஸாஸ்த்ரார்த்தவிவாதநவைவரீயிலும் காவ்யஸ்ரீயிலும் கண்ணைச் செலுத்த விரகற்றவராய் ஸயோரயவ்ய ஸாரணஸீலவத்தான தனது சக்திக்கநுகுணமாகச் சிற்சில சில்லரை விஷயங்களை யெடுத்துக்கொண்டு பாதுகாஸஹஸ்ரம் வாதிகேஸரியின் போட்டியினுல் அவதரித்ததல்ல, கிருஷ்ணமிச்ரனேடு

வாதமே நடக்கவில்லை, ப்ரபோதசந்த்ரோதயகர்த்தா கிருஷ்ண மிச்ரனல்லவென்றிவ்வாறு சில பொய்க்கதைகளைக்கட்டி அவை தான் யதார்த்தம் போலும் அதற்கு விரோதமாயுள்ள ப்ராசீந வ்ருத்தாந்தங்களெல்லாம் தவறென்றும் பறைசாற்றித் தனக்கு ஸ்வாபாவிகமான ஸ்வாபிப்ராயங்களைக்கூட்டி ந்யாயஸித்தாஞ்ஜன ஸித்தாந்ததூஷணபூர்வகமாக வெளியிட்டிருப்பது விபரீத வாஸநாரூடத்வமே யென்பது விசக்ஷணர்களுக்கு ஸ்பஷ்டமாய் விளங்கும். பாண்டவர்களுடைய ஸாத்விகஸம்பத்ஸம்ருத்தியைப் பார்த்து அஸூயையைகொண்ட ஸுயோதநனுக்கு மயநிர்மிதமான ஸபாமண்டபத்தில் எல்லாம் விபரீதமாய்க் கண்ணுக்குப் புலப்பட்டதுபோல் அநிதரஸாதாரணமான ஸ்ரீதேசிகனது மஹிமையை யதாவத்தாய் ரஸஸாகரஸ்வரூபமான யாதவாப்யுதய மஹாகாவ்யஸரணியில் ஸித்தாந்தநிஷ்டனாகிய மஹாநுபாவன் அத்ருஷ்டபூர்வமாய் வர்ணித்திருப்பதைக் கண்டு இவருக்கேற்பட்ட மனக்கொதிப்பினுலுண்டான புத்திவைபரீத்யமே இவ்வாறிவர் கண்டபடி பேசியதற்குக் காரணமென்பது நிஸ்ஸம்சயம்.

மற்றுமொரு விஷயம் இங்கு சொல்லவேண்டியதாகிறது. மனுஷ்யஸ்வபாவம் பல வகைப்பட்டது. 'டிக்வின்ஸி'(De-Quincey) என்ற ஓர் ஆங்கிலக்ரந்தகர்த்தா 'கொலையில் சில்பம்' Murder as a fine Art என்று ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அதில் சிலமனிதர்கள் மற்றவர்களைப் போல் பணத்தாசையாலாவது த்வேஷத்தினலாவது ப்ரேரிக்கப்படாமல் தங்களுக்கு ஸ்வாபாவிகமான ருசியினல் இதர மனிதர்களைக் கொலைசெய்வதில் ப்ரவ்ருத்திப்பதாகவும், அப்படி யவர்கள் ப்ரவ்ருத்திக்கும்போது அத்புதரஸாஸ்வாதமும் ஸௌந்தர்யஸாரமும் எங்கு நன்கு பொருந்தியிருக்குமோ அவ்வித வ்யக்திவிசேஷத்தை அடங்காத ஆவலுடன் தங்கள் விசஸநவ்யாபாரத்துக்கு இலக்காக்குகிறார்களென்றும் ஸோபபத்திகமாயும் த்ருஷ்டாந்தபூர்வகமாகவும் உபபாதநம் செய்திருக்கிறார். ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்று ஜகத்ப்ரஸித்தரான ஓர் ஆங்கிலக் கவிவர்யர் தான் எழுதி

யுள்ள 'ல்யூக்ரீஸின் கற்பழித்தல்' (Rape of Lucrece) என்கிற காவ்யத்தில் ஒரு பெண்மணியின் அஸாதாரணமான பாதிவ்ரத்யத்தின் சிறப்பை எல்லோரும் புகழ்வதைக் கேட்டவளவில் ஒரு யௌவனன் எப்படியாவது அப்பதிவ்ரதையின் கற்பை யழிக்க வேண்டுமென்று ஆவல்கொண்டு துஷ்டகுணமாக ப்ரவ்ருத்தித்ததாக வர்ணித்திருக்கிறார். ஸீதாதேவியின் குணங்களையும் ரூபலாவண்யங்களையும் ஶூர்ப்பணகாமுகேந கேட்டவுடன் ராவணனுக்கு ஏற்பட்ட மநோவிக்ருதியும் துஷ்டாசரணமான வ்யாபாரமும் இவ்வகுப்பில் சேர்ந்ததாகும். இம்மாதிரியில் சிலர் ஸர்வப்ரசாரத்திலும் உத்கர்ஷமும் பொருந்திய நிரவத்யமான க்ரந்தங்களைப் பார்த்தவாறே அவைகளையும் தத்கர்த்தாக்களான மஹான்களையும் அதிநீசமான நடையில் நிந்தித்தாலொழிய ப்ராமாணிகர்களாய் அதிஸம்ப்ரமத்துடன் வ்யாவரிப்பதைக் காண்கிறோம். இவ்வதிகாரிகோஷ்டியில் இப்பரித்ராணக்காரர் ஸர்வஜ்ஞாபஹ்ருதி என்கிற விஷயம் இவரெழுதியுள்ள எல்லா நூல்களிலும் செவ்வனே ப்ரகாசிப்பது அவைகளைப் படித்தமாத்திரத்தில் நன்கு விளங்கும்.

இத்துடன் இவர் பரித்ராணத்தில் ப்ரஸ்தாவித்துள்ள விஷயங்களுக்குப் பதிலுரைத்தல் முடிவு பெற்றது. இங்குள்ள பல முக்யமான அம்சங்கள் ஏற்கனவே நம்மால் நிராக்ருதியில் சுருங்கக் குறிக்கப்பட்டிருந்தும் அத்தால் இவர் ஸாதகாஜ்ஞராகாமல் பரித்ராணத்தில் மறுபடியும் தன் ஆக்ஷேபங்களைக் கிளப்பியதால் இவ்விதம் ஹேதுதூஷணபூர்வகமாய் விஸ்தாரமாக எழுத நேர்ந்தது. இவரால் ப்ரஸ்தாவம் செய்யப்பட்ட ஆக்ஷேபங்களுக்கெல்லாம் ஸுஸங்கதமான ஸமாதானங்கள் இதில் ஸாபூதிஷ்டமாயிருப்பது க்ஷோதக்ஷமமிதை ஸாவதாநத்துடன் படிக்கும் ப்ராமாணிகர்களுக்கு ஸ்பஷ்டமாகும். இவரும் தார்ஷ்ட்யத்தைக் கைக்கொண்டு தன் ஜ்ஞாதாவுக்குப் புலப்படுவதை வெளியிடுவதாயிருந்தால் நாமிங்கு ப்ரதர்சித்திருக்கும் ஸமாதானங்களை ஸஹஸ்ராவர்த்தம் பண்ணியே தீரவேண்டும். ஆனால் இவர் எழுதும்

விதத்தைப் பார்த்தால் கேவலம் அஸப்ய ப்ரலாபமான ஆவேஷமே ப்ரகோபஹேதுவாகத் தெரிவதால் இவரிவ்விதம் செய்வாரென்று எதிர்பார்ப்பது வ்யர்த்தமேயாகும். ப்ரத்யுத இதற்கு மறுப்பாக முன்னைவிடப் பலமடங்கு அதிகமான நிந்தாவசனங்களை நிரப்பி ஏதாவது எழுத முன்வராமலிருக்கமாட்டாரென்பது நிச்சயம். ஆனால் அதைப்பற்றி 'ஸத்யமேவ ஜயதி' என்கிற உபநிஷத்வாக்யம் ஸத்யமென்கிற நம்பிக்கையுடைய நமக்கு எவ்விதக் கவலையும் கிடையாது. நாம் எழுதியுள்ள விஷயங்களில் உண்மையாக சாஸ்த்ரவிரோதம் ஏதாவதிருந்தால் அதையெடுத்துக் காண்பிக்கும் பக்ஷத்தில் க்ருதஜ்ஞதாபாவத்துடன் நம் தவறுதலை ஒப்புக்கொள்ள ஸந்நத்தமாயிருக்கிறோம். அதேமாதிரி யிவரும் நடந்துகொள்ளவேண்டியது ப்ராமாணிகமுறையாகுமென்பது நாம் சொல்லாமலே தெரியும். இப்போது விவாதத்திலுள்ள விஷயங்களைப் பற்றி இவரெழுதியுள்ளதும் நானெழுதியுள்ளதும் எவ்வகைத்தென்று தடஸ்த்தபாவமுள்ள கற்றோர்களே சீர்தூக்கி நிர்ணயிக்கவேணுமென்றும் ஸாராஸார விவேகிகளான அபிஜ்ஞர்கள் நிஷ்பக்ஷபாதமாய்ச் செய்யும் நிர்ணயம் ஸாத்யமே தவிர வசைச்சொற்களின் விந்யாஸஸரணியைக் கண்டு கைகொட்டும் அஸப்யர்களின் அபிநந்தனம் அநர்த்தமென்றும் இவர் எண்ணினால் பாஷாவிஷயத்தை ஸத்யாவேத நிவேதனமாகாமல் தகுந்த வித்வான்களின் ஸதஸ் ஒன்றைக் கூட்டி அவர்கள் முன்பாக இவ்விரண்டு பக்ஷங்களையும் யதாவத்தாய் விஜ்ஞாபநம் செய்து அவர்களுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்கும்படி ப்ரார்த்திப்பதே யுக்தமாகும். இவ்விஷயத்தில் நம்மாலாகவேண்டியதையெல்லாம் நாம் செய்ய ஸந்நத்தமாயிருக்கிறோம். மேலும் இவர், தான் எழுதுவதனைத்தையும் தன் பத்திரிகைவாயிலாக வெளியிடுவதுபோல் நம்முடைய மறுப்புக்களையும் அப்பத்திரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டியது கடமையாயிருந்தும் இதற்குமுன் நிராக்ருதியை அவ்விதம் ப்ரசுரம் செய்யும்படி நாம் கேட்டும் இவர் மறுதளித்தது எவ்வாறு யுக்தமாகுமோ தெரிய

வில்லை. இப்போதாவது அவ்விதம் செய்யாமல் இவ்வநுபந்தத்தை இவர் பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்பதைத் தெரிவிக்கிறோம். அப்படிச் செய்யாமற்போனால் தன் பத்ரிகைகளைப் படிப்பவர்களுக்குத் தன்னுடைய பூர்வபக்ஷத்தைமட்டில் தெரிவித்து நாமெழுதியுள்ள ஸமாதானத்தைத் தெரிவிக்காமலிருப்பது பத்ரிகாசிரியர் கடமைக்கு விருத்தமான வஞ்சனையேயாகுமென்பதையும் அறிவிக்கிறோம். இதற்குமேல் இவர் ஏதாவது விஷயங்கள் ஶாஸ்த்ரீயமுறையைத் தழுவி யெழுதுவதாயிருந்தால் நமக்கு ஸந்தோஷமே. அப்படிக்கின்றி வழக்கம்போல் வசைச்சொற்களை ப்ரயோகம் செய்து, விஷயத்தில் யாதொரு ஆதாரமுமில்லாமல் கேவலம் ஶப்தஜயகோஷம் முதலிய ஆடம்பரத்தைக்கொண்டே ப்ரஸித்திபெறவேண்டினால் அதைப்பற்றி ஏற்கனவே நாம் சொல்லியபடி நமக்கு எவ்விதக் கவலையுமில்லை. அன்றிக்கே இவரது நிஜஸ்வரூபம் இவராலேயே விஶதமாக மறுபடியும் உலகமறிய வெளியிடப்படுவதால் நமக்கு உபேக்ஷையே தேறிநிற்கும். ஆகையால் அவ்வித வெளியீடுகளுக்குப் பதிலளிக்கவேண்டிய பொறுப்பு நமக்குக் கிடையாது. ஸ்ரீபகவத்ராமானுஜ ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஸாம்ப்ரதாயிகவிஷயங்களைக் குறித்து எழுதும்போது நிந்தாவசநங்களை ப்ரயோகிப்பது உசிதமல்லவென்றும் அது நம் ஸம்ப்ரதாயத்துக்கே குறைவைத் தருகிறதென்றும் அநேக மஹநீயர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். அவ்வபிப்ராயத்தை நாம் ஶிரஸா ஸ்வீகாரம் செய்கிறோம். இதைக் கொண்டே நாம் 'விஶாவாநாம் விஶாவஹாஷயெவ ஹிதிவக்தவ்யம்' என்று பலர் அபிப்ராயப்பட்டதற்கு இசையாமல் இவர் சொன்ன விஷயங்களுக்கு அவசியமானவளவு பதிலுரைத்து அவைஅஸத்யமென்று விளக்குவதோடு நிறுத்திக்கொண்டிருப்பது எல்லோரும் அறியத்தகும். விஷயத்தை உள்ளபடி ப்ரமாணபுரஸ்ஸரமாய் ஸந்நிவேஶமில்லாமல் ப்ரதிவாதநம் பண்ணுவதே ப்ராமாண்யகார்த்யமாகும். அப்படிக்கில்லாமல் துராக்ரஹாவிஷ்கரணம் செய்வது எழுதப்படும் விஷயத்தின் மதிப்பை மிகக்குறைவு படுத்துவதால் உத்தேஶ்யஹாநி ஏற்

படுகிறதென்பதை புத்திமான்கள் அறியவேண்டும். இதை மறந்து ஸத்யாஸத்யவிவேகமின்றித் தம் தம் பக்ஷத்தையே பிடிவாதமாய் ஸாதிக்கவேணுமென்கிற ஸங்கல்பத்துடன் பத்ரிகைகள் எழுதுவதால் 'ஶேஷம் கோபேந பூரயேத்' என்கிறபடி பரஸ்பராக்ஷேபாதி ப்ரத்யவாயங்களுக்கு இடமுண்டாகிறது. இப்படிப்பட்ட துராக்ரஹங்களைத் தூர விலக்கி தத்வத்தை இயன்றவளவு தெரிவிக்க வேணுமென்கிற எண்ணத்தையே மேற்கொண்டு விஷயத்தை ந்யாயநிரூபணபூர்வமாய் ஸாத்விகமான முறையில் வெளியிடும்பக்ஷத்தில் எவ்வித வைமநஸ்யத்துக்காவது வீண் சச்சரவுக்காவது சிறிதும் இடமிராமல் தத்வம் நிராபாதமாய் ப்ரகாசிக்கும். இதை யெல்லோரும் நன்கு உணர்ந்து தத்வாந்வேஷணமாக ஸேவிப்பதுதான் ஸ்வப்ரயோஜநக்ருத்யமென்று விநயத்துடன் விஜ்ஞாபிப்பது இங்கு ப்ரஸ்துதாவஸரம்.

அநாதிதஃ ப்ரவ்ருத்தமான ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்திற்கு அநந்யஸாதாரணமாயமைந்துள்ள ஏற்றம் அப்பரம்பரையில் திவ்யமணிதீபங்கள்போல் ப்ரகாசிக்கும் ஆசார்யஶ்ரேஷ்டர்கள் தபோதநருஷிகளாய் ஸ்வயமாசார்யாவதாரவிஶேஷவைபவதேஶிகர்களாய் லோகாநுக்ரஹைகவ்ருத்திகளாய் உபதேசத்தாலும் அநுஷ்டாநத்தாலும் க்ரந்தங்களாலும் லோகத்துக்குப் பரமோபகாரம் செய்தருளியிருக்கிறார்கள் என்பதே. இவ்வாசார்யர்களில் ஸ்ரீநாதமுநிகள், ஸ்ரீஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் இவர்கள் ப்ரதாநமாய் கணநம் செய்யத்தக்கவர்கள். முக்யமான ஶாஸ்த்ரார்த்தங்களில் இவ்வாசார்யர்களுக்குள் வைமத்யம் இல்லையென்பது இவர்களுடைய திவ்யஸூக்திகளை நன்கு பரிசீலநம் செய்பவர்களுக்கு ஸுஸ்பஷ்டமாய் விளங்கும். வஸ்துஸ்திதி இவ்வாறிருக்கச் சிலர் இவ்விஷயத்தில் விப்ரதிபத்தி செய்வது இவ்வாசார்யர்களின் ஆஶயங்களை யதாவத்தாகத் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய ப்ரயத்நத்தின் மாந்த்யத்தையே வெளியிடுகிறது. இவ்வாசார்யர்களுக்குள் ஸ்ரீவேதாந்த தேசிகன் மஹர்ஷிகளுள் ஸ்ரீவேதவ்யாஸர் போல் ஸர்வதந்த்ரஸ்வ

களுக்கு நாநாரூபமாகத் தோன்றும் பூர்வாசார்யர்களின் ஸூக்திவாதநபூஷணாதிகளை ஸங்க்ரஹப்படுத்தி அவைகளில் ப்ரதிபாதிதமாயுள்ள தத்வார்த்தங்களை வ்யக்தமாக்கி ஸர்வோபஜீவ்யம் ஸர்வோத்தமமான ஸ்ரீமத்ராமாநுஜஸித்தாந்தமொன்றே ஸத்ஸம்ப்ரதாயமென்றும் அதற்கு பாஹ்யமாகவாவது குதர்க்கமாகவாவது ந்யாயலேசம் ஸம்பவிக்க இடமில்லை யென்றும் ஸாமர்த்யாதிசய ப்ரதிஷ்டாபநம் செய்தருளியிருக்கிறார். இம்மஹோபகாரத்துக்குத் தக்க கைமாறு செய்ய ஸ்ரீயப்பதியாலும் ஸாத்யமில்லை யென்பதை ஸத்யம்ஸத்யம் புநஸ்ஸத்யமென்று நிராக்ஷேபமாய் அறுதியிடலாம். வேதவ்யாஸப்ரணீதமான ப்ரஹ்மஸூத்ரங்கள் எப்படி வேதாந்தார்த்தநிர்ணயவிஷயத்தில் பரமப்ரமாணமோ அப்படியே ப்ரஹ்மஸூத்ரார்த்தநிர்ணயத்தில் ஸ்ரீவேதாந்ததேசிகதிவ்யஸூக்திகள் பரமப்ரமாணமென்பது தத்வஜிஜ்ஞாஸுக்கள் முற்பட அறிந்துகொள்ளவேண்டியதவச்யம். இதன் யாதார்த்த்யம் தமேவ ஸூக்ஷ்மேக்ஷியுடன் ஸூக்ஷ்மபரிசீலநம் செய்யும்புத்திமான்களுக்கு நன்கு புலப்படும். ஸ்ரீவேதாசார்யஸூரி என்று ப்ரஸித்தி பெற்ற மஹான் இதை யுத்தேசித்தே ஸ்ரீதேசிகனை 'ப்ரமாணம் பாஷ்யஸ்ய' என்று தனது ந்யாயஸுதர்சனத்தில் கூறியுள்ளார். எப்படி ஒரு விஷயத்தை அதற்கனுகுணமான இந்த்ரியாதிகளைக்கொண்டே க்ரஹிக்க வேண்டியதவசியமோ, அப்படியே ஸ்ரீபாஷ்யத்தை ஸரியாக அறியவேண்டுமானல் ஸ்ரீதேசிகஸூக்திகள் த்வாரமாகவே அறிய வேண்டும் என்பது இதன் பொருள். இதன் உண்மையை அவரவர் அநுபவத்தில் அறிந்துகொள்ளலாம். ஆகையால் ஸ்ருத்யந்தாதி வாஸநா பூர்வாசார்யாபிநிவேசராக, ஸ்ரீதேசிகஸூக்திகளே தத்வஜிஜ்ஞாஸுக்களுக்கு ஸர்வார்த்தநா சரணம் என்பது ஸித்தம்.

ஜயதி நிகமசூடாதேசிகேந்த்ரோ தயாளு:
ஜயதி ஸகலமதஸ்தஸூக்திஸ்தாகணா வ: ।
ஜயதி நிரவத்யஸ்தம் பூர்வாசார்யோபநிஷத்யா
ஜயதி ஜநநாயாகீ தாஸவர்க: க்ருதார்த்த: ॥
கவிதார்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம: ॥

T. E. 25 C. 100 27-9-46 ஸ்ரீநிவாஸ பிரஸ், திருவையாறு.